ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயஹு ஆவணிமீ 10—9—54 [இதழ் 10

ஆவணிமூலத்திருநாள் - மூன்றுவதுநாட் பேரவையில்

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கல்

தலைவர்: கனம் ஸ்ரீ C. சுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள்

பேச்சாளர்: 'செந்தமிழ்ச் செல்வர்'
வித்துவான் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு

செந்தமிழ்ச் செல்வர்

திரு. கி. வா. ஜகந்நாதன் M. A. அவர்கள் கூறிய

வாழ்த்துரை

சிவநெறியை உலகமெலாம் தழைக்கும்வணம்
செய்தருளும் சீர்த்த ஞானி
தவஅரசன் குருஞான சம்பந்தன் வழிவந்து
தருமை யின்கண்
பவமகல வழிகாட்டும் குருமணியாய்
ஐயைந்தாம் பட்டம் ஏற்று
நவநவமாத் தொண்டுசெய்சுப் பிரமணிய
தேசிகப்பேர் நயந்தோன் காண்க.

செந்தமிழ்நாட் டினிற்கலைகள் தெய்வவுணர்
வோடிலங்கிச் சிறப்புற் றோங்க
முந்தையவர் பலசெயல்கள் புரிந்தனர் அம்
மரபுநெறி முன்னி யின்றும்
அந்தமுறை யினிலரிய தொண்டுகளைப்
புரிந்தருளும் அரிய கோயில்
நந்தலில்லாப் புகழ்படைத்த தருமையா
தீனமெனல் ஞாலம் பேசும்.

பாவணிந்த புகழுடைய நீஅருள்செந்
தமிழ்ச்செல்வப் பட்டம் பெற்றேன்
நாவணிந்த தமிழ்த்தொண்டின் பயனையெல்லோர்க்
குமெய்தநக நல்கி இன்று
தேவணிந்த புகழுடம்பி னுடும்பொலியும்
என் ஆசான் சிறியேன் மாட்டே
மாவளஞ் சேர்ந்திடச்செய்த ஆசியினால்
வந்ததென மதிக்கின் றேனே.

வழிவழியே தமிழ்வளர்க்கும் தருமைமடா
லயத்தின்கண் மாண்பார் ஞானம்
பொழிபன்னூல் வெளிவரும்பல் புலவோர்கள்
பரிசுபெற்றார் புன்மை யேனும்
தழுவுபுக ழுடையநின் றன் உயரருளுக்
கொருபொருளாச் சார்ந்தே னென்றல்
எழுமையுமின் பம்பயக்கும் செய்தியன்றோ?
நின்னலங்கள் என்றும் வாழ்க!

தில்லையில் :

கல்வெட்டுத் திறப்புவிழாவில்
கனம். ஸ்ரீ. C. சுப்பிரமணியம் B.A., B.L., அவர்களும், பிறபெரியரும்.

தோத்திர சாத்திரப் பாடற் கல்வெட்டுத் திறப்புவிழா ஆராதனை.

தருமபுர ஆதீனத்தில் :

சந்திரகிரகணத்தன்று ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனமாடி எழுந்தருளல்.

வெள்ளியம்பலவாணர் கழகம்,
பழையமாணவர்கழகத் தொடக்கவிழா:

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுடன்,
ஆதீனக்கல்லூரிப் பழைய புலவர் மாணவர்கள் சிலர்.



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
வானமாமலை மடம், ஸ்ரீமத் இராமாநுஜ ஜீயர் சுவாமிகளை வரவேற்றல்.

ஆவணிமூலத் திருநாள் முதலாவதுநாட் பேரவையில் :

பிர்மஸ்ரீ K. S. இராமசாமி சாஸ்திரிகள் B.A., B.L., அவர்கள் தலைமையில்
பித்துக்கொளி ஸ்ரீ முருகதாசர் அவர்கள் பஜனை

பொருளடக்கம்

1. வாழ்த்துரை
2. ஆவணிமூலத் திருநாள்
3. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளிய ஆசியுரை
4. அமைச்சர் தலைமையுரை
5. குறியும் நெறியும் குணமும்
6. அடியார் உள்ளம்
7. திருநாவுக்கரசும் திருவள்ளுவரும்
8. கடவுள் வழிபாடு ஏன் (கவிதை)
9. தேவர் குறளும் மூவர் தமிழும்
10. நாணத்தாள்
11. நண்பருடன் ஒருநாள்
12. அன்புடைமை
13. தமிழிசைப்பாடல்
14. மாசில்வீணை
15. இலக்கண விருந்து
16. திருமந்திரம்
17. ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகளின் தருமை விஜயம்
18. வெள்ளியம்பலவாணர் கழகம்
19. ஆவணிமூலத்திருநாள் நிகழ்ச்சிகள்
20. வாழ்த்துச் செய்திகள்
21. ஆதீன சமயப்பிரசாரம்
22. ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்
23. சமயம் கல்வி வளர்ச்சிகளுக்கு
24. ஜோஸ்யம்.

நிழற்படங்கள்: **மீனாட்சிசுந்தரம், தருமபுரம்.**

200

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயஹு ஆவணிமீ 10—9—54 [இதழ் 10

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யர்டலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

ஆவணிமூலத் திருநாள்

தருமபுர ஆதீனத்தில் சிவாலயங்களிலும் குருமூர்த்தங்களிலும் தேவாலயங்களிலும் ஒவ்வொருநாளும் சிறப்பு நிகழ்தலால் எந்நாளும் திருநாளே. ஒருநாளும் வெறும் நாளாகாது.

ஆண்டுதோறும் தருமபுரத்தில் பெருஞ் சிறப்புடைய திருவிழாக்கள் இரண்டு நடைபெறும். அவற்றுள் ஒன்று சிவபெருமானுக்குரிய திருநாள். மற்றொன்று, அவனை வழிபட்டு அவனேயாகித் திருவருள் செய்துவரும் குருநாள். ஆவணி மூலத்தில் திருநாள். வைகாசித் திங்களில் குருநாள்.

ஆவணிமூலத் திருநாள் மதுரை என வழங்கும் திருமருதந்துறையில் இன்றும் பெருஞ் சிறப்பாக நிகழ்ந்து வருகின்றது. மதுரைச் சொக்கலிங்கமூர்த்தியே ஆதி குருமூர்த்தியாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தருக்குப் பொற்றாமரைக்குளத்தில் கைவரப் பெற்ற கடவுளாதலின், அக்குருமூர்த்தி எழுந்தருளி விளங்கும் தருமபுரத்தில் வழிபடு கடவுளாகி வீற்றிருந்

தருளுவதால் மதுரையிற்போலவே தருமபுரத்திலும், அம் மூழு முதல்வன், ஆவணிமூலத் திருவிழாவைச்செய்வித்துக் கொள்கின்முன்.

மாணிக்கவாசகருக்கு உபதேசித்தருளிய திருப்பெருந் துறைப்பெருமான், பாண்டியனுக்குச் சொல்வித்தருளிய அருட்சுட்டளைகளுள், 'நீபோய்ப் பாண்டியனைப் பார்த்து ஆவணிமாதம் மூல நாளில் குதிரைகள் வந்துசேரும் என்று கூறுக' என்பதும் ஒன்ருகும். மூலம் என்னும் பெயர் இருபத்தேழு நட்சத்திரங்களுள் ஒன்றைக்குறிக்கும்.

அந்நாளில் ஆண்டவன் சொக்கேசன் தன்னடியவராகிய மாணிக்கவாசகர் பொருட்டுப் பாண்டியனுக்குப் பரிகளைக் கொண்டுவரக் குறித்தது, தக்கதொரு காரணத்தையுடையது. மூலம் என்பது வேர், அடி, காரணம் எனப் பலபொருள் தரும் பெயர்ச்சொல். ஆண்டவன் கொண்டுவந்த குதிரைகள் தாய்க் குதிரையின் கருவிலிருந்து தோன்றியவையல்ல. மாயாகாரியப் பொருள்களாலாகிய உடம்புடையனவும் அல்ல. அருளா லாகிய உடம்புடையவை. அவையெல்லாம் மூலக்குதிரைகள். தாய்க்குதிரைகளையுடையன அல்ல. திருஞானசம்பந்தருக்கு முத்துப் பல்லக்கும், சுந்தரர்க்கு யானையும், தந்த கடவுள் மணிவாசகரை விளக்க, பாண்டியன் வேண்டிய பரிகளைத் தந்தார். அவை ஞானக்குதிரைகள். ஞானமே எல்லா வற்றிற்கும் மூலம். ஞானக் குதிரைகள் மூலநாளில் வருதலே பொருத்தம். எல்லார்க்கும் முன்னேதோன்றி முளைத்த திரு மூலனுக்கு- மூலநோய் தீர்க்கும் முதல்வனுக்கு மூலபண்டாரம் ஞானபண்டாரமே. மதுரையர் மன்னன் மறு பிறப்பு (வேர்) ஓடப் பரிமேற்கொண்ட சேவகன் இப்பாரெல்லாம் இன்ப வெள்ளத்தில் மூழ்க, பக்தரெல்லாம் பேரின்ப வெள்ளத்தில் அழுந்த அறிவாகிய கதிர்வாளை உறையினின்று உருவி ஆனந்தக்குதிரையைச் செலுத்தி முத்திப் பரிசு அளித்த தயாமூலதன்ம நன்னுளே ஆவணிமூலத் திருநாள்.

அந்நாளில் தருமையம் பதியிலும் தக்கபுலவர் ஒருவருக் குச் சொக்க நாயகன் பரிசு கொடுப்பது வழக்கம். அவன் தண்ணூர் தமிழ் அளிக்கும் தண்பாண்டிநாட்டான். தப்பாமே தாளடைந்த அடியார் நெஞ்சை உருக்கி, பண்டைப் பரிசே ஆனந்தம் ஈந்தருளும் அப்பன். கொற்றக் குதிரையின்மேல்

வந்தருளி, மண்சுமந்து, கூலிகொண்டு, பாண்டிநாட்டுக் கோவால் மொத்துண்டு அதனால் ஆன புண்ணும் சுமந்த பொன்மேனியன்; ஆளுடைய அடிகள் பாடியருளிய 'பண் சுமந்த பாடற்பரிசு படைத்தருளும் பெண்சுமந்த பாகத்தன்" மண்ணில் வந்து பிட்டுக்கு மண்சுமந்த பித்தனாகி மன்னனால் அடியும்பட்டு, கடவுளென்ற கருத்து, கருத்திலும் எட்டாத படி மறைத்து, மனிதனோடு மனிதனாகி விளையாடி, முடிவில் அம்மன்னனையும் தன் முதற் சீடனாக்கிக் கொண்ட பாண்டி வெள்ளமே அக்கிருபாசமுத்திரம். இது, வேறு எங்கும் கேளாத திருவருள் விளையாட்டு. நரியைக் குதிரைப்பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்த தெரிய அரிய பரஞ்சோதியே நம் சொக்கலிங்கமூர்த்தி. அன்புருவான வந்திக்கு அருளுரு வான சந்திரசேகரன் வந்து பெற்ற பரிசு செந்தமிழ்ப் பண் சுமந்த பாடற் பரிசன்றிப் பிறிதொன்றும் இல்லை.

ஆவணிமூலத் திருநாள் கடவுளையும் அடியார்களையும் அருட்பாடல்களையும், பாடற்பரிசுகளையும் ஒருசேரக்காக்கும் பெருநாள் ஆகும். ஆதலின், அந்நாளில் இத்தருமையாதீனம் ஆண்டு தோறும் செய்து வரும் திருவிழாக்களால் கடவுட் பற்றை வளர்க்கின்றது, கல்வி நிலையங்களின் ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தால் கலைகளை விளக்குகின்றது முத்தமிழ் நாடகங்களால் மக்கள் அறியாமையை அகற்றுகின்றது. பரிசுகளால் அவரவர் அறிவின் திறத்தைப் பெருக்குகின்றது. அன்னதானம் சொர்ணதானங்களால் நாட்டின் வறுமையை ஓரளவு போக்கி வருகின்றது. இவ்வாறு தருமை ஆதீனம் ஆண்டுதோறும் பல லக்ஷக்கணக்கில் பொருட் செலவு செய்து கல்வியையும் கடவுட் பற்றையும் வளர்த்து வரும் வகையில் பற்பல நலங்களை உலகிற்குச் செய்து வருகின்றது. இவ்வுண்மையை இவ்வுலகம் பல ஆண்டுகளாக அறிந்து மகிழ்கின்றது. அம்மகிழ்ச்சி இவ்வாண்டில் மிக வளர்ச்சி பெற்றிருக்கின்றது. வாழ்க சமயங்கள், வாழ்க ஆலயங்கள். வளர்க திருமடங்கள், வளர்க இன்ப வாழ்வு.

702

தருமபுர ஆதீனம் ஆவணிமூலத் திருநாள்

மூன்றாவதுநாள் பேரவை (7—9—54)

ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

அருளிய ஆசியுரை.

"அன்பர்களே! இன்று ஆவணிமூலத்திருநாள். இறைவன் அடியாரின் பெருமையை விளக்கியருளிய விழுமிய நாள். ஏழைக்கிழவி வந்திக்காக இறைவன் மக்களோடுமக்களாய் மண்சுமந்து கூலிகொண்டு பிரம்படிபெற்ற பெருநாள். எப்படிப்பட்ட இறைவன்? பாரொடு விண்ணாய்ப்பரந்த எம் பெருமான்! தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டிநாட்டான்! கண்சுமந்த நெற்றிக்கடவுள்! 'ஏழிசையாய் இசைப்பயனாய்' 'பண்ணிடை இசை ஒப்பாய், என்றெல்லாம் இறைவனை இசைவடிவமாகக் கண்டனர் நம் முன்னோர். பண்சுமந்த மணிவாசகரது பாடலுக்குப் பரிசாக மண்சுமக்கின்றான். மண் சுமந்ததற்குக் கூலி வந்தியின் அன்பு அடிசிலாகிய பிட்டுணவு வாங்கி உண்கின்றான். பாண்டியன் தெய்வநெறி ஒழுகி நாடு நலமடையவேண்டும் என்ற எண்ணந்தான் இந்த ஆவணிமூல விழாவைத் திருவருள் தோற்றுவித்தது.

"பண் சுமந்த பாடற்பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான்பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன்மண்டலத் தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த" பொன்நாள்

செந்தமிழ்ச்சொக்கர் கண்ணுக்கினிய பொருளாய் கைவரப் பெற்றவர். மதுரைப்பெருமான் தருமையிடத்து ஆன்மார்த்த

மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவர். பிட்டுவிற்றுண்டு வாழ்ந்த வந்தியின் அன்பிலே அகப்பட்ட அவ்விறைவனுக் குரிய திருநாள் ஆவணிமூலம்.

இப்பெருமானைநோக்கி நமது ஆதீனஸ்தாபகர் ஸ்ரீ குரு ஞானசம்பந்தர் 'உனக்குப்பணி செய்ய, உன்றனை எந்நாளும் நினைக்க வரம் எனக்கு நீதா — மனக்கவலை நீக்குகின்ற தென் மதுரை நின்மலனே எல்வுலகும் ஆக்குகின்ற சொக்கநாதா' என வேண்டுகின்றார். ஆதீனத்தின் கொள்கைகளும் பணி களும் இப்பாடலின் முதல் இரண்டுவரிசைகளிலே அமைந்து விளங்குகின்றன. பணிசெய்வதும் பரமனை மனமுருக நினைப்பதுமே நமது லக்ஷியம். தனக்கு உவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது என்ற வள்ளுவர் கருத்து இப்பகுதிகளில் தெள்ளத்தெளிய கூறப் படுகிறதல்லவா? நாம் இந்த உயர்ந்த ஸ்தாபனத்தின் வழிவந்த ஒரு தொண்டர், "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅரெனின்" என்றார் வள்ளுவர். அறிவு, ஆராய்ச்சி, அநுபவங்களெல்லாம் ஆண்டவனுடைய திருவடிகளிலே முடிவில் ஐக்யமாகிவிடுகின்றன. இறைவ னுடைய திருவடி பெறுதலே லக்ஷிய வாழ்வின் அடிப் படை. அடிப்படையை மறந்து உலகியலிலே தடுமாறி உழல்வோர் பலருண்டு.

மதஸ்தாபனங்களும் ஆலயங்களும் சமய வளர்ச்சிக்காக ஏற்பட்டவை. ஆனால் அவை சமயவளர்ச்சிக்கு மட்டுமல்லா மல் மொழி வளர்ச்சிக்கும், சமூகவளர்ச்சிக்குமாகப் பயன் பட்டு வருதலை உணரவேண்டும். ஆலயங்கள் பொதுமக் களின் சேமிப்புநிலையம். எத்தனையோ நூற்றுக்கணக்கான மக்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு வாழ்கின்றனர். கோயிலின் வருமானமோ நிலமோ தனி ஒருவனுடைய நலத் திற்குப் பயன்படவில்லை. ஆனால் அதே நேரத்திலே அந்தச் சொத்து தனிப்பட்ட ஒருமனிதனுடையதாக இருக்குமானால் அது அவனது சுயநலத்திற்கு மட்டுந்தான் பயன்படும்.

705

ஃ

இதனை உணர்ந்து பார்த்தாவது ஆலயங்களின் வருமானங்களைப்பற்றிக் குறைகூறும் அன்பர்கள் திருந்துவார்களாக!

இன்று நமது ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாக் கொண்டாட்டம். விழாவிற்குத் தலைமை வகிக்க இருப்பவர்கள் சென்னை மாநில நிதி கல்வி அமைச்சர் கனம் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள். செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் அமைச்சருக்கு செல்வம், பக்தி முதலிய எல்லா நலங்களும் உண்டாவதாக!

இன்று நல்லறிஞர் ஒருவர் சிறப்பிக்கப்பட இருக்கிறார். தெய்வத் திருமுறைப்பாடல்கள் சிலவற்றை எளிய முறையில் அரிய கருத்துக்களைப் படித்துப் பயன்படும் முறையில் எழுதி வெளியிட்ட வித்தகர். அவருக்கு என்ன பட்டம் வழங்குவதென்று புலவர் பலர் சிந்தித்திருந்த நேரத்தில், செந்தமிழாராய்ந்த செல்வராம் சொக்கரின் நினைவு என்றுமிருக்க, 'செந்தமிழ்ச்செல்வர்' என்ற பட்டம் வழங்குவதென்று நாம் முடிவு செய்தோம். கி. வா. ஜகநாதன் அவர்கள் குருபக்தி உடையவர்கள். குருபக்திதானே மாணவனை உயர்நிலைக்குக் கொண்டு வருவது குருபக்திதான் கி. வா. ஜகநாதன் அவர்களுக்கு இத்தகைய தகுதியை வழங்கச் செய்கிறது, செந்தமிழ்ச் சொக்கர் திருவருளால் செந்தமிழ்ச்செல்வர் கி. வா. ஜகநாதன் அவர்கள் தமிழ்ப்பணி சமயப்பணி செய்து சிறக்க! என்று கூறி இப்பட்டத்தை அவருக்கு அளிக்கின்றேன்."

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும் எம் ஆதியே"

7

சென்னை மாநிலம், கல்வி, நீதி அமைச்சர்

கனம், திரு. C. சுப்பிரமணியம் B.A., B.L., அவர்கள்

நிகழ்த்திய தலைமைச் சொற்பெருக்கு

"நான் கல்வி மந்திரி என்ற முறையில் கல்வி நிலையங்களில் நடக்கும் விழாக்களில் கலந்து கொள்ளக் கடமைப் பட்டவன். பிட்டிற்கு மண் சுமந்த பிரானின் பெருந்திறத்தை நினைவூட்டும் இந்த நல்ல நாளிலே, இவ்வாதீனத்தில் நடக்கும் இந்த ஆவணிமூலத் திருநாளில் நான் கலந்து கொண்டமை குறித்து மிக மகிழ்கின்றேன். என் உள்ளத்திலே உவகை பொங்கி வழிகின்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்குச் "செந்தமிழ்ச் செல்வர்" என்ற பட்டம் அளித்ததுபற்றி மிக்க ஆனந்த மடைகின்றேன். திரு. ஜகந்நாதனைப் பத்திரிகை மூலமும், அவரது புத்தகங்கள் மூலமும், அவரைத் தமிழுலகமும், மற்றைய தமிழ் வழங்கும் நாடுகளும் நன்கு அறியும். அவர்கள் மொழிப்பணியும், சமயப்பணியும் நன்கு ஆற்றிய பெருந்தகையார். என்னிடம் மகா சந்நிதானம் அவர்கள் அரசாங்கத்திற்கும் மதத்திற்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி கூறினார்கள். Secular State என்பதற்குத் தமிழில் மதச்சார்பற்ற அரசாங்கம் என்று தவருக அர்த்தம் செய்யப் படுகிறது. செகுய்லர் என்பதற்கு நேர்பொருள் ஒருமதத் திற்கு மட்டும் பக்ஷபாதகம் காட்டுதல் இல்லாத என்றுதான் அர்த்தம். இந்திய அரசாங்கம் மதச்சார்பற்ற அரசாங்கம் என்ருல் மதத்தையே சாராத அரசாங்கம் என்று அர்த்த மல்ல. இந்தியாவிலுள்ள இந்து மதம், கிறிஸ்தவ மதம், முகம்மதிய மதம் ஆகிய மதங்களுக்கெல்லாம் பொதுவான மதச்சார்புடைய அரசாங்கம் என்பதே பொருளாம். அரசாங் கத்தில் அலுவல் பார்க்கிறவர்கள் ஆஸ்திகப் பிரசாரம் செய்வது தவறு என்று சொல்லுவதுதான் மிக்க தவருகும். மதம் இல்லையெனில் அரசாங்கமோ, அதன் நிர்வாகமோ, நேரிய ஒழுக்கமான வாழ்க்கையோ நிலைக்க வழியில்லை. நம்

முன்னோர்கள் இதனை அறிந்தே மதத்தைப் போற்றி வளர்த்து வந்தார்கள். இப்பொழுது ஒரு சில ஸ்தாபனங்கள் சுக இன்பங்களை அடைவதையே குறிக்கோளாகக்கொண்டு வேலை செய்கின்றன. அறியாமையினால்தான் அந்த ஸ்தாபனங்கள் இவ்விதமான - மிகக்கீழான குறிக்கோளுடன் இயங்குகின்றன.

இந்தியாவிலுள்ள மக்கள் அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தேவையான அளவு கிடைக்கப்பெற்றால்தான், இந்தியா தன் சுயதேவையைப் பூர்த்தி செய்ததாகும். இத்தேவையினைப் பூர்த்தி செய்வதே இந்திய சமூகத்தின் தலையாய கடமையாகும். இதற்காகவே அரசாங்கமும், பிற ஸ்தாபனங்களும் ஓயாது பணியாற்று கின்றன. ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்திற்குத் தான் செய்யவேண்டிய கடமையைச் செவ்வனே செய்துவிட்டால், சமூகம் நல்ல முன்னேற்றத்தை விரைவில் கண்டுகொள்ளும்.

மனிதர்கள் யாவரும் பூரண மனிதனாக இருக்க முயல வேண்டும். அறிவு, ஆற்றல் அன்பு ஆகிய இம்மூன்று தன்மைகளையும், எவனொருவன் அடைகின்றானோ அவன்தான் பூரண மனிதனாவான். இயந்திரங்கள் கூட அறிவையும், ஆற்றலையும் அடைந்திருக்கின்றன. அவைகளுக்கும் மனித னுக்கும் அன்பு ஒன்றுதான் வித்தியாசமானது. சிலர் மக்களிடம் அன்பு பரவுவதற்காகப் புரட்சி, பலாத்காரம், துவேஷம் இவை நிகழ வேண்டும் என்று விரும்புகின்றார்கள். உண்மையாகவே இவைகளுக்குப்பின் அமைதி ஏற்படுமானால் அந்த அமைதி சுடுகாட்டு அமைதியாகத்தான் இருக்கும். துவேஷம், புரட்சி, பலாத்காரம் இவற்றின் மூலம் உலகில் ஒரு காலத்திலும் அன்பை நிலைநாட்ட முடியாது. உண்மை யான தெய்வபக்தியின் மூலம்தான் மக்களிடத்தே சிறந்த அன்பை நிலைநாட்ட முடியுமே யன்றி, வேறுவழிகளால் முடியவே முடியாது

உலகில் பலநாடுகள் தோன்றி மறைந்தன. ஆனால் நம்பரதகண்டம் இன்னும் கம்பீரத்துடன் நிலைத்து நிற்கிற

தென்றால், நம்நாட்டு மக்கள் இறைவனிடத்தில் காட்டும் சிறந்த பக்தியினால்தான். இங்குள்ள கல்லூரியில் ஆத்ம வளர்ச்சிக்குத் துணை நல்கும் சமயக்கல்வி போதிக்கப்படுவதை அறிந்து மிகமிக மகிழ்கின்றேன். இங்கு வடமொழியும் நன்கு ஆதரிக்கப்படுவதை அறிந்து நான் மேலும் ஆனந்த மடைகின்றேன்.

சிலர் பிறமொழிகளைக் கற்றால் தமிழுக்கு அழிவு ஏற்படும் என்று கருதுகின்றார்கள். இதனால் தமிழ் சிறந்த மொழியாக அவர்களால் கருதப்படவில்லை எனக்கொள்ளலாம். நல்ல திடகாத்திரமுள்ள ஒருவன் எதை உண்டாலும் அவனுக்கு ஜீரணமாகிவிடும். ஆனால் நோயாளிகளுக்கோ அவை ஜீரணமாகா. அவ்வண்ணம் தமிழ் வல்லமைமிக்க மொழி யென்றால் தன்னிடத்துச் சேருகின்ற பிறமொழிச் சொற்களைச் அப்படியே ஜீரணித்துவிடும். ஆனால் தமிழ் நோயாளியாக இருந்தால்தான் பிறமொழிச் சொற்களின் சேர்க்கையால் அழியக்கூடும்.

இன்று உலகமொழியாகத் திகழ்கின்றது ஆங்கிலம், அதற்குக் காரணம் என்னவெனில் அம்மொழி உலகி லுள்ள எல்லா மொழிகளின் சொற்களையும் கடன் வாங்கித் தன்மயமாக்கிக் கொண்டமையால்தான். நமது தாய்மொழி நோயாளி மொழியாக விளங்கக்கூடாது. மிக்க வல்லமை வாய்ந்த மொழியாகத் திகழவேண்டும். உண்மையான தமிழ் வளர்ச்சியை விரும்புவோர் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப்பதை வரவேற்பார்கள். வடமொழியின் மூலமாகவே தமிழினை வளர்க்க முடியும் எனக் கண்டறிந்து அவ்வுண்மை யோடு இவ்வாதீனம் பணியாற்றுகிறது.

மாணக்கர்கள் நல்ல சூழ்நிலையினை அமைத்துக்கொண்டு கற்கவேண்டும். அவர்கள் கல்லூரியில் கற்கும் காலத்தில் மூன்றுவித அநுஷ்டானங்களைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். அவையாவன 1. பிரம்மசரிய விரதம், 2. தெய்வ பக்தி, 3. நல்ல எண்ணம். இந்த மூன்று விதிகளையும்

209

கடைப்பிடித்து ஒழுகுவதற்குத்தான் கல்லூரியில் கற்க வேண்டும். நகரங்களில் சிறந்த பள்ளிகள் அமைவதைவிட, கிராமங்களில் அமைவதே மிகமிக நல்லது. அம்முறையில் இங்குப் பல பள்ளிகள் இருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியை ஊட்டுகிறது. 'சினிமா' என்ற ஒப்பற்ற இயந்திர சாதனம் மாணவர்களுக்கு அறிவு வளர மிக்க உதவியாக இருக்க வேண்டியது, இன்று, மாணவர்களைக்கெடுக்கும் சாதனமாகத் திகழ்கிறது. மாணவர்கள் சினிமா பார்க்காமல் இருப்பது, அவர்களுக்கு மிக்க நன்மையினை உண்டாக்கும். கோடிக் கணக்காகப் பணம் செலவு செய்து பள்ளிகள், கல்லூரிகள் மூலம் மாணவர்களை அரசாங்கம் நல்வழிப்படுத்துகின்றது. ஆனால் அதை விடவும் அதிகமாகப் பொருள் செலவு செய்து சினிமாக்கள் மூலமாகக் சிலர் மாணவர்களைக் கெடுக்கின்றார்கள். ஆகவே மாணவர்கள் இதனைத் தங்கள் சிந்தனையில் கொண்டு சினிமாப் பார்க்கச் செல்லாதிருக்க வேண்டும். இங்குள்ள மாணவர்கள் யாவரும் நன்கு கற்று, வாழ்க்கையில் நல்ல வெற்றியினைக் காண்பார்களாக!

ஆவணிமூல விழா மலர்

தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூசை விழாக் கோடைக்கால சமயப் பயிற்சி வகுப்பில் நடைபெற்ற பல மதங்களின் தத்துவங்கள் அடங்கிய **சமய போதச் சொற்பொழிவுகள்** என்ற இந்நூல் ஆவணிமூல விழா மலராக வெளியிடப்பெற்றது. 7—9—54 செவ்வாய்க்கிழமை ஆவணிமூல விழாவன்று ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபாடு முடிந்தபின்னர் இந்நூல் அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

710.

"குறியும் நெறியும் குணமும்"

சித்தாந்த ரத்நாகரம், புலவர்,
திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
துணைத்தலைவர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

"நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம் பரவி
முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ''

திருவாசகம் 282.

'குறி' என்பது ஒரு வினையின் முதல் நிலை. அதனொடு 'தல்' முதலிய இறுதிநிலை சேர்ந்து, குறித்தல் முதலிய வடிவில் தொழில் முதலியவற்றைத் தோற்றும் பெயராகும். தமிழில் வழங்கும் குறித்தல் குறிப்பு என்னும் பெயர்களை யாவரும் அறிவர். குறித்தல் குறிப்பு:— தொழிற் பெயராகியும் தொழிலாகு பெயராயும் நிற்கும். இறுதிநிலை இன்றி, குறி என முதல்நிலையாக மட்டும் நின்று அப்பெயர்ப் பொருளைத் தருதலும் உண்டு. அடி, குத்து, கட்டு, வெட்டு முதலியவை போலக் குறி என்பதும் முதனிலைத் தொழிற் பெயராயும் தொழிலாகு பெயராயும் நின்று பொருள் பயக்கும்.

குறி என்பது கோள் என்பதொடு சேர்ந்து, குறிக்கோள் என்றாகி உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இருக்கின்றது. உட்கோள், மேற்கோள், ஊர்கோள், கால்கோள், மீக்கோள் முதலியன போலக் குறிக்கோளும் தொடர்மொழியாகும். கோள் என்னும் வருமொழியாற் பொருள் வேறுபடாது. நிலை மொழியால் பொருள் வேறுபடும்.

இறைவனையே அடியார் குறிக்கோளாக உடைமையும் அடியாரை இறைவன் குறிக்கொள்வதும் திருமுறைகளில் பல இடத்தில் காணப்படுகின்றன. அவற்றுள் இறைவனுடையதைத் திருக்குறிப்பு என்பர். அடியவருடையதைக் குறிக்கோள் என்பர். திருநாவுக்கரசு சுவாமிகள் "எரிதரு செஞ்சடை

711

ஏகம்ப என்னே திருக்குறிப்பே'' என்று முன்னிலையிலும், “சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம், என்று வந்தாய் என்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே'' என்று படர்க்கையிலும் இறையை வைத்து, அவனுடையதைத் திருக்குறிப்பு என்று அருளியவாறு காண்க. மாணிக்கவாசக சுவாமிகள் ‘‘உடையான் அடியேனைத் தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு அன்று'' என்று படர்க்கையிலும், ‘தேனே அமுதே, கரும்பின் தெளிவே, சிவனே, தென்றில்லைக்கோனே உன்றன் திருக்குறிப்புக் கூடுவார் நின்கழல் கூட, ஊனார் புழுக் கூடு இதுகாத்து இங்கு இருப்பதானேன் உடையானே'' என்று முன்னிலையிலும் இறைவனை வைத்து அவனது திருக்குறிப்பை வெளிப்படுத்தி யருளினார்கள்.

நான்காவது திருமுறையுள் 87, 95 ஆம் திருப்பதிகங்களிரண்டும் குறிக்கொள்ளுமாறு இறைவனை வேண்டுமாற்றை உணர்த்துதல் காணலாம். அவற்றுள், “நான் சட்ட உம்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே'' ‘பழனத்தரசே, அடியேனைக் குறிக்கொள்வதே’ எனவரும் பகுதியை, ஒருபானைச் சோற்றிற்கு ஒருசோறுபதம் ஆகக்கொள்ளலாம். ஆயிரஞ்செந்தாமரை கொண்டு அருச்சித்தலையும் இண்டை கட்டுதலையும் நாடோறும் செய்த திருமால், சிவபெருமானையே குறிக்கோளாகக் கொண்டிருந்த உண்மையை, ‘நெடுமாலயன் போற்றி செய்யுங் குறியே’ என்றருளினார் நம்பியாரூரர். “குறிக்கொண்டிருந்து செந்தாமரை ஆயிரம் வைகல் வைகல், நெறிப்பட இண்டை புனைகின்றமால்'' என்றருளினார் மொழிமன்னர். அவ்வாசிரியரே “குறிக்கோள் இலாது கெட்டேன்'' என்று பாடியிரங்கினார். அக்குறிக்கோள் இல்லாத நிலைமை தமக்கு இருந்த காரணத்தால், தம்மைக் கொடியவராகச் சொல்லிக் கொள்ளலும் நேர்ந்துள்ளது. அதனை, “கூத்தாட வல்லான் றன்னைக் குறியிலாக் கொடியேனை அடியேனாகச் செய்தானைத் திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிக்கண் சேராதாரே'' என்றதால் உணரலாம். குறிக்கோள் இல்லாமல் கடவுளை அறியும் நெறியை அறிதலும், அறிந்து கடவுளைச் சேர்தலும் யாவராயினும் இயலாதன. இவ்வாய்மையை, ‘சிவனடி தெரியமாட்டேன் குறியிலேன்’ என்றும், ‘குறியால் குறிகொண்டவர் போய்க் குறுகும் நெறியான் நெல்லிக்காவுள் நிலாயவனே’ என்றும் கூறியதால் அறிக.

சிவனையும் சிவனடியாரையும் சிவாலயத்தையும் சிவ நூல்களையும், சிவசின்னங்களையுமே பொருளாகக் கொள்ளுங் குறியும் நெறியும் சிவத்தை அடையத் துணை செய்ததாலும், அச்சிவனது திருவருளால் அன்றி, அவற்றை அறிவது அரிதாதலாலும், குறியைக் குறித்து, அதற்குரிய நெறியில் ஒழுகி அடையத்தக்க சிவம், அக்குறியாயும் நெறியாயும் விளங்கி நிற்பதாலும், அச்சிவபரம் பொருளைக் குறி என்றும் நெறி என்றும் கூறினர் நம் ஆசிரியர். "நெறியே நின்மலனே நெடுமாலயன் போற்றி செய்யுங், குறியே நீர்மையனே கொடியேரிடையாள் தலைவா"; 'குறியே என்னுடைய குருவே'; 'நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்'; 'அறியாது அடியேன் அகப்பட்டேனை அல்லற்கடல் நின்றும் ஏறவாங்கி 'நெறிதான் இது என்று காட்டினனை' என்பன அவை.

குறிக்கோள் வழாது நெறியில் ஒழுகிக் கடவுளை உணர்வார்க்கு அவ்வுணர்வாகியும், அவ் வுணர்வால் அழியாது நிற்கும் பேரின்பமாகியும் விளங்கும் முடிவு நிலையை, "உண்மை நின்ற பெருகு நிலைக் குறியாளர் அறிவு தன்னை" என்றருளினர் தாண்டகச் சதுரர்.

சுத்தாவத்தையில் சிவத்தைப் பேணுந் தவத்தினர்க்கு அக் குறிக்கோள் சிறிதும் வழாது நிற்கும் என்பதைக் 'குறியொடும் அஞ்சவத்தை கூடுவர் வீடுகூட' என்றார் ஆசிரியர். சிவஞானியார் அருள் ஞானக்குறியில் நின்று கும்பிட்டுத் தட்டம் இட்டுக் கூத்தாடித் திரிதலும் உடையர். அவர் அக் 'குறியதனால் இதயத்தே அரனைக்கூடுங் கொள்கையினால் அரனவர். குறியொடுதாம் அழியும் நெறியதனால் சிவமேயாய் நின்றிடுவர்.' அத்தகைமையில் 'அறிவதொருகுறி,' 'குருவின் அருளினால் அறிந்து..............சிவனை 'அடைந்து நின்று துரியாதீதம் தோன்ற முயல்வார்க்குச் 'சிவாநுபவம் சுவாநுபூதிகம்' ஆகும்.

இக்குறியும் நெறியும் அவற்றினைக் கடைப்பிடித்துச் சிவத்தைப்பெறுங் குணமும் இல்லார் மண்ணில் இருத்தல் நிலச்சுமையே என்றருளினர் நம்முன்னோருட்பலர். திருவாவடுதுறையுள் சென்ற திருநாவுக்கரசர் அங்குப் பிரகாசிக்கும் மாசிலாமணியை நோக்கிப் பின்வருமாறு உருகிப் பாடினார்கள்.

713

"செறிவிலேன் சிந்தையுள்ளே சிவனடி தெரிய மாட்டேன், குறியிலேன், குணம் ஒன்றில்லேன், கூறுமா கூறமாட்டேன், நெறிபடு மதிஒன்றில்லேன், நினையுமா நினைய மாட்டேன், அறிவிலேன் அயர்த்துப் போனேன் ஆவடு துறையுளானே" இதனால், சிந்தையுட் செறிவு இல்லார்க்குச் சிவனைக் கூறும் வகையும் தோன்றாது. நெறியொழுகும் உணர்வில்லார்க்குச் சிவனை நினைக்கும் வழியுங் கிட்டாது. அறியாமையும் அயர்ச்சியுமே மிச்சம் என்று நன்கு உணரலாம். சைவர் என்று சொல்லிக் கொள்ளவும், சைவராகவும், சிவமாகிப் பேரின்ப வாழ்வு பெறவும் விரும்பினால், சைவ சமயத்திற்கு மிக முக்கிய மான குறியையும், நெறியையும், குணத்தையும் முறைப்படி அறிந்துகொள்ளல் வேண்டும். அறிந்து அநுபவத்தில் கொண்டுவந்து பயன் பெறல் வேண்டும். நாயன்மார்களே தமக்கு அவை இல்லை என்று கூறி வருந்தினார்கள் ஆயின், நாம் எந்நிலையில் அவற்றைப் பெறுங் கருத்துறல் வேண்டும்? அவற்றைப் பெறாதே பெற்றிருப்பதாகக் கொண்டு, 'யான்' 'எனது' என்ற செருக்கிற்கு ஆளாகிப் பெறுதற்கரிய மானிடப் பிறவியை வீணாக்குதல் சிறிதும் தக்கதன்று. கற்றதன் பயன் கடவுளது நற்றாள் தொழுவதே. பலர், பல கற்றும், ஒன்றும் கல்லாதாரினும் மூடராயிருப்பது மிக வருந்தத் தக்கது. கடவுள் வேறு கல்வி வேறு அல்ல. முற்றுப் பெற்ற கல்வியே கடவுள். 'கல்லா நெஞ்சின் நில்லான் ஈசன்'. 'கல்லாதார் மனத்து அணுகாக் கடவுள்' என்ற திருமுறை வசனம் யாது உணர்த்து கின்றன? 'கற்றார்கள் உற்று ஓருங் கடவுளான்' என்றது ஏன்? இவற்றை ஆராய்தல் வேண்டும். திருநாவுக்கரசர், கடவுளைக் 'கல்வி' என்று அருளியுள்ளார்.

'கருதுவார் மனத்தானைக் கல்விதன்னை .... திருமாற் பேற்று எம் செம்பவளக் குன்றினைச் சென்றடைந்தேன் நானே' என்றதில் சிவபெருமானைக் 'கல்வி' என்று உணர்த்தும் உண்மையை உணர்க. மாணிக்கவாசகர், குறியும் நெறியும் குணமுமிலாதவர் சைவரல்லர். அவரைச் சேராத மெய்யடியாரை நீங்காது நிற்பான் சிவபிரான் என்றருளினார். அதைக் கருதும் போதெல்லாம் என் உள்ளம் பகீர் என்று நடுங்கும். பின், நமக்கில்லை அன்னவருறவு, அதற்குரியவர் வேறு. நாம் அவனை மறப்பது இல்லையே என்று தெளிந்து திடம் உறும். உறவே, என் உள்ளம் அவனைச் செறியும். செறியவே என்

கருத்தில் அப்பொழுது சிவாநந்தம் உருக்கொள்ளும். அதுவே கல்விப் பயன் என்று பேரின்ப வாழ்வு பொங்கும்.

அன்பர்களே! நீங்களும் குறிக்கோள் ஒன்று கொண்டு அதற்கு உரிய நெறியில் ஒழுகி, அவ்வொழுக்கம் தவறாதிருப்பதற்கு ஏற்ற குணங்களை மேற்கொண்டால் அழியாத இன்பம் இன்றே பெறலாம். பெறவிரும்புங்கள். பெற்று நித்தியாநந்த வாழ்வு நடத்தும் ஜீவன் முக்தராகுங்கள்.

"குறியும் நெறியும் குணமும் இலார் குழாங்கள் தமைப்
பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியும் கருத்தில் அருத்தமுதாம் சிவபதத்தை
அறியும் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே"

திருவாசகம் 559.

"குணம் அவன்காண் குறி அவன்காண்"

6-48-5.

குறியுமிலார் நெறியுமிலார் குணமும் இலார்என்க. அம்மூன்றும் இல்லாதவர் கூட்டம். குழாம்—கூட்டம். அத்தகையோர் கூட்டத்தைச் சேர்ந்தவர் மனத்தைப் பிரிந்திருப்பதும் சேராமல் பிரிந்திருப்பவர் மனத்தைச் சேர்ந்திருப்பதும் சிவனியல்பு. காண்டற்கு அரியவன் கடவுள் ஆயினும் கருதுவார்க்கு ஆற்ற எளியான். அக்கருத்து 'மெய்ந்நெறி' அறிந் தொழுகுவார்க்கே எய்தும். நெறி, குணம் என்பவற்றைப் பற்றிய கருத்துக்கள் வேறு கட்டுரையில் தனித்தனி விளக்கப்படுமேனும், இதில் பொதுவாகச் சில குறிக்கப்பட்டிருக்கின்றன.

குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு வெழுத்தைந்தின்
கொடுவா ளோச்சிப்
பொறிகரணக் காடெறிந்து வீசிமனப் புலந்திருத்திப்
புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங் களைந்தருணன்
னீர்கால் பாய
வறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த வமுதருந்தா
தருந்தி நின்றார்.

திருவிளையாடற் புராணம்

அடியார் உள்ளம்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள், M.A., B.L.,
தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.

[முன் இதழ்த் தொடர்ச்சி]

अंकोलं निंज बीज सन्तति रयस्कान्तोपलं सूचिका
सध्वी नैज विभुं लता क्षितिरुहं सिन्धुः सरिद्वल्लभम् ।
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते ॥

"பக்தி" என்பது என்ன? "அடைதல்" என்னும் பொருளுடைய "பஜ்" தாதுவிலிருந்து திரிந்த பெயர்ச்சொல். அடைதல் என்ற கிரியைக்கு "கர்த்தா" எது? மனம். எவனைக்குறித்து மனம் அடைதல் என்ற காரியத்தைச் செய்கிறது? ஜகத்காரணனும் நியந்தாவும் ஆன பரமேச்வரனை.

இதைத்தான் இந்தச் சுலோகம் கூறுகிறது.

पशुपतेः पादारविन्दद्वयं चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा ।

பரமேச்வரனுடைய இரு பாதகமலங்களையும் அடைந்து மனத்தின் விருத்தியானது என்றும் நிலையாக நின்று வருமானால் அதுவே பக்தி எனப்படும்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது "விருத்தி" பதத்தின் சுவாரசியம். "மனம்" என்று கூறுவதற்குப் பதிலாக மனத்தின் "விருத்தி" என்று கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. மனத்தின் ரூபம் என்ன? மனதிற்கு ரூபம் கிடையாது. அது விருத்தியைத்தான் ரூபமாய் உடையது. அதாவது "வியாபாரம்" "சேஷ்டை" "ஓடுதல்" "பரவுதல்" தான் அதன் இயல்பு. இதுவே அதன் ஸ்வரூபம்.

இவ்விதம் என்றும் மாருத "விருத்தி"யை உடைய மனம் பசுபதியின் பாதங்களை அடைந்து ஓரே நிலையாக நின்றுவிட்டால்

பக்தி என்று சொல்லப்படுகிறது. மனத்திற்கு ஓடுதல், பாவுதல் சுபாவமாயினும் அந்தச் சுபாவம் மாறி அது நிலைத்து நிற்கும் இயல்பை உடையதாவது தான் பக்திக்கு லக்ஷணம். இந்தச் சுபாவமாறுதல் மனத்திற்கு இலகுவில் கிட்டிவிடாது. எவ்வளவோ ஜன்மங்களில் ஸம்ஸ்காரம் ஏறி இந்தப் பக்குவ நிலை மனத்திற்கு ஏற்படவேண்டும். இந்தப் பக்தி நிலையைச் சாதிப்பதற்குப் பத்து விதப்பயிற்சி சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. பாகவதம் முதலிய பக்தி சாஸ்திரங்களும் பல இருக்கின்றன. அவைகள் மூலம் சிரவண பக்தியைச் சாதிக்க வேண்டும். நாமஸங்கீர்த்தன விஷயமாக, கிரந்தங்கள் பல இருக்கின்றன. அவைகள் காட்டிய வழியில் கீர்த்தனபக்தியை ஸாதிக்க வேண்டும். இப்படியே கோவில்கள் பூஜாவிதிகள் முதலியன பல்வேறு பக்திமார்க்கங்களைக்காட்டுகின்றன. இவைகளைப்பயின்று பக்தியின் முதிர்ந்த நிலையை அடைந்தால் நாம் "அடைந்தவர்களாகலாம்" அதாவது:— அடையவேண்டியதை. அந்தப் பக்குவநிலை வந்ததும் பக்தியின் இயற்கையை இந்தச் சுலோகம் பல உதாரணங்களினால் வருணிக்கிறது. உதாரணங்களை ஆராய்வோம்:—

'அங்கோலம் என்ற மரத்தின் பழவிதைகள் எப்படி மரத்திலேயே போய் மறுபடி ஒட்டிக்கொள்கின்றனவோ' என்பது முதல் உதாரணம். 'இரும்பு ஊசியானது காந்தத்தினால் இழுக்கப்பட்டு எப்படிக்காந்தத்தை அணுகி அதில்ஒட்டிக்கொள்கிறதோ' என்பது இரண்டாவது. 'பதிவிரதை தன் பர்த்தாவை எப்படி அவனே கதி என்று அண்டிவாழ்கின்றாளோ' என்பது மூன்றாவது. 'வளரும் கொடி எப்படி அருகே உள்ள மரத்தைத் தழுவி நின்று உயரவளர்கிறதோ' என்பது நான்காவது. 'நதியானது ஸமுத்ரத்தை எப்படி அடைந்து அத்துடன் ஒன்றாகக் கலந்துவிடுகிறதோ' அப்படி என்பது ஐந்தாவது உதாரணம். அங்கோலம் என்ற மரம் பிரஸித்தமாகத் தெரியவில்லை. அதன் பழங்கள் தானாக உதிர்ந்து தரையில் வீழுந்த பிறகு விதைகள் வெளிப்படும்போது அவை இயற்கையின்வயமாகித் தாய்மரத்தின் மேலேயேபோய் ஒட்டிக் கொள்கின்றன என்று சொல்லப்படுகின்றது. இந்த இயற்கை, விதைகளில் இருக்கிறது. இரும்புத் துண்டுகள் காந்தத்தை அடைவதோ காந்தத்தின் சக்தியைக் காரணமாகவுடையது. இந்த இயற்கைச்சக்தி காந்தத்தில் இருக்கிறது. பக்தன் ஈச்வரனிடம் பிரேமை கொள்வதற்கும் ஈச்வரன் பக்தனிடம் பிரேமைகொள்வதற்கும் இவை எடுத்துக்கட்டாக

இருக்கின்றன. அடுத்த இரண்டு உதாரணங்கள் ஜட சக்தி யல்லாமல் சேதனசக்தியைப் பற்றியவை. பதிவிரதையும், கொடியும் தன் வளர்ச்சிக்கு ஆதாரத்தைத் தேடுகிறார்கள், பர்த்தாவையும் மரத்தையும் தழுவி வாழ்வின் பயனைப் பெறு கிறார்கள். இந்த நான்கு உதாரணங்களிலும் கூறப்படும் ஆச்சர்யங்களினால் அபேதம் ஏற்படவில்லை. ஐந்தாவது உதார ணத்தில் அபேதம் நிரூபிக்கப்படுகிறது. நதி ஸமுத்ரத்தில் கலப்பது ஜீவாத்மா பரமாத்மாவுடன் இரண்டறக்கலப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

இந்த உதாரணங்களில் செயற்கையோ, பலாத்காரமோ. எதிர்ச்சையோ இல்லாமல் இயல்பே காரணமாகக் கூறப்பட் டிருக்கிறது கவனிக்கத்தக்கது. ஈச்வரனை அடையும் விஷயத்தில் மனம் அவ்வித இயல்பை அடையும் பரிபக்குவத்தைப் பெறின், அது பக்தியாகும். அதன் பலன் முறையே யோகக்ஷேமம் முதல் முக்தி நிலைவரை என்பது தெளிவாகிறது.

மேலும், இரண்டு உதாரணங்களினால் த்வைதமோக்ஷமும் அடுத்த இரண்டு உதாரணங்களினால் விசிஷ்டாத்வைத மோக்ஷ மும் கடைசி உதாரணத்தினால் அத்வைத மோக்ஷமும் ஒருவாறு சூசிப்பிக்கப்பட்டதாயும் கொள்ளலாம்.

அத்வைத மோக்ஷஸித்தாந்தத்தில் ஜீவனானவன் பரமாத் மாவைக் காட்டிலும் வேறுபட்டவனல்ல. முன்னும் அப்படியே பின்னும் அப்படியே. நடுவில் தான் வாழ்க்கை நதி ஓடுகிறது என்பது 5-வது உதாரணத்தில் நன்கு விளக்கப்பட்டிருக் கிறது. தத்வமஸி வாக்யத்தின் அனுபவம் சித்திரிக்கப்படுகிறது. ஆதலால்தான்,

स्वस्वरूपानुसन्धानं भक्तिः।

என்று ஸ்ரீமத் ஆசார்யார்கள் அருளினார்கள்.

“நீலமாமிடற் றாலவாயினான்
பால தாயினார் ஞாலம் ஆள்வரே”

—திருஞானசம்பந்தர்.

718.

திருநாவுக்கரசும் திருவள்ளுவரும்

பேராசிரியர், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை M.A., B.L., அவர்கள்,

அண்ணமலை நகர்.

மேலையோர் நாகரிகத்தின் விளைவு. தென்னாட்டார் நாகரிகம் சிவபெருமானிடத்திலிருந்து கற்றுக் கொண்டது. மண்ணிலே விண்வாழ்வு நண்ணும். நஞ்சுண்டும் சாவா நாதனுக்கு அடியவரும் நஞ்சுண்ணும் ஆற்றலுடையர். அதற்கு மேல்நாட்டு முனிவரும் அப்பரும் சாட்சியாவர்.

துணையாசிரியர்.

மேல்நாட்டு உடையணிந்து, உச்சியைப் பார்த்து நடந்து, முரட்டுத்தனமாய் எதற்கும் முந்திக்கொண்டு, தனக்குமட்டுமே இவ்வுலகம் இருப்பதாகத் தலைதருக்கி, முன்னுலிருப்பவர் காலையும் சமட்டிவிட்டு, அதற்கு வருந்தாது வெறும் சீறலும், உறுமலும் தோற்றுவிப்பதே நாகரிகம் என்று கருதும் இந் நாளில், திருக்குறளைப் படிப்பதே அரியகாரியம். மேலும், அதன்படி நடப்பது என்பது மிகவும் அரிய காரியம். அப்படியே படித்தபடியே நடப்பதாய் இருந்தாலும், ஒருகுறளின்படி ஒருவராலும் நடக்கவே முடியாது. அது என்னகுறள்? இதோ வருகிறது பாருங்கள்!

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

திருக்குறள் தோன்றியகாலத்திலிருந்து இதுவரையும் இந்தக் குறளின்படி ஒரே ஒருவர்தாம் நடந்துகாட்டியிருக் கிறார். அவர் வேறு யாருமில்லை. திருநாவுக்கரசரே தாம்.

மனிதனை அமரனாக வாழச்செய்ய வேண்டுமென்பது திரு வள்ளுவரின் ஆசை. அந்த நோக்கத்துடனேயே அவர் திருக்குறள் நூலை எழுதினார். மனிதன் மக்கட்பண்புடனே உலகில் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்ந்துவிட்டால் அவன் தேவனே தான் என்பது வள்ளுவரின் நம்பிக்கை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

719

என்ற அவர் வாக்காலேயே நாம் இதனை அறியலாம். வானுறை யும் தெய்வத்துள் வைக்கப்படும் என்பதற்கு, வானோர்களோடு வாழ்வதற்காகத் தேவலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவான் என்பது கருத்தன்று: வானோர்க்கு ஒத்த மதிப்புடையவனாய் இவ்வுலகிலேயே போற்றப்படுவான் என்பதாம். அப்படிவெறும் அமரனாகமட்டும் மனிதன் மாறினால் போதாது. ஆதிசிவனைப் போன்ற ஆற்றலும் பண்பும் மனிதன் அடைந்துவிட வேண்டும் என்பது திருவள்ளுவரின் உயர்வுள்ளல். அதற்காக அரனார் செய்த செயற்கரியதொரு செயலை எடுத்துக்காட்டி, அதுவே நாகரிக மனிதனுடைய உன்னதக் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று உரைத்தார்.

திருப்பாற்கடல் கடையப்பட்டபொழுது அமுதத்துடனே ஆலகால விடமும் பொங்கி யெழுந்தது. அது மூன்று உலகங் களையுமே வாரி உண்டுவிடும்போலிருந்தது. தேவர்கள் எல்லாரும் அஞ்சியோடி அரனைத் தஞ்சமடைந்தனர். அனைத்துயிர்களும் உய்யவேண்டிச் சிவபெருமான் சாவைத்தரும் நஞ்சை அயின்று சாவாமருந்தாகிய அமுதத்தை அமரர்க்கு அளித்தார். அவர் இரங்கிய சிந்தையினால் அவ்வாறு செய்தார். அவ்விரக்க மாகிய கண்ணோட்டமே நாகரிகத்தின் சிகரம், நாகரிகத்தின் சின்னம், நாகரிகத்தின் வெற்றி எனக்கொண்டார் திரு வள்ளுவர். சாவாமருந்தாகிய அமுதத்தை உண்டாலும் இறப்பு வருங்கால் இறந்தே தொலைந்தனர் தேவர்கள். பிழைத்தார்கள் இல்லை. ஆனால் சாவைக்கொடுக்கும் கொடியநஞ்சை உண்டா லும், தாம் சாவாமல். என்றும் நிலையாகவீற்றிருந்து அமுதுண்ட அமரர்க்கும் எல்லோர்க்கும் அருள்புரிந்தார் சிவபெருமான். இதனை இளங்கோவடிகளும் சிலம்பில் எடுத்து இயம்பினார்:-

> "விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
> உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்"

ஆகா! வேறு எந்தக்கடவுள்தான் இப்படி நஞ்சை உண்ண முடிந்தது? சிவபெருமான் ஒருவருக்குத்தான் அது கைவந்தது. இதனால் அவர்ஒருவரே ஒப்பற்ற ஒருதனி முழுமுதற்கடவுள் என்பது நன்கு விளங்க வில்லையா? ஆதலால் அக்கடவுளுக்கே நாம் அடிமையாகித் தொண்டுசெய்தல் வேண்டும் என்று பாடினார் திருநாவுக்கரசர்:-

"பொங்கி நின்றெழுந்த கடல் நஞ்சினைப்
பங்கி உண்டதோர் தெய்வமுண் டோசொலாய்
தொங்கி நீயென்றுஞ் சோற்றுத் துறையர்க்குத்
தங்கி நீபணி செய்மட நெஞ்சமே"

நாகரிகத்திற்கு இலக்கணம் வகுத்த திருக்குறளுக்கு இலக்கியம் போன்று (அருள்) உலகிலே சிவபெருமான் திகழ்கின்றார். அதற்கு இலக்கியமாக மண்ணுலகிலே சிவனடியாரும் தலையான மனிதருமாகிய திருநாவுக்கரசர் ஒருவரேதாம் காட்சியளிக்கின்றார். நீற்றறையிலே இறவாது பிழைத்துக்கொண்ட திருநாவுக்கரசருக்குச் சமணர்கள் பாற்சோறுடன் நஞ்சைக் கலந்து கொடுத்தார்கள். சமணர் செய்த வஞ்சனை அப்பருக்கு நன்றாகத் தெரிந்தது. அப்பர் உடனே உண்ண மறுத்திருக்கலாம். ஆயினும் அவர் மறுத்தாரல்லர். அவருடைய நாகரிகம் வாய்ந்த உள்ளம் மறுக்க மறுத்துவிட்டது. பிறர் விரும்பிய ஒன்று தம் உயிருக்கே உலைவைப்பதாயிருந்தாலும், அதை மாட்டேன் என்று மறுத்து அவர் முகம் கோட்டமும் வாட்டமும் கொள்வதைக் காண அப்பர் மனம் நாட்டமுறவில்லை. சிவனை நம்பினவர்களுக்கு நஞ்சும் அமுதமாகும் என்று சொல்லி, மலர்ந்த முகத்துடன் இருகையாலும் வாங்கி உண்டு விட்டார்:—

"நஞ்சும் அமுதாம் எங்கள் நாதனடியார்க் கென்று
வஞ்ச மிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்கும் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பாலடிசில் மிசைந்து இருந்தார்

என்பது சேக்கிழார் திருவாக்கு, ஆகவே அப்பரடிகள் இன்னதென்று தெரியாது வாங்கி உண்டு விடவில்லை. 'பெயக்கண்டும், என்ற குறளின் சொற்பொருளுக்கேற்ப விடமூட்டிய உணவு. என்பதைத் தெரிந்தே விரும்பி ஏற்றுக்கொண்டார் நாகரிக அடிகளான நாவுக்கரசர். 'இருந்து அருள் செய்குவாய்' என்று இளங்கோவடிகள் கூறியதுபோல். சேக்கிழாரும் இங்கு' 'மிசைந்து இருந்தார்' என்று கூறியது அறிதற்பாலதாம். நஞ்சை உண்டும் அப்பர் சாவாது பிழைத்திருந்தார். சிவபெருமானுக்கு மூன்றுலகங்களையும் அழிக்கவல்ல ஆலகாலம் போன்ற கொடிய விடமே அமுதமாயிருந்ததென்றால், அக்கடவுளின் அடியாராகிய அப்பருக்குச் சமணர் தந்த சாதாரண நஞ்சு அமுதமானது ஓர் ஆச்சரியமானது என்று நயம்படக் கூறினார் சேக்கிழார்:—

721

"பொடியார்க்குந் திருமேனிப் புனிதர்க்குப் புவனங்கள்
முடிவார்க்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானல்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ"

மூன்றுலகங்களுக்கும் ஏற்பட்ட துயரைப் போக்குவதற்காக நாகரிகஉள்ளத்தோடு சிவபெருமான் ஆலயத்தை அருந்தினர். பல்லவ மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டுத் தமக்கு நஞ்சைக் கொடுத்த ஏவலாளருக்குத் துயர் வாராதிருக்கவும், சமணிருள் நீங்கவும், சிவனருள் ஓங்கவும் வேண்டி நாவுக்கரசர் நஞ்சை அருந்தினர். இது வரலாற்று உண்மையோ, அல்லது புராணப் புளுகோ என்று சிலர் ஐயம் கொள்ளலாம். சேக்கிழார் கூறும் இச்செய்திக்கு ஆதாரம் அகச்சான்ருக அப்பர் தேவாரத் திலேயே நமக்குக் கிடைக்கிறது. நமச்சிவாய மந்திரத்தை ஓதி நஞ்சமும் அமுதாகும்படி தாம் உண்ட செய்தியை அப்பர் பின்வருமாறு பாடியுள்ளார்:—

"துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதில் நாளும் அரனடிக் கன்பதாகும்
வஞ்சனை பாற்சோருக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே"

இது உண்மையாயிருக்கலாம். ஆயினும் அப்பரடிகள் ஒருவர் தாம் இந்த நாகரிகக் குறளுக்கு இலக்கியம் என்று எப்படிச் சொல்லமுடியும்? மேலை நாட்டில் சிறந்த கிரேக்க அறிஞராய் விளங்கிய சாக்கிரடீசு என்பவர் தம்பகைவர் கொடுத்த நஞ்சினைத் தெரிந்துகொண்டே வாங்கி உண்டார். அவரையும் நாகரிகராகக் கொள்ளலாம், அவரை ஏன் சொல் லக்கூடாது? என்று கேட்கலாம். உண்மையே. அவரும் நாகரிகம் வாய்ந்தவர் தாம். ஆயினும் இந்த நாகரிகக் குறளுக்கு அவர் சிறந்த இலக்கியமாகமாட்டார். சாக்கிரடீசு நஞ்சை உண்டதும் இறந்துபோனர். உயிர் பிழைக்கவில்லை. திருவள் ளுவர் 'நஞ்சு உண்டு அமைவர்' என்று கூறினர். 'நஞ்சு உண்டு அழிவர்' என்று கூறவில்லை. அமைவர் என்றது, நஞ்சு பெய் தவரோடு பொருந்தி (மேவி) இருத்தலைக் குறிக்கும். அதற்கு உயிர் பொருந்தி (மேவி) இருத்தல் வேண்டும். நாவுக்கரசர் நஞ்சு உண்டு இறவாது அமைவதானர். இதனல் நாவுக் கரசரின் நனி நாகரிகம் நன்கு புலனகும்.

உ
சிவமயம்

கடவுள் வழிபாடு ஏன்?

மதுரகவி

உலகில் உடற்குப் பலபிணிகள்
உற்ருல் மருந்து கொண்டொழிப்பார்
அலகில் பிணிக்கும் மருந்துகள்உண்
டாளுல் உயிர்க்கு வரும்நோய்கள்
விலகி யொழிய ஒருமருந்தும்
விண்ணும் மண்ணும் கண்டிலரே
இலகி உயிருக் குயிராகி
இருக்கும் கடவுள் அருள்ஒன்றே. 1

அறியா மைக்கும் மருந்துண்டென்
றளிக்கும் மருத்து வனும்உளனே?
நெறியால் வழிபட் டருள்வேளூர்
நிமலனே அவ் வைத்தியனும்
வெறியால் கடவுள் வழிபாடே
வேண்டா என்னும் வீணர்க்குப்
பொறியால் வரும்ஐம் புலனன்றிப்
புவியில் காண்ப தொன்றுண்டோ? 2

யான்என் றெனதென் றிடுஞ்செருக்கை
யாவர் ஒழிக்கும் வலிமையுளார்?
ஊன்என் றெண்ணி ஒழிந்துணர்வால்
உயரும் ஞானிக் குவமை எவர்?
தேன்என் றமுதென் றுளத்தினிக்குந்
தெய்வந் தொழாத மாக்களெலாம்
மான்என் றியலே மதித்துப்பெண்
மயல்தீர் வழியும் அறிவாரோ? 3

வினையும் பிறப்பும் இறப்புமுற
விளைக்கும் அகந்தை மமதைக்கு
முனையும் மடமை ஒன்றேதான்
முதல்வித் தந்தப் பேதைமையைத்
தினையும் இல்லா தொழிப்பதுவே
தெய்வந் தொழுதல் எனுமருந்து
அனையும் பிதாவும் எவ்வுயிர்க்கும்
ஆகுய் அதனின் பெரிதுண்டோ? 4

723

தேவர் குறளும் மூவர் தமிழும்

வித்துவான், திரு. மு. நடராஜ தேசிகர் அவர்கள்
தமிழாசிரியர், துறைசையாதீனம் ஹைஸ்கூல், திருவிடைமருதூர்.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

"அஞ்சினால் இயற்றப்பட்ட வாக்கை பெற்றதனுள் வாழும்
அஞ்சினால் அடர்த்தப்பட்டிங் குழிதரும் ஆதனேனை
அஞ்சினால் உய்க்கும் வண்ணங்காட்டினாய்க் கச்சந் தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்த சென்னி யதிகை வீரட்டனீரே"

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் இவைகளால் பொருந்திய சரீரத்தைப் பெற்று, சுவை: ஒளி, ஊறு, ஓசை நாற்றம் என்ற இவைகளால் துன்புறுத்தப் பெற்று அல்லற் படும் அறிவில்லாத என்னை, அஞ்செழுத்தாம் பஞ்சாக்ஷரத்தால் உய்யும் வண்ணம் அருள் செய்தாய். ஐந்து திருமுகம் உடைய திருவதிகையில் எழுந்தருளியுள்ள பெருமானே,

"பொறிவாயில் இவ்வைந்தினையும் அவியப்
பொருதுன் னடியே புகும்"

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

இறைவன் அடியென்னும் புணையைச் சேர்ந்தார் பிறவி யாகிய பெரிய கடலை நீந்துவார். அதனைச் சேராதார் நீந்த மாட்டாராய் அதனுள் அழுந்துவர்.

"அற்றார் பிறவிக்கடல் நீந்திமுயறி" (புற்றுடரவம்)

உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

ஒருவருக்குச் சாக்காடு வருதல், உறக்கம் வருதலோடு ஒக்கும். அதன்பின் பிறப்பு வருதல் உறங்கி விழித்தல் வருத லோடொக்கும்.

உறங்குதலும் விழித்தலும் உயிர்கட்கு இயல்பாய்க் கடிதின் மாறி மாறி வருமென்பது கருத்து.

"ஓடுபுனற்கரையாம் இளமை உறங்கி விழித்தால்
ஒக்கும் இப்பிறவி" (கோடுயர்)

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

ஒருவன் நெருநல் உளனாயினான் அவனே இன்று இல்லை யாயினானென்று சொல்லும் நிலையாமையை யுடைத்து இவ் வுலகம். ஈண்டு உண்மை பிறத்தலையும் இன்மை இறத்தலையும் உணர்த்தி நின்றன.

இன்றுளார் நாளையில்லை யெனும் பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள்
அன்று வானவர்க்காக விடமுண்ட
கண்டனார் காட்டுப் பள்ளிகண் டுய்ம்மினே." —அப்பர்.

"இன்றுளேன் நாளையில்லேன் என்செய்வான் தோன்றினேனே"
—அப்பர்.

"இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியாயிருப்பக் காய்கவர்ந்தற்று"

அறம்பயக்கும் இனிய சொற்களும் தனக்குளவாயிருக்க அவற்றைக் கூறாது பாவம்பயக்கும் இன்னாதசொற்களை ஒருவன் கூறுதல் இனியகனிகள் தன்கைகளில் உளவாயிருக்க அவற்றை நுகராது இன்னாத காய்களை நுகர்ந்ததனோடொக்கும். இனிய கனிகளென்றது ஔவையுண்ட நெல்லிக்கனிபோல அமிழ்தான வற்றை. இன்னாதகாய்களென்றது காஞ்சிரங்காய் போல நஞ்சானவற்றை. கடுஞ்சொல் சொல்லுதல் முடிவில்தனக்கே இன்னாதென்பதாம்.

"கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வனேனே"

"இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணேயுள."

725

யான் வறியே னென்று இரப்பான்சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கட்சொல்லாமையும், அதனைத் தன்கண் சொன்னூர்க்கு மாற்றுதீதலும், இவையிரண்டும் உளவாவன குடிப்பிறந்தான்கண்ணே.

இலனென்னும் எவ்வம் உரையாமையீதல் என்பதற்கு அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் செப்புவதற்குமுன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தலெனவும், அதனைப் பின்னும் பிறனொருவன்பாற் சென்று அவனுரையா வகையால் கொடுத்தலெனவும் உரைப்பாரும் உளர்.

'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்.

தம்முடைய பொருளை ஈயாது வைத்துப் பின்னிழந்துபோம் அருளிலாதார், வறியார்க்கு வேண்டியவற்றைக் கொடுத்து அவருவத்தலால் அருளுடையார் எய்தும் இன்பத்தினைக் கண்டறியார் கொல்லோ.

அறிந்தாராயின் தாமும் அவ்வின்பத்தை எய்துவதல்லது வைத்திழவாரென்பது கருத்து.

"நன்மையராம் நாரணனு நான்முகனும் காண்பரிய
என்றிவர்கள்
தொன்மையான் தோற்றங்கே டில்லாதான் தொல்கோயில்
இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்ன தீந்துவக்குந்
தன்மையார் ஆக்கூரிற் றான்றோன்றி மாடமே." -சம்பந்தர்.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
அஞ்சும் அகத்தே நகும்.

வஞ்சகம் பொருந்திய மனத்தை யுடையவரது மறைந்த வொழுக்கத்தை உடம்பாய் அவரோடு கலந்துநின்ற பூதங்கள் ஐந்துங்கண்டு தம்முள்ளே நகும்.

"கள்ளனேன் கள்ளத்தொண்டாய்க் காலத்தைக் கழித்துப்
போக்கி

தெள்ளியே ஞகிநின்று தேடினேன் நாடிக்கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந் தறிதியென்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே"

(அப்பர்)

" சலத்தாற் பொருள்செய் தேமார்த்தல் பசுமட்
கலத்துணீள் பெய்திரீ இயற்று"

அமைச்சர் தீயவினைகளால் பொருள்படைத்து அதனுல் அரசனுக்கு ஏமஞ்செய்தல், பசிய மட்கலத்துள்ளே நீரைப் பெய்து அதற்கு ஏமஞ் செய்தததனே டொக்கும்.

" சலத்திஞற் பொருள்கள் வேண்டுதல் செய்யாத்
தன்மையோர் நன்மையால் மிக்க
உவப்பில்பல் புகழார் ஓமமாம்புலியூர்
உடையவர் வடதளி யதுவே."

—ஓமமாம்புலியூர் மருநீர்மை (சம்பந்தர்)

முன் ஆக்கம் பயப்பனபோற்ருேன்றிப் பின் அழிவே பயத்தலால் அவை சலமெனப்பட்டன. ஏமமார்த்தல் என்பது ஏமார்த்தல் என்ருயிற்று. ஏமத்தையடையப் பண்ணுதல் என்றவாறு. இருத்துதல்—நெடுங்காலம் இருப்பச் செய்தல். அரசனும் பொருளும் சேரப்போம் என்பதாம்.

பழமும் சுவையும், மலரும் மணமும், தீயும் சூடும் பண்ணும் இசையும் போலச் சிவத்தொடும் அத்துவிதம் அடைவர் சுத்தாத்துவித சைவசித்தாந்த முத்தி பெற்றவர்.

" முத்திதனை அடைந்தோர் முந்துபழம் போதங்கி
வித்தகமாம் வீணை இவையற்றின்—ஒத்த
இரதமணம் வெம்மை எழில்நாதம் போல
விரவுவர்என் ருேதும் விதி"

உண்மை விளக்கம், 45.

நாணத்தாள்

சென்னை யூனிவர்ஸிடி ஆராய்ச்சியாளராயிருந்த பன்மொழிப்புலவர்

ஸ்ரீ வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்

மயிலை

பெரும் புலவர் தங் காப்பியத்தைக் கற்போர் இடைவிடாது கற்றற்கு விழையுமாறு சுவையை யமைத்து நயமுற இயற்றுவார்; அதுவேயன்றி, காப்பியத் தலைவர் முதலியோரின் வரலாறுகளைக் கூறுமாற்றான், நல்லதன் நலனும் தீயதன் தீமையும் நன்கு விளங்கும் வண்ணந் தெரிவிப்பர். இனி, தங்காலத்து மக்களின் நடையுடை உணவுகளையும் பழக்கங்களையும் பிறவற்றையும் இடம் நோக்கி அமைப்பது வழக்கம், சிலர் தங்காலத்தில் வழக்காறுயில்லாதவற்றையும் தமது கற்பனைத்திறத்தால் உலகம் ஒப்புமாறு இயைபுற இயைத்தலும் உண்டு. இவற்றால், சிறந்த காப்பியங்களைப் படிப்போர் காப்பியச்சுவை நுகர்தலேயன்றி, அறம்பொருள் இன்பங்களின் திறனையும், அப்புலவர் காலத்து மக்கள் வழக்காறுகளையும் ஓராற்றான் அறிதலும் கூடும். ஆகலின், ஈண்டு, கம்பராமாயணத்திற் கூறப்பட்டுள்ள செய்தியொன்றனை நோக்குவோம்:

இராமபிரான் திருமணச் செய்தியை அறிவுற்ற தசரதர் தேவியரோடும் வசிட்டர் அமைச்சர்கள் படைவீரர்கள் முதலியரோடும் மிதிலைக்குப் புறப்பட்டார். அதனையறிந்த நகரமாந்தர் பலரும் திருமணங்காண விழைந்து உடன் சென்றனர். அவர்கள் வழியில் ஆங்காங்குத் தங்கிச் சிலநாட்களில் மிதிலையை அடைந்தனர். அயோத்தியிற் புறப்பட்டவர்கள் வழியிடைத் தங்கி மிதிலை புக்கனர் என்பதுவே வரலாறு. ஆயின், அவர்கள் வழியிடைத் தங்கியிருந்த மலையின் வளத்தினையும் பொழிலின் சிறப்பினையும் அங்கு பூக்கொய்து விளையாடிய நிகழ்ச்சியினையும் நீராட்டு உண்டாட்டு முதலியவற்றையும் கம்பநாடர் விரிவாகக் கூறிச் சுவையுற அமைத்துள்ளார். இவையெல்லாம் வான்மீகத்திற் கூறப்படாதனவே, ஆகலின் இவற்றால், கம்பநாடர் பல்வேறு திறத்து மக்களின் ஒழுகலாறுகளையெல்லாம் ஊன்றி நோக்கி நன்கறிந்தவர் என்பது தெளிவாகும்.

728

வெண்ணில வெறிக்குந் தண்ணிய இரவில், செறிமலர்ப் பொழிலில் நறவருந்த அமர்ந்த மக்களின் செய்கையை உரைக்கும் ஆசிரியர், மகளிர் சிலரது செய்கையைக் கூறும்வழி, ஒருத்தி நறவருந்திய செயலினை,

> தேன்றரு கமலச் செவ்வாய் திறந்தனள் நுகர நாணி
> ஊன்றிய கழுநீர் நாணத் தாளினல் ஒருத்தி உண்டாள்'

என்று கூறியுள்ளார். அஃதாவது பலர் ஒருங்கே அமர்ந்து உண்ணுமிடத்து நாணத்தாள் ஒருத்தி வாய்திறந்து தேன்பருக நாணி, கழுநீர் நாணத்தாளினை அத்தேன்கலத்தில் ஊன்றி, அதனால் தேனை உறிஞ்சிப் பருகினள் என்பது. இதனால், மது முதலிய இனிய பானம் பருகுவோர் பலர் ஒருங்கமர்ந்து பருகும் போழ்து குழலால் உறிஞ்சிப் பருகும் வழக்கம் அறியவருகின்றது. பானத்தைக் குழலாற் பருகும் வழக்கை இக்காலத்தில் நகர மக்கள் பலரும் அறிவர். ஆயின், கம்பர் காலத்தில் இவ்வழக்கு விருந்துக் கூட்டத்தில் நிகழ்ந்துவந்தது என்று துணிதற்கு வேறு சான்று இல்லை. பெரும்புலவர், தம் முள்ளத்தில் தோன்றும் புதுக் கருத்துக்களை இயைபுறத் தம் நூலில் அமைத்தல் உண்டு. தங்காலத்தில் இல்லாத ஊர்தி முதலியவற்றை ஆங்கிலப் பெரும்புலவர் தங்காப்பியத்திற் கூறியிருப்பது ஈண்டைக்கு அறிதற்பாலது. கம்பநாடர் இவ்வாறு கூறியுள்ள புதுக்கருத்துக் கள் பலவற்றை அவர் இராமாயணத்தில் ஆங்காங்கு அறியலாகும்.

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும் செயர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றுஎனத் தொல்லோர் கிளவி" (தொல்காப்பியம், பொருள். 111.) எனத் தொல்காப்பியரே 'தொல்லோர் கிளவி' என்று கூறியதால், நம்நாட்டின்கண் நாணுக்கு இருந்த சிறப்பு நன்கு விளங்கும். உயிரினும் காக்கத் தக்கது நாணம். "நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால் நாண்துறவார் நாண்ஆள் பவர்" (குறள்) அந்த நாணத்தினும் சிறந்தது கற்பு, இரண்டும் இக்காலத்தில் எங்கு உள? படக் காட்சியில் ஒளித்துக்கொண்டனவோ?

729

<u>சிறுகதை:</u>

நண்பருடன் ஒருநாள்

நெல்லை, ம. சிவசம்பு

தாய்சொல் துறந்தால் வாசகம் இல்லை. "மேன்மக்கள் சொற்கேள்"; திருவருட்பாக்கள், "சிந்தைக்கினிய செவிக் கினிய வந்த இருவினைக்கும் மாமருந்து" ஆகும்.

துணையாசிரியர்

படிப்பை முடித்துவிட்டு ஊர் திரும்பிய எனக்கு என் பழைய நண்பன் சுந்தரத்தைப் பார்க்கவேண்டும் என்று ஆசை எழுந்தது. மாலைச் சிற்றுண்டியை முடித்துவிட்டு அவனது வீடு நோக்கி நடந்தேன். வழியில் பல நண்பர்களிடம் பேசி விட்டுச் சுந்தரத்தின் வீடு வருவதற்குள் இருட்டிவிட்டது. மெதுவாக, சுந்தரம் என்று அழைத்தவாறே வீட்டிற்குள் சென்றேன். நான் கண்ட காட்சியை என்னால் நம்பவே முடிய வில்லை. சுவரில் அவனது பெற்றோர்கள் புகைப்படம் மாட்டப் பட்டிருந்தது. அவை நல்ல மாலைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. அதன் அடியில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று எழுதப்படிருந்தது. ஊதுதிவர்த்திகள் அறை முழுவதும் வாசனையைப் பரப்பிய வண்ணம் புகைந்து கொண்டிருந்தன. பக்கத்தில் இருந்த குத்து விளக்கு, சுந்தரத் தின் முகத்தை நன்கு எடுத்துக்காட்டியது. அவன் கண்களில் கண்ணீர் வடிந்த வண்ணம் இருந்தது. நான் வந்ததைக்கூட அவன் கவனிக்கவில்லை. சுந்தரம் என்று உரத்துக் கூப்பிட் டேன். அது கேட்டு மெள்ள இடத்தைவிட்டு எழுந்தான் சுந்தரம். என்ன இதெல்லாம் புதுமையாக இருக்கிறது; அம்மா எங்கே போய்இருக்கிறாள் என்று கேட்டேன். சுந்தரம் ஓவென்று அழுதான். எனக்கு அப்பொழுதுதான் சுந்தரத்தின் தாய் வேற்றுலகத்திற்குப் போய்விட்டாள் என்று ஊகிக்க நேர்ந்தது. பின் ஒருவாறு அவனைத் தேற்றி அம்மா உடம்புக்கு என்ன வியாதி என்று கேட்டேன். அம்மாவுக்கு ஒன்றும் வியாதி இல்லை. நான்தான் அவளுக்கு எமனாக வந்து சேர்ந்தேன் என்று சொல்லிச் சுந்தரம் அழுதான். சுந்தரம்! வருந்தாதே! என்னநடந்தது சொல் என்றேன். அவன் அழுது கொண்டே நடந்ததைச் சொன்னான்.

நம்பி! நீ இங்கிருந்து சென்று சில தினங்கள் கழிந்ததும் நான் கட்சியின் முழுநேர ஊழியனுக மாறினேன். படிக்கும் பொழுது எதிலும் தலையிடாதே! படிப்பு முடிந்தபின் உன் விருப்பம்போல்நட என்று அம்மா எவ்வளவோ எடுத்துச் சொன்னுள். நான் அப்பொழுது அடைந்த பெயரையும் புகழையும் உண்மை என்று நம்பினேன். அம்மாவின் சொல்லைத் தட்டிவிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டேன். சென்ற வருடம் இதே மாதம் இந்த நாளில் அம்மா என்னுடன் இருந்தாள். அன்று இரவு நான் போராட்டத்தின் தலைமைப் பதவியை ஏற்றதால் வீட்டை விட்டுப்புறப்பட்டேன். அம்மா போகாதே என்று சொல்லித்தடுத்தாள். என் காலைப்பிடித்துக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். ஆனுல் தாயாரை அப்பால் தள்ளி விட்டு நான் நாட்டிற்காகப் பாடு படுகிறேன் என்று பெருமையுடன் சென்றேன். அப்பா இருந்தால் நீ இவ்வாறு நடப்பாயா என்று கேட்டவாறே அப்பாவின் புகைப்படத்தருகில் சென்று என்னை யும் உங்களுடன் அழைத்துச் செல்லாமல் போய் விட்டீர்களே என்று அழுதாள். நான் என்னசெய்வது என்று யோசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு நண்பன் வந்து கூப்பிடவே தொண்டர் இருக்கும் இடத்தை அடைந்தேன், இரவு முழுவதும் எவ்வாறு போராட்டத்தை வெற்றியாக முடிப்போம் என்று வழிகள் வகுத்தோம். பொழுது விடிந்தது.

தொண்டர்கள் புடைசூழ நான் புகைவண்டி நிலயம் நோக்கி நடந்தேன். அங்கிருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டேன் எல்லை இல்லா மகிழ்ச்சி அடைந்தேன். சுந்தரம் வாழ்க! தமிழ் வாழ்க! சுயநல ஆட்சி ஒழிக! என்று தொண்டர்கள் முழுங்கிக் கொண்டே வந்தார்கள். அது எனக்கு மேலும் வீரத்தையும் புதிய சக்தியையும் கொடுத்தது, நான் புகை வண்டி நிலயம் அடைந்து வண்டியின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தேன். சிறிதுநேரத்தில் வண்டி வந்தது. நான் தொண்டர்களுடன் சென்று புகை வண்டியின் முன் பக்கம் படுத்துக்கொண்டேன். மக்கள் ஆரவாரம் செய்தனர். தமிழ் வாழ்க! என்ற சொற்கள் என் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தன! புகைவண்டி செல்லும் நேரம் வந்தது. எனது உடல் நடுங்கியது. கண்களை நன்ருக மூடிக்கொண்டேன், கண்டிப்பாய் இறந்து விடுவேன் என்று நினைத்தேன்! தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! என்று வாய் முணு முணுத்தது. அந்த நேரத்தில் ஒரு

போலீஸ் அதிகாரி என்னையும் தொண்டர்களையும் புகை வண்டிக்கு வழி விடுமாறு வேண்டினர். நான் எங்கள் உயிர் போனாலும் எழுந்திருக்க மாட்டோம் என்று கூறினேன். மக்கள் ஆரவாரத்துடன் எங்களை உற்சாகப் படுத்தினர். அதைக்கண்ட போலீஸ் அதிகாரி எங்களைப் பலாத்காரமாகத் தண்டவாளத்திலிருந்து அகற்றமுற்பட்டார். என்னைக் கையைப் பிடித்து இழுத்தார். இந்த நேரத்தில் கூட்டத்தில் பரபரப்பு அதிகமாகியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு சில காலிகள் கற்களை புகை வண்டியின் மீது வீசினார்கள். கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. கூட்டத்தை நோக்கிக் கலைந்து செல்லும் படி போலீஸார் எச்சரிக்கை செய்தார்கள். கூட்டம் கலையவில்லை. போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள்.

சுந்தரம்! சுந்தரம்! என்று சப்தம் கேட்ட பக்கம் நான் திரும்பினேன். வேறு யாருமில்லை என் அன்பின் சிகரமான என் தாய் தான் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அம்மா, இங்கே வராதே என்று கத்தினேன். அந்த நேரத்தில் ஒரு கல் என் தலைமீது விழுந்தது. இரத்தம் ஆறாக ஓடிவந்தது. இதைக் கண்டதாய் ஓடோடியும் வந்தாள் அந்தச்சமயம் பார்த்து, போலீஸார் கூட்டத்தை நோக்கிச் சுட்டனர். ஒரு குண்டு என் தாயின் இதயத்திலே பாய்ந்தது. சுந்தரம்! என்து கத்தியவாறே என்னை விட்டு அவள் போய் விட்டாள். அன்றே நானும் சிறைக்கு அனுப்பப்பட்டேன். விடுதலை பெற்று வந்து ஒருமாதம்தான் ஆகிறது. நம்பி, எனக்கு இப்பொழுது யாரும் துணையில்லை மனத்தில் நிம்மதியும் இல்லை, என் வாழ்நாள் வீணாகப் போய் விட்டது. எனக்கு ஆறுதல் இல்லை. அன்பாகத் தேறுதல் சொல்ல அம்மாவும் இல்லை' தந்தை தாய் அற்ற நான் எப்படி வாழ்வேன் எனக்கு வேறு திக்குயாருமில்லை என்று சொல்லி அழுதான்!

சுந்தரம் நடந்தது நடந்து விட்டது? வருந்திப் பயன் என்ன, என்று தேற்றினேன். அந்த நேரத்தில் பக்கத்து வீட்டிலிருந்த தாத்தா,

"ஆறுதலை இல்லை அடியேனுக்கு அன்பாகத்
தேறுதலைச் சொல்வார் சிலரில்லை – வேறெனக்குத்
திக்காருமில்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை" (சொக்கநாத வெண்பா)

என்றபாட்டைப் பாடிக் கொண்டிருந்தார். அது சுந்தரத்தின் காதிலும் நன்றாக விழுந்தது. அதனால் நான் சுந்தரத்தை நோக்கினேன். சுந்தரம் வெள்ளென்றிருந்த ஆகாயத்தை நோக்கிய வண்ணம் நின்று கொண்டு இப்பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான். அருள் வாக்கு எப்போதும் இன்பம் விளைக்கும் என்பதை அன்றுதான் நானும் நம்பினேன்.

அன்புடைமை

வித்துவான், திரு. கே. எம். கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்கள்
தமிழாசிரியர், ஸ்ரீ குமரகுருபரன் உயர்பள்ளி, ஆடுதுறை.

சிவனுக்கு அன்புடைமை, சிவனடியாரிடத்துக்கொள்ளும் அன்பினளவால் தெளியப்படும். அடியாரிடத்து அன்பில்லையேல் சிவபக்தியுடையவர்போல் ஒழுகும் செயல்நாடகமே. எவ்வுயிரிலும் இருக்கும் சிவனிடத்தில் அன்புடையவரே எவ்வுயிர்க்கும் அன்புடையராவர். இவ்விடங்களில் அன்பு இல்லாதவர் தம்உயிர்க்கு உறுதி தேடிகொள்வாரல்லார் "அன்பிலார் எல்லாம் தமக்கு (— தம்உடம்பிற்கு) உரியர்"

துணையாசிரியர்.

யாவர்க்குங் காண அரிய இறைவன் அன்பர்க்குமட்டும் எளியவன். இவ்வுண்மை திருமுறைகளுள் பல இடத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. 'அளவறுப்பதற்கு அரியவன் இமையவர்க்கு, அடியவர்க்கு எளியான்' என்பது திருவாசகம். வன்னெஞ்சம் படைத்த கொலையாளியும் தன் அன்புடைய குழந்தை கொஞ்சும்போது இளகிய மனத்தானுகமாறுகின்றான். நல்லறிவு நிரம்பியவனுக்கு இல்லாத நல்ல பெயர் அன்புடையவனுக்குக் கிடைத்து விடுகின்றது.

இவ்வளவு மேன்மை அன்புக்கு இருக்கிறது, 'அன்பென்பதொன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்று' என்றார் கம்பர். அன்பென்ற பண்பு அநேகரிடம் உண்டு. அப்பண்பை வளர்ப்பவரும் உண்டு. புழுதிமாயத்தால் மறைப்பவரும் உண்டு. அன்பு எத்தகைய தாழ்க்கோல் இட்டாலும் வெளிப்பட்டுவிடும். திருவள்ளுவரும் இக்கருத்துடையவராகவே அன்பினுக்கும் அடைத்துவைக்கும் தாழ்ப்பாள் உண்டோ? கிடையாது. அது (அன்பு) உடையவரின் கண்ணீராய் வெளிப்பட்டுவிடும் என்ற பொருளை அடக்கி,

> அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும். குறள் - 7

(பூசல் - அன்பு. பூசலார் - நாயனார்).

733

என்ற குறளில் அமைத்துக்காட்டுகிறுர்.

இத்தன்மை அறியாதவர் உண்டென்றுல் - இந்நிலையெய்தா தவர் உண்டென்றுல் அவர் மனம் மரத்தினும் மரத்துப் போனது. மரக்கட்டை என்றும் கூறலாம்.

அன்பிலேயே முற்றிய சில உள்ளங்களை உன்னிப் பார்ப் போம். அன்புள்ளம் எதைக் கேட்டாலும் கொடுத்து விடுமாம். தேவேந்திரன் அரக்கர்களோடு பலமுறை போரிட்டு அலுத்துப் போனுன். அவர்களை எப்படி வெல்வது என்று தெரியவில்லை. தன் குருவைக் கேட்டான். அவர் ஒரு வழி சொல்லிக்கொடுத் தார். அவ்வண்ணம் தேவேந்திரன் தேவருலகினின்றும் இழிந்து நில உலகிற்கு வந்து சேர்ந்தான். அன்புள்ளம் படைத்த 'ததீசி' என்பவரைக் கண்டான். தன் குறையைக் கூறிக் குறையிரந் தான். அன்புமுகம் மலர்ந்தது. இந்திரனுக்கு ஆர்வமொழி பகர்ந்தார் முனிவர். தனது முதுகெலும்பைத் தந்து அதனுல் அரக்கரை அழிக்குமாறு பணித்து உயிர் நீத்தார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு குறள் - 72

என்ற குறளில் பின் வாக்கியமான 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்பதற்கு எடுத்துக்காட்டாகத் ததீசி முனிவர் அமைந்து என்றுமுள புகழை எய்திவிட்டார்.

இன்னெரு அன்புள்ளம் காளத்தியருகே தோன்றியது. கண்ணப்பனுய் நின்றது. பொத்தப்பி நாட்டு வேடுவர் குலத்தில் திண்ணப்பன் வேடர் குலத் தலைவன் மகனுய்ப் பிறந்தான். உரிய பருவம் அடைந்ததும் வேடர் குலத் தலைவனுக்கப் பட்டான். அவ்வமயம் வேட்டையாடச்சென்ற திண்ணப்பன் காளத்திமலையாரைக்கண்டு மனம் நெகிழ்ந்தான். இறைச்சி முதலிய படைத்து இறைவற் பணிந்து மீண்டான். அர்ச்சகர் வந்தார். இறைச்சி அருகில் படைக்கப்பட்டிருந்தமை கண்டு வருந்தி இறைவனிடம் முறையிட்டார். அவ்வமயம் அர்ச்சகர்க்கு இறைவர், நாளை வா நமது அன்பன் நிலையைக் காணலாம் என்று அருளினுர். மறுநாளும் வந்தது. திண்ணனும் வந்தான். இறைவன் மலையில் தனியாக இருப்பதைக்கண்டு நீர் தனி யாகவோ இருக்கின்றீர் என வினவும்படித் தூண்டியது அவன்

அன்புள்ளம். பின்னர் அவ்வன்பானது காளத்தியப்பர் கண்ணில் குருதிவடிந்தபோது தன் கண்ணையும் அகழ்ந்து இறைவர்க்கு அப்பச் செய்தது. கண்ணப்பன் என்ற தூய பெயரையும் பெறும்படிச் செய்தது. கண்ணப்பனொப்பதோர் அன்பின்மை என அன்பிற்குக் கண்ணப்பனே என்னும் புகழை உண்டாக்கியது. இத்தகைய அன்புடையார் எது கேட்டாலும் கொடுக்கத் தவறுவரோ? தவறார்.

உடம்புடன் உயிரும் ஒன்ற வைக்கப்பட்டுள்ளது. யாரால்? இறைவனால். ஒன்ற வைக்க எந்தப்பசை பயன்பட்டது? அன்பென்ற பசைதான், இக்கருத்தையே அழகாக அன்போடியைந்த "வழக்கென்ப ஆருயிர்க் கென்போடியைந்த தொடர்பு" என்ற குறளில் அமைத்துக் காட்டுகிறார்.

இவ்வன்பு உள்ளத்தை உருக்குகின்றது. கேட்டதையெல்லாம் தரச்செய்கின்றது. உடலுக்கும் உயிருக்கும் பசையாக இருக்கிறது என்றுமட்டும் கூறினால் போதுமா? அதுவே நற்பேர்த்திகளைக்கூட எடுக்கிறதாம். அன்பு என்றதாய் 'ஆர்வமுடைமை என்ற பெண்களைப் பெற்றாள். அவற்றுள் ஆர்வமுடைமை என்ற பெண் நட்பு என்ற குழந்தையைப் பெறுகிறாள். பெறவே அப்போது அன்பு என்பவள் பாட்டியாகத் தானே இருக்கவேண்டும். இதை,

அன்பீனும் ஆர்வமுடைமை. அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு. குறள்-74

என்று திருவள்ளுவர் முறைப்பட எடுத்துக் காட்டுகிறார்.

திருக்கடவூரிலே தோன்றினார் கலய நாயனார். அவர் அடியார்களுக்கு அன்னமிட்டார். ஆண்டவனுக்குத் தூபமிட்டார். பொருளெல்லாம் வற்றியன. வறுமையுற்றார். ஈகையரிய இழையணியாகிய தாலியையும் விற்றுத் தூபமிட்டார். அடியாரின் அன்பை உணர்ந்தான் ஆண்டவன். அவரது வீட்டிற்கு வேண்டிய பொருள்களையும் பெரு நிதியத்தையும் தானே வேலைக்காரன்போல் கொண்டுவந்து கொடுத்தான். இங்கே ஆண்டவன் அன்பிற்கு வெளிப்பட்டமை காண்க.

மகாமகோபாத்யாய, டாக்டர்

இது நிகழ்ந்த நாளிலே திருப்பனந்தாள் என்னும் திருப்பதியிலே ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. திருப்பனந்தாளுடையாராகிய செஞ்சடையப்பரை மனத்தில் கொண்டு அவரை மணக்க உறுதிபூண்டு நாளும் பூசை செய்துவந்தாள் தாடகைப் பிராட்டி என்ற ஆடகப்பாவை. அவரைச் சோதிக்க முற்பட்டான் இறைவன். ஒருநாள் பூசை செய்து இறைவனுக்கு மாலையிடும்போது பிராட்டியின் ஆடையை நெகிழச்செய்திட்டான். அன்புள்ளத்தைத் திறக்க முற்பட்டார் இறைவன். ஆடை நெகிழவே உடுக்கை இழந்தவரது கை தாமாகவே மாலையிடாது தாழ்ந்து தம் ஆடையினைப் பற்றிக்கொண்டது. எடுத்தமாலையினை கீழே வைத்தலும் கூடாது. ஆடையும் நெகிழ்கின்றது. என் செய்வார்? இறைவனைத் தலைதாழ்ந்து மாலை ஏற்றுக்கொள்ளும்படி அம்மையார் வேண்டவே இறைவனும் ஒருப்பட்டுத் தலை தாழ்ந்து மாலையேற்றான்.

இந்நிலையில் வளைந்த சிவனை நிமிர்க்க அரசனது சேனை முனைந்தது. அகந்தையுடைய அச்சேனையால் இறைவனை நிமிர்க்கமுடியவில்லை. அவ்வமயம் திருக்கடவூர் கலயநாயனார் திருப்பனந்தாள் வந்தார். அங்கு நடைபெறும் செயல்கண்ட கலயர் ஒருமையன்பின் பாசத்தால் இறைவனை நிமிர்க்க முற்பட்டு இழுத்தார். இழுத்து இளைத்தார், அன்பரின் இளைப்பிற்கு ஆண்டவன் மனம் ஒப்புவானோ? கலயனார் தம் ஒருப்பாடு கண்டபோதே அண்ணலார் நிமிர்ந்து நேரே நின்றார். அமரரும் விசும்பில் ஆர்த்தார். இவையெல்லாம் அன்பின் விளைவல்லவா?

இந்த அன்பு தாய் குழந்தைக்குத் தருவது. ஆசிரியர் மாணக்கர்க்குக் காட்டுவது. அரசன் குடிகட்குக் காட்டுவது. தலைவன் தலைவிமாட்டுக் காட்டுவது. என எத்துணையோ வகைப்படும். இவற்றுள் தாயன்பே தலைசிறந்தது என்று கூறுவர் ஞானசாரியர். ஞானபுத்திரனாகிய மாணக்கரிடம் காட்டும் அநுக்கிரமாகிய அன்பே பிறவிக் கடலைக் கடத்தும். அதற்கு ஈடான அன்பே கிடையாது. அதற்குத்தான் மடாலயங்கள் தோன்றின. அன்புதான் கடவுள். இதனை அறியாமல் வெளிப்பகட்டிற்குத் தான தருமங்களைச் செய்வோரும் இருக்கலாம். அன்போடு கொடுக்கும் பொருள் எள்ளளவேனுமது பல மடங்கு உயர்வானது. அன்பிலான் அகத்துண்ணேம் என்றான் ஒரு புலவன். அன்பும் சிவமும் தனித்தனியாக இரண்டென்று

கூறுதல் தகாது. அன்பே சிவம். அன்புருவாய அவனை அன்பால் அடையலாம். "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார். அன்பே சிவமாவதாரும் அறிகிலார் அன்பே சிவமாவதாரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே." என்று திருமூலர் அருளினார். சிவமே அன்பு. அன்பே சிவம். அன்புள்ளத்திற்குக் கிடைக்காத பொருளில்லை. அன்புக்கு இறைவன் கட்டுப்படுவான். பக்திவலையிற் படுவோன்தான் இறைவனை எளிதாய் அடையலாம்.

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம

தமிழிசைப் பாடல்

இராகம் - தந்யாசி] [தாளம் - மிஸ்ரசாபு

பல்லவி

எந்நாளும் நினையாமல் இருந்தறியேன் சோமேசா
எனக்கோஉன் கருணை இல்லை உன் இணை மலரடிகளை (எந்)

அநுபல்லவி

இந்நாளில் அருளாமல் இருந்தால்என்ன நான்செய்வேன்
எம்பெருமானேநீ இரங்கி வந்தருள் செய்வாய் (எந்)

சரணம்

செந்நாப்புலவோர் கூட்டம் திகழும்மதுரை வாசா
தெய்வ நடமாடும் ஈசா சொக்கலிங்கேசா
அந்நால்வரும் பாடிய அங்கயற் கண்ணிநேசா
அறுபத்து~~மூன்று~~ விளையாடல் செய்தசர் வேசா. (எந்)
நான்கு

(மணிவாசகம்)

மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

(மலர் 13 இதழ் 8 பக்கம் 16இல் தொடர்ச்சி)

ஓடிய கதை

பறம்புநாட்டு மன்னர் வீரவேள் ஆலோசனை மண்டபமாகிய பூங்காட்டு மண்டபத்திலே தீவிரமான யோசனையில் ஈடுபட்டிருந்தார். பறம்பு நாட்டின் மீது பாண்டியப் பேரரசின் மண்ணாசைக் கண்ணோட்டம் விழுந்திருப்பதுதான் அந்த யோசனைக்கு அடிப்படை. மண்டபத்தையடுத்த புதர்களிலே — அந்தத் தழ்மிருட்டிலே ஒரு மனித உருவம் இதனை மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்தது.

இரண்டாம் அத்தியாயம்

வைகறைவேளை

வைகறைவேளை. பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. பறவைகள் கூட்டை விட்டுச் சிறகடித்துப் பறந்துகொண்டு ஆனந்தமாகத் திரியத் தொடங்கின.

பறம்புமலைக்குப் பக்கத்திலிருந்து மதுரைபோகும் அந்தச் சாலையில் ஒரு வெள்ளைக் குதிரை சிட்டாய்ப் பறந்துகொண்டிருந்தது. 'டக்டக், டக்டக்' என்ற அதன் குளம்படிச் சத்தம் அந்த மனோகரமான காலை நேரத்திலே மங்கல முரசு கொட்டுவதுபோல் இருந்தது. இரண்டு பக்கத்திலும் பச்சைப் பசேரென்ற வயல்கள். காலைநேரத்திலே கழனிகளின் எழிலைக் கண்ணாரக் கண்டு ரசித்துக்கொண்டே குதிரைமேல் சவாரி செய்தான் ஒரு வீரன். கம்பீரமான தோற்றம். எடுப்பான மார்பு. விசாலமான நெற்றி. இராஜாங்க உடை அணிந்திருந்தான் அவ்வாலிபன்.

தலையில் முண்டாசு; நெற்றியிலே இரண்டொரு மயிர்கள் காற்றிலே பறந்து விளையாடி ஒளிபொருந்திய அத்திருமுகத்துக்கு இன்னும் அழகுகொடுத்துக்கொண்டிருந்தன.

அரும்பு மீசை; ஆண்மை பொங்கும் நீண்ட கைகள். அவ்வீரன் தன்கையின் விரலில் ஒரு சிறு மோதிரம் அணிந்திருந்தான். மோதிரத்தில் சிறிய 'கயல்' மீன் வடிவம் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த வாலிபனின் முகத்தில் ஏதோ சிந்தனை அலைகள் வீசிக்கொண்டிருந்தாலும், அவன் கண்கள் அந்த மனோகரமான காலைக் காட்சிகளில் ஈடுபடாமல் இல்லை.

சாலையின் ஓரத்தில் தழைந்து விரிந்த ஆலமரங்களினின்றும், வீழ்ந்து கிடந்த ஆலம் பழங்கள் பவழங்களை வாரியிறைத்ததுபோலக் கிடந்தன. கதிரவனின் சாய்வான பொன்னொளியில் அவை கண்ணைக் கவர்ந்தன. அப்பப்பா! அந்த ஆலம்பழங்களை உபயோகிக்கத்தான் எத்தனை போட்டி இந்தக் காக்கைகளுக்குள்ளே. 'கா கா' என்று இடையருது கரைந்துகொண்டு ஆலம்பழங்களைக் கொத்துவதில் ஈடுபட்டிருந்தன அவை.

இதைக் கண்டதும் — சந்தனத்தேவனின் சிந்தனை — ஆம்! சந்தனத்தேவன் என்பதுதான் அவன் பெயர். கொஞ்சம் எட்டிப்பறந்தது.

"இந்தப் பறம்புநாட்டின் நிலைமையும் இன்று இப்படித்தானே இருக்கிறது. சேர சோழ பாண்டியர் மூவரும் இந்த ஆலம்பழத்துக்கும் போட்டிபோடுகிருர்கள்! இம்......பறம்புப் ப்ழம் எந்தக் காக்கையின் பிடியில் சிக்கப்போகிறதோ?......"

சந்தனத்தேவனின் மனம் — மனத்திலே மேலோங்கியிருந்த எண்ணம் எல்லாம் கலைந்தன, 'டக் டக் டக்' என்ற குதிரைக் குளம்படிச் சத்தத்தால். ஆம்! எதிர்த்தாற்போலிருந்த மதுரைச் சாலையிலிருந்து ஒரு வீரன் ஒரு அழகான வெண்புரவியின்மேல் வந்துகொண்டிருந்தான். ஆகா! என்ன ஆச்சரியம்! கண் இமைக்கும் நேரத்தில் சந்தனத்தேவனைக் கடந்து காற்ருய்ப் பறந்தது அந்தக் குதிரை. சந்தனத்தேவனுக்கு ஓரே வியப்பு. பார்த்தால் பாண்டியநாட்டானுகத் தோன்றவில்லையே?.........

யாரோ நாட்டுக்குப் புதியவனுக அல்லவா தோன்றுகிருன்! இருந்தாலும் என்ன கம்பீரம்! ஒளிவழியும் முகம்............ "கைபுனைந்து இயற்ருக் கவின்பெறு வனப்பு" என்று எப்போதோ படித்த இலக்கியவரி ஒன்று அவன் நினைப்புக்கு வந்தது. அதில் தேங்கிக்கிடக்கும் இளமை! அழகு!

அதோ மதுரைக்கோட்டைவாசல்வந்துவிட்டது கோட்டை வாசலுக்கருகில் வந்ததும் தாஞகநின்றது குதிரை. அதன் முதுகில் தட்டிக்கொத்துவிட்டுக் கீழே இறங்கினுன் சந்தனத் தேவன். கோட்டைக் காவலனிடத்தில் 'இராஜாங்க முத்திரை' பொறித்த மோதிரத்தைக் காட்டிவிட்டுக் கோட்டைக்குள்ளே புகுந்தான்.

மூன்ரும் அத்தியாயம்

வீணை இசை

பறம்புநாட்டுத் தலைநகரத்தில் அரண்மனையின் மேல் மாடத்தில், மாலைநேரத்திலே வானவீதியிலே தோன்றும் வர்ண ஜாலங்களைப் பார்த்தவண்ணம் நின்றிருந்தாள் பொன்னி.

"பொன்னி! பொன்னி!" இளவரசன் பாரி அழைத்துக் கொண்டே வந்து அவள்பின் நின்ருன்.

"அண்ணு!" — திரும்பினுள் பொன்னி.

"தங்காய்! என்னம்மா பலமான சிந்தனை?"

"ஒன்றுமில்லையண்ணு! இயற்கைத்தாயின் வர்ணப் புடவையை — இந்த நீலவானத்தை — இதில் தோன்றும் விந்தைகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதிருக்கட்டும்! அப்பாவை எங்கே அண்ணு இரண்டு நாட்களுக்கு மேலாகக் காணும்"

"பொன்னி! நம் தந்தை நமக்குமட்டுமல்ல தந்தை! நம் பறம்புமலை அரசிலே இருக்கும் முந்நூறு ஊர்ப் பொதுமக்களுக்கும் தந்தையல்லவா? நாட்டைக் கெடுக்கும் நச்சுக் கொள்கை விரைந்துவரும் இந்நேரத்தில் நம் தந்தையைக் காணமுடியுமா?"

"என்ன அண்ணு புதிர் போடுகிருய்".

"பொன்னி! புரியுமா உனக்கு. அரசியல் பிரச்னை அந்தப் புரத்துக்கு வருமளவுக்கு இன்னும் மிக வலுத்துவிடவில்லை தங்காய்!"

"அண்ணு! தந்தை......"

"பொன்னி! நம் தந்தையார் சுத்தவீரர்; வீராதிவீரர்; நாட்டின் உரிமை காக்கப்படுவதற்காகத் தம் வாழ்க்கையையும் திரணமாக மதிக்கும் தீரர்".

"பறம்புநாட்டின் உரிமையைப் பறிக்கத் திட்டமிடுகிறது ஒரு கூட்டம்! பிறனுக்கு அடங்கிக்கிடக்கும் பேதைகளல்ல பறம்புநில மாவீரர்கள் என்பதை நிரூபிக்கும் நேரம் நெருங்கி யிருக்கிறது தங்கை! பல்நூறு ஆண்டுகளாக உரிமையோடு வாழ்ந்த நம் அரசு—இன்று சேர சோழ பாண்டியரின் செருக் கால்—நிலவெறியால் தளராமல் நிலைக்க வழிதேடவேண்டு மல்லவா?" பாரியின் குரல் கரகரத்தது. அவன் குரலிலே உணர்ச்சி குழைந்திருந்தது. பறம்பு மண்ணின் பண்பாட்டைக் காக்க உயிருள்ளவரைக்கும் போராடியே தீருவது என்று சபதம் கொண்டுள்ள வீரவேளின் வீரப்புதல்வனல்லவா? சூரியன் மலைவாயில் விழுந்து வெகுநேரமாகிவிட்டது. வானத் தில் வெண்மதி சிரித்துக்கொண்டே எழுந்துநின்றான்; விண் மீன்கள் வெண்மதியின் சிரிப்பிலே விளங்கும் முத்துப்பற்களாக மின்னின.

நகரத்தின் வீதிகள் தோறும் விளக்குகள் ஏற்றப்பட்டு நகர்முழுதும் ஒளிமயமாய் விளங்கியது. இப்போது பொன்னி பேசினாள்.

"அண்ணு! நம் பாதுகாப்பு பலம் எப்படியிருக்கிறது?"

"தங்காய்! அதோபார்!" பொன்னியின் தோள்மேல் கையை வைத்துக் கிழக்குப்பக்கம் அவளது பார்வையைத் திருப்பினான் இளவரசன். கிழக்குக்கோட்டை வாயிலில்—லேசாகத் தெரிந்த தீவர்த்தி வெளிச்சத்தில் அநேக போர்வீரர்கள் ஆயுதங்களோடு நின்று காவல்புரிவது நன்கு தெரிந்தது."

741

"இதுபோலவே நகரின் நான்கு கோட்டைவாயில்களிலும் நிலைப்படைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பொன்னி! பாது காப்பில் ஐயத்துக்கு இடமேயில்லை! உரிமைக்காக உயிரையும் இழக்கும் உரம்படைத்த வீரர்களின் காவலில் பறம்பு நிலத்தை மூவேந்தர்கள் கனவிலும் நெருங்கமுடியாது. அப்படி நெருங்க நேரிட்டால் இதோ என் அரையில் இருக்கும் உடைவாளுக்கு நல்ல வேட்டை!"

அண்ணனின் அஞ்சாநெஞ்சத்தையும், ஆண்மையையும் நினைத்துப் பூரித்துப்போனாள் பொன்னி. பெருமிதமும், சூழ்ச் சித்திறமும், பேசரிய ஆற்றலும் படைத்த தந்தையும், ஆண்மை பொங்கும் அண்ணனும் வாய்க்கப்பெற்ற நானல்லவா பாக்கிய சாலி என்று அவள் உள்மனம் கூறியது......

உப்பரிகைப் படிகளில் யாரோ கம்பீரமாக நடந்துவரும் ஒலி கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். மன்னர் வீரவேள் வந்துகொண்டிருந்தார்.

"அப்பா" என்று கூவிக்கொண்டே மகிழ்ச்சியோடு சென்று தழுவிக்கொண்டாள் பொன்னி.

"செல்வமே" என்று அன்போடு மகளை அணைத்த மன்னர் அவளது கூந்தலை லேசாக நீவினார்; இளவரசன் தந்தையின் பக்கத்தில் வந்து மௌனமாக நின்றான்.

"பாரிபேசியதைக் கேட்டுக்கொண்டுதான்வந்தேன். செல்வீ! உண்மைதான்! மூவேந்தர்களின் கண்ணோட்டமும் நம்மீது வீழ்ந்துவிட்டது. அதிலும் சிறப்பாகப் பாண்டியன் பறம்பு மண்ணுக்குப் பற்றுவைத்து காலம்பார்த்து நிற்கின்றான்". லேசாகத் தந்தையின் கையிலிருந்து விலகிய பொன்னி தந்தை யின் முகத்தை ஏறிட்டுநோக்கினாள்.

மன்னர் அமைதியாகப் பேசினார்; "நாம் எச்சரிக்கையாக வாழவேண்டிய நிலை; படைபலம் மிகுந்த பாண்டியன் திடீ ரென்று படை எடுத்துவரலாம்; இறுதிவரைக்கும் போராடிப் பறம்புநாட்டார் உரிமையைப் பாதுகாப்பது நம்கையில்தான் இருக்கிறது" என்று கூறிய மன்னர் பாரியை அமைதியாகப் பார்த்தார்.

"அப்பா! பொன்னுன பறம்புநிலத்தைப் புல்லர்களிடமா விட்டுவிடுவது? அதற்கு நமது மக்களே ஒப்பமாட்டார்களப்பா"

"குழந்தாய்! உன்பேச்சு என் இதயத்தைப் பூரிக்கவைக்கின்றது; பேச்சு செயலாக மாறுமேயானுல் அதுவே நான் பெற்ற பெரும்பேறு! 'உங்களுக்கு இப்போதே ஏன் அந்த சிந்தனை' என்று கூறிய மன்னர் சாளரத்துக்கு வெளியே நகர்ப்புறத்தை நோக்கினுர். விண்ணளாவிய சிவன்கோயில் கோபுரம் நிலாவெளிச்சத்தில் வெள்ளிமலைபோலக் காட்சி அளித்துக்கொண்டிருந்தது.

மன்னர் மனத்தில் நாட்டைப்பற்றிய கவலை அலைகள் ஓய்ந்து இப்போதுதான் கொஞ்சம் அமைதி குடிபுகத் தொடங்கியது. உண்மைதான்! தெய்வசிந்தனையைத் தவிர மனத்துக்கு அமைதிதரும் மருந்து வேறு ஏது? "பொன்னீ! எங்கே, உன் வீணுகானத்தைக் கேட்டு வெகுநாளாகிறதே; கொஞ்சம் பாடு" என்று அன்பான குரலில் மகளை வேண்டிக்கொண்டார் வீரவேள்.

உண்மையாகவே பொன்னி வீணையைக் கையில் எடுத்தே வெகுநாட்கள் ஆகியிருந்தன. தந்தை பூங்காட்டு மண்டபத்துக்குப் போவதற்குமுன் ஒருநாள் தான் அந்தப்புரத் தோட்டத்தை யடுத்த பூஞ்சோலை மாளிகையில் உட்கார்ந்து வீணை யிசைத்த நினைப்பு அவளுக்கு இப்போது வந்தது.

அழகான மஞ்சத்தில், உறையிட்ட மெல்லிய பட்டுத் துணிக்குள்ளே இருந்த அந்த இசை விருந்தைத் தன் இருகையாலும் எடுத்துவந்தாள்.

வீரவேளும், பாரியும் வீற்றிருந்த மஞ்சத்துக்கருகில் கீழே விரிக்கப்பட்டிருந்த பூம்பட்டின்மீது உட்கார்ந்துகொண்டு இலேசாக வீணையை மீட்டத் தொடங்கினுள்; குற்றமற்ற அந்த இசைக்கருவியினின்றும் எழுந்த தெய்வீக இசை மெல்லமெல்ல மாடமெங்கும் நிறைந்தது; மன்னர் மனத்திலும், இளவரசன் மனத்திலும் பொங்கிவழிந்தது. பொன்னியின் மெல்லிய — காந்தள்போலச் சிவந்த அழகு விரல்கள் அந்த மாசில்வீணையின் நரம்புகளில் நர்த்தனம் புரிந்தன.

742

"பொன்னி! அன்று நம் அரசவைக் கவிஞரின் பாடலை இசைத்தாயே! அதை மீண்டும் ஒருமுறை......"

அன்பு அண்ணன் பாரியின் வேண்டுகோளுக்கிசைந்த இளவரசி இப்போது பாடினாள்; அவளது குரலுக்கும் வீணையின் குரலுக்கும் வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை. பாடலும் பொருள் பொதிந்த தமிழ்ப்பாட்டு; வீணையோ மாசில்லாத தமிழ் வீணை; கேட்பானேன்?

வீணை இசையினிலே—நல்ல
வேய்ங்குழல் ஓசையிலே
காணும் நிலவினிலே—மிதக்கும்
கானகத் தென்றலிலே
அமைதிக் காட்டினிலே—மலையின்
அருவிப் போக்கினிலே
சமைந்த தெய்வமம்மா—கலைகள்
வழங்கிடும் தேவியம்மா.

பண்ணோடு கலந்து, வீணை நரம்புகளிலே இன்பநடனமாடிய பொன்னியின் மிடற்றிசை மூவர் உள்ளத்திலும் மோனநிலையை முகிழ்த்துவிட்டது.

"கண்ணே! நீ தமிழிசையின் தெய்வீக வடிவம்! கலைமகள் என் மகளாகிவிட்டாள்; நான் செய்த தவமே தவம்!" என்று கூறி அன்புமகளை மார்புறத் தழுவிக்கொண்டார் மன்னர்; அவர் கண்களில் தளும்பிய ஆனந்தக் கண்ணீர் தரையை நனைத்தது.

"அப்பா! தமிழிசையே இசை! என்னை – மெய்மறக்கச் செய்துவிடுகிறதப்பா"

மகளின் பேச்சுக்கேட்டுப் பூரித்துப்போனார் வீரவேள்.

"கண்ணே! ஆடற்கலைக்கும் பாடற்கலைக்கும் நமது முன்னோர்கள் எத்தனை மதிப்புக் கொடுத்திருந்தார்கள் தெரியுமா? அன்பே! நீ அறியாப்பெண். நம் பூங்காட்டு மண்டபத்திலே இருக்கும் இசை நூல்கள் எத்துணைச் சிறப்புடையவை! பரத சேனாபதியம், பெருநாரை, பெருங்குருகு – இசை நுணுக்கம் – இத்தனையுமிருக்கின்றன. உனக்கு வயதானபிறகு அவற்றைத் தக்க ஆசிரியர்மூலம் போதிக்கிறேன்" – பொன்னி தந்தையைத் தழுவிக்கொண்டாள். (தொடரும்)

744

இலக்கண விருந்து

வித்துவான், திரு. M. ஆறுமுகனார் அவர்கள்

"காடும் செடியும் என்னே தமிழ்க்காரிகை கற்பதுவே" என்று பாராட்டிப் பாடினார் படிக்காசுப் புலவர். காரிகை கற்றுக் கவிபாடுவதிலும் பேரிகைகொட்டிப் பிழைப்பது நன்று என்று சொன்ன அறிஞர் கருத்தும் காரிகை நூலை இழித்துரைக்கும் நோக்கமன்று. இத்தகைய அரிய யாப்பிலக்கணத்தை நாத்தழும்பேறப் பயின்ற நாவலர்கள், தாம் இயற்றுகின்ற யாப்பில் யாப்பின் பெயர்களையும் யாப்பிலக்கண வாய்பாடுகளையும் சமயோசிதமாக அமைத்திருக்கும் அழகு, அறிஞர்களுக்கு விருந்தாக இருந்து ஆரா இன்பம் அளிப்பதாகும். அத்துடன் கவிஞனின் கவிதா சாமர்த்தியத்தையும் அது காட்டி நிற்கும். அந்தமுறையில் அமைந்துள்ள இரண்டொருபாடலைக் காண்பாம்.

அகப்பொருள் துறைகளுள் நாணிக் கண்புதைத்தல் என்பது ஒன்று. தலைமகளின் குறிப்பறிந்த தலைமகன் இரந்து நின்று, மெய்தொட்டுப் பயின்று, பொய் பாராட்டிப் பலவாறுகத் தன் கருத்தை வெளிப்படுத்துவான். இயற்கையிலேயே நாணுடைய தலைவி, தலைவனின் இன்பவுரையைக்கேட்ட மாத்திரத்திலே நாண்மீதூரப்பெற்றவளாய், கைகளால் கண்களை மூடிக்கொள்வாள். கண்மூடியதைக் கண்டு கலங்கிய தலைவன் 'என் ஆருயிரே! பெரியோர் தனம் புதையார் என்பதை உன் செயலிலிருந்து கண்டுகொண்டேன். தனமிருந்து என்ன பயன்? மனமிருந்தாலல்லவோ பயன்படும். கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்பது நீ அறியாததா! அறிந்த நீ ஏன் அதனை மறைக்கின்றாய்!' என்று பேசி மகிழ்வன். இப்படி இத்துறையில் நானூறு பாடல்கள் பாடினார் அமிர்தகவிராயர். அதிலுள்ள இரண்டு பாடல்கள் இலக்கண விருந்தாக இலங்குகின்றன.

பாக்களின் வரிசையில் ஆசிரியப்பாவை இரண்டாவதாக வைத்துப்பேசுகிறது யாப்பிலக்கண நூல். இரண்டு அசைகளாலாகிய நான்கு வாய்பாடுகளும் அப்பாவிற்குரியன. 'ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய என்பது விதி. நான்காவன நேர்நேர்,

நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்பன. தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்ற நான்கும் அவற்றிற்கு வாய்பாடுகள். இவைகளை மனத்தில் வைத்துக்கொண்டு தலைவன் அழகாக இன்ப உரை பேசுகிறான்.

"கல்வியறிவுடைய நங்காய்! உன் அறிவை மெச்சுகிறேன். ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கணிதநூல் வாசிக்க விரும்பும் ஒருவன் எண்கள் முழுவதையும் தெரிந்து கொள்ள வேண்டாமா? எழுத்திலக்கணம் படிப்போனும் எழுத்துக்கள் அனைத்தையும் கற்றுக்கொண்டால்தானே நல்லது? பல பள்ளிகளில் ஆசிரியையாக இருந்த உனக்கு இந்த அனுபவம் இல்லாமலா இருக்கும். யாப்பிலக்கணம் மட்டும் அந்த விதிக்குப் புறம்பானதா? இல்லையே! அல்லது என்னைச் சோதிக்கின்றனையா, ஆசிரியப்பாவுக்குரிய நான்கு வாய்பாடு களையும் காட்டிவிடு. பிறகு என்னைத் தேர்வு எழுதச்செய். நிச்சயம் முழு வெற்றி காட்டுகிறேன். நான் நுண்ணறிவுடைய வன். கொஞ்சம் காட்டினால் போதும். கூவிளம் என்ற மூன்றாவது வாய்பாடு நன்றாகத் தெரிகிறது. ஈற்றிலுள்ள கருவிளந்தான் பாக்கி, அதை உன் கைகள் மறைக்கின்றன. மறைப்பை அப்புறப்படுத்து. கருவிளத்தையும் கண்ட பிறகு, காரிகையே! காரிகை வாசிக்கத் தொடங்கி விடுவேன்; கவலை வேண்டாம்." இக்கருத்தினைக்காட்டும் பாடல்கள்:-

"கோசிகம் அத்தம் மணிசூறைஇட்டெதிர் கூடலர்தம்
பாசறையிட்ட ரகுநாத சேது பதிவரைவாய்
ஆசிரியத்தின் முன் கூவிளங்காட்டியருளிய நீர்
மாசில் கருவிள முன் காட்டின் காரிகை வாசிப்பனே"

"கார் நிரையத்தைத் துரத்தி எடுத்ததன் கைவரையால்
பார் நிரைகாத்த ரகுநாத சேதுபதி வரைவாய்
நேர் நேர் நிரைநேர் நிரைநிரை மூன்றையும் நீக்கிப் பின்னால்
நேர் நிரை ஒன்றையும் காட்டியவாறு என்ன? நேரிழையே"

[கூவிளம் - வில்வம். இங்கு கனியையுணர்த்தி உவமை யாகத் தனத்தைக் காட்டிற்று. கருவிளம் = கருவிளம்பூ. உவமை யாகக் கண்ணைக் காட்டிற்று.]

'காடுசுடும்; இங்குதானேயிரு' என்று சொல்லிப்புறப் படுகின்ற இராமனை நோக்கி 'நும்பிரிவினும் காடு சுடுமோ' என்றாள் சீதா. "ஞானசம்பந்தர் மயிலாப்பூரில் எலும்பைப்

746

பெண்ணுக்கிருரே தமிழ்ப்பாடல் பாடி; கல்விக்காகப்பிரிகின்ற நீயும் அதுபோன்ற தமிழைக் கற்றுவா" என்று நயமாகப் பிரிவுத்துன்பத்தைச் சொல்லுகிருள் மற்ருெருத்தி. போகி கிறேன் என்பதை என்னிடம் ஒருபோதும் சொல்லாதே; வேறு யாரிடமாவது சொல்லிவிட்டுப்போ' செல்லாமை உண்டேல் எனக்கு உரை; மற்று நின் வல்வரவு வாழ்வார்க்கு உரை' என்று சொல்லும் மகளிரும் உண்டு. இத்தகைய தர்ம சங்கடத் திற்குப் பயந்து கோவைபாடும் ஆசிரியர்கள் அனைவருமே தூது காரணமாக - கல்வி காரணமாக - காவல் காரணமாக மற்றெது காரணமாகவோ பிரிகின்றபோதெல்லாம் தலைவனையும் தலைவி யையும் சந்திக்க விடுவதில்லை. தோழி மூலமாகவே தலைவி தெரிந்துகொள்கின்ருள். தலைவிக்கு ஏற்படும் நன்மையிலுஞ் சரி தீமையிலும் சரி தோழிக்குப் பங்குண்டு. இருப்பினும் நன்மை வருகின்றபோது தோழி தலைவியாக இருந்து அநுபவிக்க முடியாதல்லவா? ஆகவே கேட்டுக்கொள்கின்ற அளவிற்காக வாவது தோழி பொறுத்திருக்க முடிகிறது. இருந்தாலும் தலைவன் பிரிவைத் தலைவியிடம் சொல்லும்போது சங்கடமான ஒரு நிலையை அடையத்தான் வேண்டியிருக்கிறது. தலைவிக்கு மனம் நோகாதபடி, அவள் உளம் கொளுமாறு சொல்ல வேண்டுமல்லவா! அதுதான் தோழியின் பேரறிவு வெளிப்படும் கட்டம். சோதனையில் வெற்றிபெறும் இடம். சொல்லும் பொருள் உள்ளத்தில் பதிதற்கு ஏற்ற நீதிகளை—உவமைகளைத் தேட வேண்டிய பொறுப்பும் தோழிக்கு வந்துவிடுகிறது அப்போது.

(தொடரும்)

நீரில் எழுகின்ற மொக்குள்போல் விரைந்து அழிவது இளமை. நீரலைகளைப்போல நிலையாதது செல்வப்பெருக்கம். நீரில் எழுதிய எழுத்தைப் போல்வது வளரும்போதே தளர்ந்து மாயும் இவ்வுடம்பு.

" இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா "

அதனுல், அம்பலவாணன் அருட்கழலிணைக்கே மெய் அன்பு செய்து, உடம்பெடுத்த பயனை அடைவதே அறிவாகும்.

947

திருமந்திரம்

வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள்,
சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை.

மனிதர்களில் பெரும்பாலோர் உணர்ச்சி வசப்பட்டவர்கள். வேறு எவ்வித உணர்ச்சியினும் மிகுதியாக அன்பு உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டவராகவே வாழ்ந்து வருகிறார்கள். மனிதனுக்குத்தன்னிலேயே அன்புண்டு. தன்மனைவி மக்கள், உற்றார், உறவினர் என்று அவர்கள்பால் அன்புண்டு. தனது இனத்தவர். தனது ஊரார், தன் நாட்டினர் என்று அன்பு ஏற்படுகிறது. தனது உடைமை, தன்பொருள், தன் இல்லம் என்ற பற்றுதல்கள் உண்டாகின்றன. இப்படியே மனிதனது செயல்கள் அன்பும், ஆசையும், பற்றுதல்களும் பாசமும் பிணித்துக்கட்டுப்படுத்தப் படுகின்றன. மனிதனின் வாழ்க்கையும் ஒருவித ஒழுக்க நிலையில் நிற்கின்றது. அவ்வித ஒழுக்க நிலையிலே, வாழ்வில் ஆனந்தத்தையும் இனிமையையும் மனிதன் துய்க்க முடிகிறது.

இவ்விதம் உலகில் பரந்து நிற்கும் அன்புணர்ச்சியே மனிதனது உயிர் நிலைக்கும் அவனது கீழ்த்தர நிலைக்கும் காரணமாகிறது. மனிதனுக்குத் 'தான்' 'தனது' என்ற தன்னலப் பற்றுதல்கள் அதிகரிக்க அதிரிக்க, பகைமை, வெறுப்பு. பொறாமை என்ற இழி குணங்கள் தோன்றுகின்றன. தன்னல மறுப்பு ஏற்படுகின்றபோது, இதே அன்புணர்ச்சி மனிதனை உயர் நிலையில் வைக்கிறது.

உயர்நிலை அன்புணர்ச்சியானது, 'தான்' 'தனது' என்று குறுகிய நிலையினின்றும், தன் இல்லத்தவர், உற்றார், உறவினர், ஊரார், இனத்தவர், நாட்டார், உலகத்தவர், என்று விரிய வேண்டும். அன்புணர்ச்சியின் இத்தகைய விரிவிலேதான், மெய்ப்பொருளாகிய இறைவனை மனிதன் உணர்ந்துகொள்ள முடிகிறது.

பிறப்பும் இறப்பும் மாறிமாறி வருகின்றன. பிறப்பையும் இறப்பையும் காணும் போதெல்லாம் நமது உள்ளத்தில் ஏதோ ஒருவித உணர்வு தோன்றுகிறது. இப்பிறப்பு இறப்பு இவற்றின் மத்தியில் நாம்சாதித்துள்ளன எது என்பதுதான் அந்த

உணர்ச்சி. பிறந்தவன் சாவது உறுதி. மனிதனின் உள் அடங்கி நிற்கும் தெய்வத்தன்மை வெளிப்பட்டுப், பூர்ணத்துவம் அடையும்வரை பிறப்பும் இறப்பும் தொடர்கின்றன. இதை ஞானிகள் 'சம்சாரம்' என்று கூறுகின்றனர். எவ்வாறு நாம் அந்தப்பூர்ணத்துவத்தை அடைவது? நம்மிடம் காணப்படும் அன்புணர்வை, இத்தகைய பூர்ணத்துவ நிலையை அடைவதற்கான வழிக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நமது முன்னோர் ஆராய்ந்து அறிந்து நமக்குத் தெளிவுபடுத்தி உள்ளனர்.

மிதமிஞ்சிய தன்னலப் பிரியத்தின் காரணமாகவும், ஆசாபாசங்களின் பிணிப்பாலும் நமது பிறப்பின் [பயன் எதுவோ அதன் வழிச்செல்ல நாம் முயற்சி செய்வதில்லை. "தேகம் நிலையற்றது. தேக சுகங்களும் பற்றுதல்களும் அவ்வாறுனவையே. உலகம் பொய்யானது என்று யாராவது உபதேசம்செய்தால், 'உண்மைதான்' என்று தலையை அசைத்துக்கொள்ளுகிறோம். உலகம் பொய்யாகிய உண்மைதான் என்பதை நாம் அறிவோம்.

மெய்ப்பொருளாகிய பரம்பொருளைப்பற்றி உபதேசம் செய்த ஞானியர் அனைவரும் உலகம் உண்மையானது என்றே வாழ்க்கை நடத்தியிருக்கின்றார்கள். இவ்வாறு மெய்வாழ்க்கை நடத்திய அருளாளர் அனைவரும் உலகம், வாழ்க்கை, விணைப்பயன் யாவும் உண்மையானவையே என்ற உணர்வில்தான் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்று அவர்களது வாழ்க்கையை ஆராயும்பொழுது நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இக்கொள்கைக்குத் திருத்தொண்டர் புராணமே சான்றாகும்.

அப்படியானால் வாழ்க்கையில் அவர்களுக்கு இருந்த கொள்கை என்ன? உடலுக்குள் அதற்கு உயிர்தரும் ஆன்மா இருக்கிறது. ஆன்மாவிற்குள் அதற்கு உயிர்தரும் பரம்பொருள் உளது. உயிர்க்கு உயிராய் நிற்கும் இப்பரம்பொருள், உலகெங்கும், எல்லாப்பொருள்களிலும். வியாபித்து நிற்கிறது. இதுவே அமைப்பு என்று உணர்ந்தனர். பரம்பொருளாகிய இறைவனே அனைத்திலும் நின்று நடத்தும் உண்மைப்பொருள் என்பதை உணர்ந்து விட்டால், இன்பம் துன்பம் யாவும் மறைந்துவிடுகிறது. இதுவே தத்துவம் என்றுநமக்கு, வாழ்ந்து காட்டி உணர்த்தியிருக்கிறார்கள்.

"மண்ணாகி, விண்ணாகி மலையுமாகி, வயிரமுமாய் மாணிக்கம்தானேயாகிக், கண்ணாகிக் கண்ணுக்கோர் மணியுமாகிக், கலை ஆகிக், கலை ஞானம் தானேயாகிப், பெண்ணாகிப் பெண்ணுக்கோர் ஆணுமாகிப், பிரளயத்துக்கப்பால் ஓர் அண்டமாகி, எண்ணாகி எண்ணுக்கோர் எழுத்துமாகி, எழும் சுடராய் எம் அடிகள் நின்றவாறே" என்று "பெருநலமும் குற்றமும் பெண்ணும் ஆணும், பிறஉருவும் தம் உருவும் தாமே" யாகிய இறைவனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் வியந்து பாடுகிறார்.

இறைவனைப்பற்றிய இவ்வித உணர்வு ஏற்பட நமக்கு அன்புநெறிதான் சிறந்தவழி என்று தோன்றுகிறது. இயல்பாக நம்மிடம் உள்ள, அன்புணர்ச்சியை இறைவன்பால் செலுத்துதல்தான் சுலபமாகவும் தெரிகிறது.

காணும் பொருளிடத்து, மிகப்பிரியமாகநேசிக்கும்வகையை நாம் அறிவோம். இத்தகைய அன்பை இறைவன்பால் குவியும்படி நாம் திருப்பலாம். இம் முறையால் நமது உணர்ச்சிமயமான அன்பு முழுவதும் மாறுகிறது. இறைவன்மீது அன்பு வளரவளர வேறுபொருள்களின்மீதுள்ள பற்றுதல் வரவரக் குறைகிறது. ஆனால், இறைவன்மீது அன்பு கொள்ளவும் அவன் அருள்பெறவும் நமக்குத் தோன்றுகிறதுபோல எளியதன்று என்பதை நாம் அறிவோம். ஐம்பொறிகள்பால் கட்டுண்டு அவற்றிற்கு இன்பம்தரும் பொருள்களையே பின்பற்றும் நமது மனத்தை இறைவன் வழிச்செலுத்துதல் மிகவும் கடினமான செயல் என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம்.

"உள்ளம் பெரும் கோயில் ஊனுடம்பாலயம் வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல், தெள்ளத்தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம், கள்ளப்புலனைந்தும் காளாமணி விளக்கே" என்ற திருமந்திரமும், "காயமே கோயிலாகக்கடி மனம் அடிமையாக, வாய்மையே தூய்மையாக, மனமணி இலிங்கமாக, நேயமே நெய்யும்பாலா-நிறையநீரமைய ஆட்டிப்பூசனை ஈசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே" என்ற தேவாரப்பாடலும், "மார்வம் என்பதோர் கோயிலமைத்து, மாதவன் என்னும் தெய்வத்தைநாட்டி, ஆர்வம் என்பதோர்பூ இடவல்லார்க்கு அரவ

தண்டத்தில் உய்யலுமாமே" என்ற பெரியாழ்வார் திருமொழியும் இறைவன் நம் முள்ளே உள்ளான் என்று நினைவூட்டுகின்றன.

இறைவனைப்பற்றிய அறிவு மறைந்து நிற்கிறது என்பதை நாம் அறிவோம். மனம்பக்குவப்படும்போது இந்த அறிவு மறைப்பு, தானே நீங்குகிறது என்று ஞானிகள் அறிவுறுத்தியுள்ளனர், கடவுளை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலின் முதல்படி. நமது இளமை நிலையைத்தான் நிலைநாட்டுகின்றது. சிறுவர்களாய் இருக்கும்பொது எத்தகைய ஆசைகள் தோன்றுகின்றன. எத்தனையோ பொருள்களை விரும்புகிறார்கள். மனம் விளையாட்டிலும், இனிய உணவு வகைகளிலிலுமே நிலைத்து நிற்கிறது, ஆனால் அறிவின்நிலை உயரஉயர, இந்த ஆசைகள் மனத்தினின்றே மறைந்துவிடுகின்றன. புத்தகத்தைக் காணும்போதே கசப்புத்தோன்றும் நிலைமாறி, 'புத்தகம் வாழ்க்கைக்கு 'ஓர் துணை' என்றநிலை ஏற்படுகிறது. இப்படியே நமக்கு 'அவசியம்' என்று தோன்றும், அநேக விஷயங்கள் அவசியம் அற்றவையாகி விடுகின்றன. இத்தகைய மாறுதல்கள் அறிவுநிலையின் உயர்ச்சியால்தான் ஏற்படுகின்றன என்பதை நாம் இப்போது உணர்கிறோம். அப்படித்தான் கடவுளைப்பற்றிய அறிவும் என்று எண்ணுகின்றேன். முதலில் இறைவனை லௌகிக உணர்வோடு அணுகுகின்றோம். பிறகு அவனைப் பற்றிய அறிவு வளர்ச்சி, நமது மனத்தை நிர்மல மாக்கி விடுகிறது.

பளிங்குமனம் படைத்த குழந்தை ஒன்று, மரத்தாலான யானையைவைத்து விளையாடுகிறது. அதுமரம் அன்று, யானை என்றே நினைத்துக்கொள்கிறது. ஆனால் அறிவு முதிர்ந்த மனிதனோ அதில் யானையைப் பார்ப்பதில்லை மரத்தைத்தான் காண்கின்றான். அதைப்போல. புலன்கள் பரம்பொருளை மறைத்து விடுகின்றன. ஆனால் ஞானியோ, புலன்களின் பிடிப்பினின்றும் நீங்கி, பரம்பொருளையே காண்கின்றான்.

இதை, "மரத்தை மறைத்தது மாமதயானை, மரத்தில் மறைந்தது மாமதயானை, பரத்தை மறைத்தது பார்முதல்பூதம் பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்" என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே, திருமூலர், தம் திருமந்திரப் பாவால் மிக நன்றாகக் கூறினார்.

251

ஸ்ரீ வானமாமலை மடம்

ஸ்ரீமத் இராமாநுஜ ஜீயர் சுவாமிகளின்

தருமை விஜயம்

சமயப்புரட்சி:

கடவுட் கொள்கைகளை வளர்க்கும் பல மதஸ்தாபனங்கள் ஒன்றுகூடி பணிசெய்வது என்பது சமய வரலாறுகளிலேயே ஒரு புரட்சிகரமான மாறுதல். எங்கள் மதம்தான் பெரியது; எங்கள் மதம்தான் உயர்ந்தது என்று பூசலிட்டு வந்த காலங்களைக் கண்டிருக்கிறோம்; வரலாறுகளின் ஏடுகளைப் புரட்டு இன்றபொழுது. காலப் போக்கில் ‘எம் மதமும் சம்மதம்’ என்ற பெருநோக்கோடு எல்லா சமயத்தலைவர்களையும் ஒன்று கூட்டி ஒற்றுமை காண்பது பரந்து விரிந்த மனப்பான்மையைக் காட்டுவதொன்றல்லவா?

உலகப்போக்கை ஒட்டி ஒற்றுமை நோக்கத்தோடு எல்லாச் சமய ஸ்தாபனங்களையும் ஒன்று கூட்டி ஒற்றுமையை உண்டாக்கியவர்கள் தருமையாதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள், திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சி காமகோடி பீடம்; ஸ்ரீமத் சங்கராசாரியாள், குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் மற்றும் ரிஷிகேசம் ஸ்ரீ சிவாநந்த சரஸ்வதிஜி மயிலம் வீரசைவ மடத்து அதிபர், செங்கோல் மடம், திருப் புகலூர் மடம் முதலிய மடாதிபதிகளைச் சந்தித்து இந்த சமய ஒற்றுமையை உண்டாக்கினார்கள். இதிலிருந்து மடாதிபதிகள் ஒன்று கூடி உறவாடுவது மிக எளிமையாயிற்று. “ஞாலம் நின் புகழே மிகவேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே” என்ற கொள்கை படைத்த எங்கள் குரு மகாசந்நி தானம் அவர்களின் உயரிய மனப்பான்மைக்கு இது ஒரு உதாரணம்.

வெள்ளிக்கிழமை 27-8-54 காலை சுமார் 9 மணி கொளுத்தும் வெய்யில்; இருந்தும் அதனைப் பொருட்படுத்தாது தருமையம்பதியைச் சார்ந்த மெய்யடியார் கூட்டம் ஜீயர்சுவாமிகளை வரவேற்கக் காத்திருந்தது. காலையில் வரவேண்டியவர்கள் மாலையில் வருவார்கள் எனத்தெரிந்தது. ஒரு வைணவப் பெரியவரும், சைவத்தந்தையும் மகிழ்ந்து உரையாடப்போகும் செய்தியினை யறிந்த நாங்கள் எங்கள் மகிழ்வை வரவேற்பின் வழியாகக் காட்ட எண்ணியிருந்தோம்.

"உண்டு பல் யோனியெல்லாம் ஒழித்து மானுடத்துதித்தல்
கண்டிடில் கடலைக்கையால் நீந்தினன் காரியம் காண்"

என்று அருளிப்போந்தனர் நம் பெரியோர்! மனித வாழ்வின் பயன் இன்றே கிடைத்தது என்னும்படி மகிழ்ச்சி அடைந்தோம்.

முன்னிரவு மணி எட்டு ஆதீனமுகப்பின் அலங்கரிக்கப் பெற்ற நாடக மேடையில் மாயூர நகரப்பிரமுகர்கள், தருமை மெய்யடியார் கூட்டம் ஆய யாவரும் ஒருங்கிருக்க வைணவப் பெரியார் வானமாமலை மடம் 27-வது பட்டம் ஸ்ரீமத் இராமநுஜ ஜீயர் சுவாமிகள் வைணவ அடியார் புடைசூழ எழுந்தருளினார்கள். உடன் எங்கள் குரு மகாசந்நிதானம் அவர்கள் புன்னகை தவழும் முகத்தோடு சென்று வரவேற்றுப் பொன்னுடை போர்த்தி மகிழ்ந்து, அருகிருந்தார்கள். இருவரும் மேடைமீது அமர்ந்தபடி அளித்த திருக்காட்சி அரன் அரி ஒருங்கிருந்த அரி அர்த்தது காட்சியாக இருந்தது. என்றும் காணக்கிடைக்காத காட்சியாகவும் இருந்தது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள்,

"இந்த நாள் ஒரு பொன்னாள். தெய்வீக வரலாற்றிலே ஒரு பொன்னேட்டில் பொறிக்கவேண்டிய திருநாள் வானமாமலை ஸ்ரீமத் ஜீயர் சுவாமிகளின் வரவு நம்மை மகிழ்விக்கிறது. அம்மகிழ்ச்சியின் பிரதிபலிப்பாகத்தான் இன்று மாயூரநகர அன்பர்களும் மற்றும் பலரும் நெடுநேரமாகியும் இந்தமகிழ்ச்சியினைக் காணக் காத்துக் கொண்டுள்ளனர். இது மிகவும் மகிழ்ச்சியை விளைக்கிறது. நாட்டில் இன்று பரவியுள்ள நச்சுக்கொள்கை

253

இனி நசித்துவிடும் என்ற நம்பிக்கை பிறக்கிறது. தலை விரித்தாடும் நாத்திகத்தைப் போக்கித்தூய தெய்வ நெறியினைப் பரப்ப வேண்டும். மக்கள் உள்ளங்கள் எல்லாம் உண்மைத் தெய்வ நெறி பரவவேண்டும். உலகம் தழைத்தோங்கவேண்டும்" என்று வரவேற்புரை வழங்கியருளினார்கள்.

ஸ்ரீமத் இராமாநுஜஜீயர் சுவாமிகள் "இங்கு தர்மம் தழைத்தோங்கி வளர்கிறது என்பதற்கு இன்றைய கூட்டமே ஒரு சான்று. இங்குக் குழுமியிருக்கும் அன்பர் கூட்டம் தான் ஆத்திகத்தைப் பரவச்செய்து மக்கள் மனதில் இருள்போக்கி ஒளிபரப்பும் ஏற்புடைச்செயலாற்றச் செய்தல் வேண்டும். நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தில் 'முனியே' எனத் தொடங்கும் ஒரு பாவில் 'முக்கண்ணன்' என வரும் அடியிலிருந்து சைவ வைணவ ஒற்றுமை அன்றும் நிலவியது என்பது தெளிவு" என்று மிக அமைதியாகப் பேசினார்கள்.

ஆதீனக்கல்லூரி முதலிய கல்வி நிலயங்களின் ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாகவும், ஆதீன வேதசிவாகம பாடசாலை சார்பாகவும், சமஸ்கிருதக் கல்லூரியின் சார்பாகவும் வரவேற்புரைகள் வாசித்து அளிக்கப்பட்டன. தருமைத் தமிழ்க் கல்லூரி துணைத்தலைவர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "நான் கைலாயம் சென்றேன்; சிவனைக் காணவில்லை. ஸ்ரீவைகுண்டம் சென்றேன்; திருமாலைக் காணவில்லை. இடையில் தருமை வந்தேன்; கண்டேன் சிவனையும், திருமாலையும்; கொண்டேன் களிப்பு" என்று கூறி மக்கள் மனதை ஆரம்பத்திலேயே மகிழ்ச்சிக் கடலில் திளைக்கவைத்து விட்டார்கள். மேலும் இரு மதங்களுக்கும் உள்ள ஒற்றுமைகளையும், தற்கால நிலைமையினையும் மக்கள் நடக்கவேண்டிய தன்மையினையும் கூறிச் சுருங்கிய நேரத்தில் தம் உரையை முடித்துக்கொண்டார்கள்.

அடுத்துக் கடைசி நிகழ்ச்சி இறைவணக்கம் தான்! ஒரே அமைதி! ஜனசமுத்திரத்தில் ஒரு துளியாயிருந்த நான் சற்று எட்டிப்பார்த்தேன். என்ன ஆச்சரியம்! இருமுகப்பு எங்கும் மக்கள் கூட்டம். மழையையும் பொருட்படுத்தாது வந்தவர்

களின் ஆழ்ந்த பக்திதான் என்னே! இப்பக்தியன்றோ நம்மை—நம் நாட்டை—ஏன்? உலகத்தையே உய்விக்கும் என எண்ணிய போது என் உள்ளமும், உடலும் உவகையினால் பூரித்துப் பொங்கி மேடையை நோக்கின் கண்ணுதற் கடவுள் தன் அடியார் கூட்டம் புடைசூழக் கைலாயத்தில் திருவோலக்கத்தில் அமர்ந்திருந்த திருக்காட்சிதான் என் கண்முன் தோன்றியது. மற்றென்ன சொல்ல! ஆனந்த உலகிலே சஞ்சரித்தேன்.

"சைவமும் திருநீறும் கண்டிகையும் வாழ்க.......நற்கோ நிரைகள் வாழ்க" என்று இசையுடன் கடவுள் வாழ்த்துப் படாப்பெற்றது. என் நிலையுணர்ந்தேன். என்னையுமறியாமல் என் நாவும் வாழ்க! வாழ்க!! என வாழ்த்தியது. கூட்டம் முடியும் தருணம்! தமிழகத்தின் இருபெருசமயத்தலைவர்கள் தாம் அருள் வழங்கும் காட்சியை யாவரும் என்றும் பார்க்கவேண்டும் என்று கருதி ஒளிப்பதிவுப் பெட்டியும் (Comera) 'கிளிக்' என்ற ஓசையுடன் தன் அலுவலை முடித்துக்கொண்டது. இத்துடன் அன்றைய நிகழ்ச்சி முடிவுற்றது.

ஜீயர் சுவாமிகள் அடியார் கூட்டம் புடைசூழத் தேவாரப் பாடசாலை விடுதியை அடைந்து இரவு தங்கியிருந்தார்கள். மறுநாள் சனிக்கிழமை காலையில் ஜீயர் சுவாமிகள் காவிரிக்குச் சென்று அநுட்டானுதி காரியங்களை முடித்துவந்து இளைப் பாறிக்களித்திருந்தனர். அன்றிரவு ஜீயர் சுவாமிகளுடன் வந்த அடியார்கட்கும், ஏனைச்சிப்பந்திகட்கும் குருமகா சந்நிதானம் அவர்களால் புத்தாடைகள் வழங்கப் பெற்றன, ஆடைகளைப்பெற்ற அவ்வடியார் கள் மனம் குருமகாசந்நிதானம் அவர்களின் மாரியன்ன வண் கைத்திறத்தையும், பெருங்கருணைப் பேற்றினையும் ஒருங்கெண்ணி, மகிழ்ந்தார்கள்.

சுவாமி அவர்கள் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை (29—8—54) காலை திருவழுந்தூருக்குப் புறப்பட்டார்கள்.

25அ

வெள்ளியம்பலவாணர் கழகம்.

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி பழைய மாணவர் கழகம்

5–9–54 ஞாயிற்றுக்கிழமை யன்று காலை 12-மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் முன்னிலையில் இக்கழகம் தொடங்கப்பெற்றது.

அவ்வமயம், வித்வான் G. முருகையாப்பிள்ளை அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் பழைய மாணவர் கழகத்தைத் தொடங்கி வைத்து கழகத்திற்கு நல்லாசி கூறினார்கள். மேலும் பழைய மாணவர்கள் ஒவ்வொருவரும் வெளியுலகிற் பழகும் முறை யையும் கடவுள் நம்பிக்கை ஒவ்வொருவருக்கும் இன்றியமை யாதது என்றும், தமிழாசிரியர்களாகிய உங்களால்தான் மாணவர்களிடையே கடவுள் நம்பிக்கையை எளிதில் பரப்ப முடியும் என்றும், கடவுள் நம்பிக்கையின் மூலந்தான் வருங்கால உலகம் முன்னேற முடியும் என்றும் கூறினார்கள்.

பின்னர் கழக உறுப்பினர்கள் அனைவரும் கழகத்திற்கு 'வெள்ளியம்பலவாணவர் கழகம்'' என்ற பெயரே மிகமிகப் பொருத்தமானதென்று கூறி எல்லோரும் அப்பெயரையே ஆமோதித்தார்கள். பின்னர் கழகத்திற்கு ஓர் செயற்குழு அமைக்கப்பட்டது. அதில் தலைவரும், செயலாளரும், தருமை யாதீனத்தில் இருப்பவர்களில் ஒருவரும் வெளியூர்களிலிருப்பவர் களில் ஒருவருமாக இருக்கவேண்டுமென்ற எல்லோருடைய விருப்பத்திற்கிணங்க செயற்குழு அமைக்கப்பட்டது.

செயற்குழுவின் உறுப்பினர்கள் விபரம்.

போஷகர்:

தருமையதீனம் மகாசந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.

(1) தலைவர்:

வித்வான், ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
(சென்னைப் பிரசார நிலையம்.)

(2) துணைத்தலைவர்:

திரு. வித்வான், வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள்,
(பல்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், தருமை.)

7556.

(3) செயலாளர்:

திரு. வித்வான், முருகையாப் பிள்ளை அவர்கள்,
(தமிழாசிரியர், கவந்தப்பாடி.)

(4) துணைச்செயலாளர்:

திரு. வித்வான், சொ. சிங்காரவேலன் அவர்கள்,
(பல்கலைக் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், தருமை.)

(5) பொருளாளர்:

திரு. வித்வான், வி. சபேசன் அவர்கள்,
(கீழ்த்திசை நடுநிலைப்பள்ளி, தருமை.)

கூட்டத்திற்கு சுமார் பதினெரு பழைய மாணவர்கள் வந்திருந்தனர் எல்லோரையும்சேர்த்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் உடனிருக்க நிழற்படம் எடுக்கப்பட்ட பின்னர் கூட்டம் கலைந்தது.

பிற்பகல் இரண்டு மணி அளவில் வெள்ளியம்பல மாணவர் கழகம். ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் மீண்டும் கூடியபோது காலையில் கழகத்திற்கு வந்திருந்த உறுப்பினர்கள் அனைவரும் வந்திருந்தனர். அவ் வமயம் கழகம் செயலாற்ற வேண்டிய முறைகளைப் பற்றி ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர்கள் பின்னர் எல்லோருடைய கருத்துக்களையும் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு அவை எல்லோராலும் ஆமோதிக்கப் பட்டன. சிறப்பாக பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் வடமொழிப் பேராசிரியர் திரு. இராசகோபால சாஸ்திரிகள் அவர்களும் வந்திருந்து சில சிறந்த கருத்துக்களைக் கூறியது குறிப்பிடத் தக்கது. கூட்டம் மாலை நான்குமணி அளவில் இறைவாழ்த் தோடு இனிது முடிந்தது. 2-8-46 தருமபுரம் ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசுப்ரமணிய தேசிக ஞானசம்பந்தபரமா சாரிய சுவாமிகள் அவர்களால் 2-8-46 அன்று தொடங்கப் பெற்றது. தருமபுர ஆதீனப்பல்கலைக் கல்லூரி, தோன்றி எட்டு ஆண்டுகளில்தமிழில் 50-க்கு மேற்பட்ட புலவர்கள் இக்கல்லூரி யில் பயின்று பல மாவட்டங்களிலிருந்து பணியாற்றுகின்றனர். இங்ஙனம் பயின்ற மாணவர்களை ஆண்டுக்கொருமுறை ஒன்று கூட்டிக் காணவே இக்கழகம் தோற்றுவிக்கப்பெற்றது.

757

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

ஆவணி மூலத்திருநாள் நிகழ்ச்சிகள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்திலே முதல்நாள் பேரவை 5—9—55 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு கடவுள் வணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. இப்பேரவைக்கு திவான்பகதூர் பிர்ம்மஸ்ரீ K. S. இராமசாமி சாஸ்திரிகள் B. A., B. L.. அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைவருக்கு வரவேற்புரை அளிக்கப்பட்டது.

தலைவர் தமது முன்னுரையில் "இன்றையதினம் இவ்வாதீனத்திற்கே மிக முக்கியமான தினமாகும். இந்த செவ்வாய்க்கிழமையன்றுதான். இவ்வாதீன ஸ்தாபகரான குருஞானசம்பந்தர் மதுரையிலே இறைவனிடம் சிவலிங்கம் பெற்றார்கள். குருவும் சீடர்களும் சேர்ந்து வாழ்கின்ற இடம்தான் மடமாகும், தமிழகத்திலுள்ள மக்கள் யாவரும் தங்களது செல்மானது நல்வழியில் செலவழிக்கப் படவேண்டும் என்று விரும்பியே தங்களது செல்வத்தையெல்லாம் ஆதீனகர்த்தர்களிடம் பணிந்து கொடுத்தார்கள். இவ்வண்ணம் பெருஞ்செல்வம் பொருந்திய தரய்த் திகழ்வதுதான் மடம், கடவுள் வழிபாட்டால் எல்லாக் காரியங்களையும் லெகுவாகச் சாதித்து விடலாம்" என்று ஓர் அரிய சொற்பெருக்காற்றினார்கள்.

பின்னர் தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் துணைத் தலைவரும், ஆதீனப்புலவருமான திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் "பழியஞ்சிய சொக்கர்" என்ற தலைப்பில் யாவரும் வியப்புறும் வண்ணம் சைவ சித்தாந்த கருத்துக்கள் பலவற்றை அழகாக எடுத்துரைத்து, திருவிளையாடல் புராணத்திலிருந்து சிறந்த கதையையும் எடுத்துக்கூறி அவையிலுள்ள அனைவரையும் ஆனந்தப்படுத்தினார்கள்.

ஆவணிமூலத் திருநாள் "குமரகுருபரர்" நாடகத்தில் :



தருமைக்குரு மாசிலாமணி தேசிகர்
குமரகுருபரருக்குக் காவியுடையளித்தல்

ஆவணிமூலத் திருநாள் "மனோகரன்" நாடகத்தில் :

பகைவேந்தனிடமுள்ள தன் தொல்லரியணையை மீட்டுவரத்
தாயாரிடம் வாள்பெற்றுப் போர்க்குச் செல்லும் மனோகரன்

ஆவணிமூலத் திருநாள் மூன்றுவதுநாட் பேரவையில் :



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
வித்துவான், ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன் M.A., அவர்கட்கு
"செந்தமிழ்ச்செல்வர்" என்ற பட்டம் பொறித்த பதக்கம் அளித்தல்

ஆவணிமூலத் திருநாள் "ஔவையார்" நாடகத்தில்:

அங்கவையும் சங்கவையும் ஔவையாரும் பாரிவள்ளலும்

பிறகு சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்வான் ஸ்ரீமத் மாணிக்கவாசகத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "ஏழிசைப்பயன்" என்ற பொருளில் தமிழிலுள்ள ஏழுஇசைகளைப் பற்றியும், அவ்விசைகளின் பயனை மாணிக்கவாசகர், சுந்தரர், ஞானசம்பந்தர் அப்பர் ஆகியோரின் பாடல்கள் மூலமாக எடுத்துக் கூறினார்கள். அடுத்து ஸ்ரீபித்துக்கொளி முருகதாஸ் அவர்கள் அவையிலுள்ள அனைவரின் உள்ளங்கள் உருகும் வண்ணம் சிவபஜனைபாடி யாவரையும் மகிழ்வித்தார்கள். இதன்பின்னர் தலைவர் முடிவுரை கூறினார்கள். நன்றி நவின்றபின் கூட்டம் இனிது கலைந்தது இரவு 9-30 மணிக்கு ஆதீனக்கல்வி நிலையங்களின் மாணுக்கர்களால் "குமரகுருபரர்" என்னும் நாடகம் வெகு அழகாக நடித்துக் காட்டப்பட்டது,

இரண்டாம் நாள் பேரவை 6–9–54 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பிர்மஸ்ரீ K. பாலசுப்பிரமணிய ஐயர் B. A., B. L., M. L. C., அவர்கள் தலைமையில் இறைவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. தலைவர் தமது முன்னுரையில் இறைவணக்கத்தின் சிறப்பையும் ஆதீன மடங்களின் சிறப்பையும் விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

பின்னர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித்தலைவர் பிர்மஸ்ரீ Y. மகாலிங்கசாஸ்திரிகள் M.A., B.L. அவர்கள் வேதப்பொருள் என்னும் பொருள் பற்றி "வேதத்தின் கொள்கைகளை யாவரும் அனுஷ்டிக்கவேண்டும், வடமொழியானது பூஜிக்கப்படவேண்டும். எந்தமொழியில் வேதங்கள் இருக்கின்றனவோ அம்மொழியாளர் நன்கு வாழவேண்டும். வேதங்கள் யாவும் ஜெர்மனி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வேதம் அறிய வேண்டிய விஷயங்களைக்கூறுகிறது. வேதத்தின் கர்த்தா சர்வேசுவரன்" என்று மிக்க அழகும் ஆராய்ச்சியும் நிறைந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். இவ்வேதப் பொருள் பற்றிய பேச்சு அடுத்த இதழில் தனிக்கட்டுரையாக வெளிவரும்.

அடுத்து திருநள்ளாறு ஸ்ரீ தர்பாரண்யேசுவர சுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் "பாட்டும் பரமனும் என்னும் பொருள் குறித்து" சொற்பெருக்காற்றினார்கள்.

759

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றி நவிலப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது. இரவு 8-மணிக்கு ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர், மாணுக்கர்களால் "மனேகரன்" என்ற நாடகம் திறம்பட நடிக்கப்பட்டது அதில் மிகவும் திற மையாக நடித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மூன்றும் நாள் பேரவை 7—9—54 செவ்வாய்க்கிழமை மாலை 5-மணிக்கு சென்னை நிதி, கல்வி அமைச்சர் கனம், ஸ்ரீ C. சுப்பிரமணியம் B. A., B. L., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

முதலில் தருமபுர ஆதீனம் 25-ஆவது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் "சமயபோதச்சொற்பொழிவுகள்" என்ற ஆவணிமூலத் திருவிழா மலரினை வெளியிட்டு, அவையின்கண் கூடியிருந்த யாவருக்கும் ஆசியுரை நல்கினுர்கள். பின்னர் தலைவர் அவர்களுக்கு வரவேற்புரைகள் பல வாசித்தளிக்கப்பட்டன. கல்வி நிலையங்களின் ஆண்டறிக்கைகளும் வாசித்தளிக்கப் பட்டன. இதன் பிறகு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களால் திரு. வித்வான் கி. வா. ஜகந்நாதன் M.A. அவர்களுக்குப் பொன் ஆடை போர்த்து 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டத்தையும் சூட்டியருளினுர்கள்,

பின்பு, திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 'பண்சுமந்த பாடற்பரிசு' என்ற பொருள்பற்றி மிக்க அழகாகப்பேசினுர்கள். அதுபோழ்து அவர்கள் நான் முன்னரே மகாசந்நிதானம் அவர் களிடம் அன்புப்பரிசினைப்பெற்றுவிட்டேன். நான் 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டத்திற்குச் சிறிதும் தகுதியுடையவன் அல்லன் எனினும் இறைவனது வழி வந்தோரால் அளிக்கப்படு வதால் அதை மனமுவந்து பெற்றுக்கொண்டேன். இறைவன் பிட்டிற்காகவோ அல்லது பிரம்பு அடிபெறுவதற்காகவோ மண் சுமந்தானல்லன். தனது அடியாளாகிய வந்திக்கு வாழ்வளிக்க எண்ணியே மண் சுமந்தான். இறைவன் எப்பொழுதும் ஏழை களின் தொண்டனுகத்தானிருக்கிறுன். இறைவன் எப் பொழுதும் பண்சுமந்த பாடலைத் தன் அடியவர்பாட மிக விரும்புவான். சுந்தரரை வலியவந்து பண்மிக்க பாடலைப்பாட வேண்டியுள்ளான். உண்மையான பாடல் எதுவென்றுல் அது

இறைவனைப் பற்றிய பாடலேயாகும். இறைவனுக்கு நாம் யாவரும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அதைப்பண் சுமந்தபாடல்பரிசாக இறைவனுக்கு அளிப்போமாக.'' என்று தேனினும் இனிய இன்சொற்களால் சொற்பெருக்காற்றினர்கள். அவையோர் பலரும் செந்தமிழின்பக்கடலில் மூழ்கித் திளைத் திருந்தார்கள்,

அடுத்து சென்னை, ஆதீனப் பிரசாரநிலைய விசாரணை, வித்வான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், 'செக்கர்வார் சடைச் சொக்கநாயகர்' என்னும் பொருள் குறித்து மிக்க ஆராய்வோடு அரிய சொற்பொழிவு ஒன்று ஆற்றினர்கள். அதில் பொதுவாக தலைமயிர் கருப்பாக இருந்தாலும் சடையின் நிறமானது சற்று சிகப்பாகத்தான் இருக்கும். இதனல் 'செக்கர்வார்சடை' என்று வந்தது. மக்களுக்கு மிக்கதேவையான பொருள்களுள் நீரும் ஒன்று. நீரானது அதிகமாக வெள்ளப் பெருக்கெடுத்து அல்லது மிகவும் வற்றி மக்களுக்குத்துன்பந்தரும் என்பதை அறிந்த செக்கர்வார் சடையன் தன் தலையிலேயே நீரைத்தாங்கி மக்களுக்கு வேண்டுமளவு ஈத்தளித்துக்கொண் டிருக்கிறன்'' என்று கூறினர்கள்.

இதன் பிறகு கல்லூரியில் முதன்மைபெற்ற மாணக்கர் களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி நவிலப்பட்டு இப்பேரவை இனிது முடிந்தது.

இரவு 9-30 மணிக்கு ஆதீனக் கல்விநிலையங்களின் மாணக்கர் களால் வெகு திறமையுடன், கண்டார் யாவரும் களிப்புறும் வண்ணம் 'ஔவையார்' என்ற நாடகம் நடத்திக்காட்டப் பட்டது. இந்நாடகத்தில் இன்னும் மிகச் சிறப்பாக நடித்தவர் களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 'தமிழ்நாட்டில் தமிழ் தான் ஆட்சி மொழியாகிய பின்னர் பிறமொழிகள் புகுத்தப்படுவதால் தமிழுக்குக் கேடுகிடையாது. ஆனல் தமிழ் ஆட்சிமொழியாவ தற்குப் பிறமொழிகள் இங்கு புகுத்தப்பட்டால் அதனல் நிச்சயமாகத் தமிழ் பாதிக்கப்படும்'' என்ற கருத்துடன் சிறந்த சொற்பொழிவு ஆற்றினர்கள்.

இவ்வாருக ஆவணிமூலத் திருநாள் வெகு விமரிசையாக மூன்று நாட்கள் நடந்தன.

761

வாழ்த்துச் செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்

70, தெற்கு ஆவணிமூலவீதி, மதுரை.

* * * *

ஆவணிமூலத் திருநாள், ஆதீனக் கல்லூரி முதலிய கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா அழைப்பிதழ் கிடைத்து, இளவரசு சந்நிதானம் திருக்கண் சாத்தித் திருவுளம் மகிழ்கிறது.

மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள் மாணுக்கரும், தண் தமிழ் வளர்த்துவரும் ஆசிரியரும், தவநெறிச் செல்வருமாகிய திரு. கி, வா. ஜகந்நாதன் அவர்கள் எம்.ஏ.. செந்தமிழ்ச் சொக்கர் திருவருளுக்கும், திருவடிகளின் பேரன் பிற்கும் பாத்திரரான நற்செய்தி இன்பம் ஊட்டுகின்றது.

செந்தமிழ்ச் செல்வர் என்ற பட்டம் அருளிச் சிறப்புச் செய்வது மிக மகிழ்ச்சி தருகிறது.

தக்க தவநெறியாளர்களின் சீரிய தலைமையில் அருள் மணிகள் சொல்லமுது படைக்க அருளிச்செய்திருக்கும் வித்தகத்தை வியந்து பாராட்டி, இறும்பூது எய்தி நிற்கின்றேம்.

விழா இனிது நிறைவேற ஆலவாய் மேவிய அண்ணல் திருவருள் பாலிப்பானுக என இளவரசு சந்நிதானம் அருளும் நல்வாழ்த்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேம்.

* * * *

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகசுந்தரசத்திய ஞான பண்டாரசந்நிதி அவர்கள்,

செங்கோல்மடம் ஆதீனம், பெருங்குளம்.

ஸ்ரீவைகுண்டம்தாலுக்கா. திருநெல்வேலி ஜில்லா.

* * * *

மணிவாசகரின் அன்பு, அருள் பக்தி நிலைகளை உலகவர்க்கு எடுத்தூட்டவும், பாண்டியர்க்கு அருள் புரியவும், திருக்கருணை கொண்டு நரியைப் பரியாக்கி, நாட்டவர்க்கு விளையாடல் புரிந்த மதுரையம்பதியின். சொக்கேசனின் புனிதத் திருவிளையாடல் புரிந்த ஆவணிமூலத் திருநாளிலே, வித்வான் 'ஜகந்நாதன்' அவர்களுக்கு 'செந்தமிழ்ச் செல்வர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்க வேண்டுவது சாலச்சிறந்தது.

இப்புனித நன்னாளிலே சைவம் பரவவும் சமயத்தவர்களுக்கு உண்மை தெரியவும், கற்றவரின் கலைத்திறன் கண்டு களிக்கவும் கலாசாலை மாணவர்களின் இயல், இசை, நாடகத்தின் ஆர்வம் தெரியவும். குருபரர், அவ்வையார் போன்ற தெய்வத் திருமக்களின் வாழ்க்கைச் சரித்திரங்களை நம்மவர் கண்டு களிக்கவும் பலவாய்ப்புகள் கொண்டதாக அமைத்துத்தந்த சந்நிதானத்தின் திரு உள்ளத்தில் கோயில் கொண்ட திருவருளை என்றென்றும் நாம் வழுத்துகின்றோம்.

Private Secretary to the Lieut. Governor
Vindhya Pradesh, Rewa.
2nd September, 1954.

Sri Mouna Somasundara Thambiran,
Dharmapuram Mutt, Tanjore District.

Dear Sir,

The Lieutenant Governor is pleased to learn that the head of Dharmapuram Mutt is conferring the title of Sendamil Selvar on Shri K. V. Jagannathan, Editor, Kalaimagal. He considers it a happy idea and sends his good wishes for the success of the function.

Yours faithfully,
(Sd.) K. L, MUKERJI.

763

வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய அன்பர்கள்.

1. ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள், ஆதீனம், மதுரை

2. செங்கோல் மடம், பெருங்குளம்.

3. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள். தலைமைத் தமிழ்ப்பேராசிரியர், பிரசிடென்சி கல்லூரி,

4. ஸ்ரீ சர்தார் ஏ. வேதரத்தினம் பிள்ளை அவர்கள், வேதாரண்யம்.

5, ஸ்ரீ எஸ். மீனாட்சிசுந்தரம், பி. ஏ., எல். டி., முனிசிபல் சேர்மென். ஈரோடு.

6. ஸ்ரீ கே. எ. பி. விஸ்வநாதம் அவர்கள், திருச்சி.

7. இசையரசு ஸ்ரீ எம். எம். தண்டபாணிதேசிகர் அவர்கள் தியாகராஜநகர், சென்னை.

8. ஸ்ரீ கே. சுப்பிரமணிய ஐயர் அவர்கள், திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

9. ஸ்ரீ எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார் அவர்கள். டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட். குடந்தை.

10. ஸ்ரீ எஸ். ஆரோக்கியசாமி பிள்ளை அவர்கள், ராம விலாஸ் சர்விஸ் மானேஜர், குடந்தை.

11. ஸ்ரீ டி. மரகதசுப்பிரமணிய பிள்ளை அவர்கள், அம்பாசமுத்திரம்

764

12. ஸ்ரீ கே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,
பத்திரிகை நிருபர், சீகாழி.

13. ஸ்ரீ இரா. சண்முகம், தமிழாசிரியர், சீகாழி.

14. டி. சண்முகம், தமிழ்ச்சங்க நூல்நிலையம், திருச்சேறை,
கும்பகோணம் தாலூகா.

15, விந்தியப்பிரதேச கவர்னர், ஸ்ரீசந்தானம் அவர்கள்.

16. சபாபதி செட்டியார், கும்பகோணம். (தந்தி)

17. A. டாக்டர், சிதம்பரநாத செட்டியார் அவர்கள்.

18. ரெ, இராமாநுஜம், தெற்கூர்.

19. A C. செட்டியார்.

கட்டுரையாளர்களுக்கு

ஞானசம்பந்தம் இதழுக்கு கதை, கட்டுரை, கவிதை, எழுதுவோர் பிரதி மாதமும் 15-ம்தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டும். கட்டுரைகள் டிம்மி அளவில் ஒரு பக்கத்திலேயே எழுதி அனுப்புதல் நல்லது.

மதிப்புரைக்கு புத்தகங்கள் அனுப்புவோர் இரண்டு பிரதிகளாக அனுப்புதல் இன்றியமையாதது.

துணையாசிரியர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்,
தருமபுர ஆதீனம், மாயூரம் P. O.

765

ஆதீன சமயப் பிரசாரம்

12—8—54 குற்றாலம் ஸ்ரீ உக்தவேதீஸ்வரஸ்வாமி தேவஸ்தானத்தில் சமயப்பிரசாரம் ஆதீன வித்துவான் புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள் தலைமையில் நடந்தது. அவ்வமயம் வித்துவான்கள் திரு. வி. சா. குருசாமி, சொ. சிங்காரவேலன், பிச்சையாசோழகர், கிருஷ்ணமூர்த்தி முதலியோரும், ஆதினச் சமயத்தொண்டர் திரு. மருணீக்கியாரும் முருகையாப்பிள்ளை B.A., L.T., யும், உள்ளூர் மருத்துவர் திரு. அண்ணாமலைச்செட்டியாரும் பேசினர். உள்ளூர் அன்பர்கள் பெண்பாலர் உட்பட வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தனர். உள்ளூர் மக்கள் சார்பில் திரு. அண்ணாமலை செட்டியார் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். கல்லூரி மாணவர்களும் கலந்துகொண்டனர்.

குடந்தை:-

13—8—54 வெள்ளிக்கிழமை மாலை 7-30 மணிக்கு ஸ்ரீமங்களாம்பிகா சமேத கும்பேசுவரசுவாமி தேவஸ்தானம் மங்கள விலாச நூல் நிலையத்தில் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட செயலாளர் திரு. சிவகுருநாதச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடந்தது. அவ்வமயம் வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. மருணீக்கியார், வித்துவான்கள் திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. வி. சா. குருசாமி, சொ. சிங்காரவேலன், திரு. N சம்பந்தம் B A., Hons. முதலியோர்கள் முறையே 'தாயின் தண்ணளி, என்ன வேண்டும்? சமயம் ஏன்? வாழ்வது எவ்வாறு? பொருந்துமோ! வழிபாடு ஏன் என்பதுபற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். திரளான மக்கள் வந்திருந்தார்கள். கூட்டம் சிறந்த முறையில் நடைபெற்றது.

நீடாமங்கலம்:

14—8—54 சனிக்கிழமை காலை 10-மணிக்கு கலயநல்லூர் ஆலயத்தில் (சாக்கோட்டை) வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடந்தது. அப்பொழுது திரு. மருணீக்கியார் 'தலச்சிறப்பு' என்பதுபற்றியும்

திரு. வேலாயுத ஓதுவார் கொண்டதவம் என்பதுபற்றியும் பேசினார்கள். ஊர் பொதுமக்கள் சார்பாக சிவபுரம் சாய்ப மூர்த்தி குருக்கள் ஆதீனத்தைப் பாராட்டி நன்றி கூறினர். வந்திருந்த அன்பர்களுக்கு ஆதீன இலவச வெளியீடு வழங்கப் பட்டது. எல்லாவற்றிலும் சிறப்பாக உழவாரப் பணியும் நடைபெற்றது.

சனிக்கிழமை மாலை 5-மணிக்கு வலங்கைமான் காந்தி ஆஸ்ரமத்தில் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு காந்தி ஆசிரமத் தலைவர் சந்திரசேகபுரம் திரு. துரைசாமி ஐயர் தலைமைவகித் தார்கள். ஸ்ரீமத். இராமலிங்க தம்பிரான் சுவாமிகள், திரு. மருணீக்கியார், திரு. வேலாயுத ஓதுவார் முதலியோர், அன்பும் கடவுளும், "மதம் வேண்டும்", சன்மார்க்கம் என்பது பற்றி பேசினார்கள். திரளான மக்கள் வந்திருந்தார்கள். கூட்டம் மிக அமைதியாக நடந்தது. வலங்கைமான் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இராஜாளியார் அவர்கள் நன்றி கூறினார்கள். திரளான மக்கள் வந்திருந்ததால் போலீஸாரும் நல்லமுறையில் ஒத்துழைத் தார்கள். எல்லாவற்றையும்விடச் சிறப்பாக முகமதிய நண்பர் கள் சமயப்பிரச்சாத்திற்கு ஒத்துழைத்தது எங்கும் காண முடியாத காட்சியாக இருந்தது.

இரவு 8-மணிக்கு ஆலங்குடி தேவஸ்தான மண்டபத்தில் வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடந்தது. திரு. மருணீக்கியாரும், திரு. வேலாயத ஓதுவாரும் 'வழிபாடு', வைத்தபொருள் என்பதுபற்றியும் பேசினார்கள். ஆலய நிர்வாகிகள் வேண்டிய வசதிசெய்து கொடுத்தது பாராட்டத்தக்கது. பொதுமக்களும் ஒரேநாளில் மூன்று இடங்களில் பிரச்சாரம் நடந்து வருவதை அறிந்து பாராட்டிப் பேசினார்கள்.

15—8—54 ஞாயிறு காலை 11-மணிக்கு திருப்பூவனூர் தேவஸ்தான மண்டபத்தில் கூட்டம் நடந்தது அப்பொழுது வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருப் புகழ்ச்சுவாமி வெங்கடரமணி ஐயர், திரு. வேலாயுத ஓதுவார் முதலியோர் முறையே 'திருநாமம்', 'நீத்தார்பெருமை', 'பூவனூர் புனிதன்' என்பதுபற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

767

மாலை 3·30 மணிக்கு நீடாமங்கலம் தேவஸ்தான மண்டபத்தில் போஸ்டுமாஸ்டர் திரு. R. P. கணபதி அவர்கள் தலைமையில் நடந்தது. திருப்புகழ் சுவாமி திரு. வெங்கடரமணி ஐயர், வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருணீக்கியார் முதலியோர், முருகனும் அன்பும், 'சுதந்திரம்', வழிபாடு, நமது கடமை என்பது பற்றிப் பேசினார்கள். நிர்வாக அதிகாரி மா. கிருஷ்ணசுவாமி நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

இரவு எட்டுமணிக்கு அம்மாப்பேட்டை கடைவீதியில் விநாயகர் ஆலயத்திற்குமுன் நடந்தது. பொதுமக்கள் வெகு உற்சாகத்துடன் தங்களது மகிழ்ச்சி வெள்ளத்தைக் காட்டினார்கள். ஊர் சிவநேசச் செல்வர்கள் திருமுறை முழக்கத்துடன் பிரசாரகர்களை வரவேற்றனர். மேடைமுன் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இருந்தார்கள். கூட்டத்திற்கு அம்மாப்பேட்டை கழக உயர்நிலைப்பள்ளி திரு. கொ. பொன்னுசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருணீக்கியார் முதலானோர்கள் பக்தி, தொண்டு, சைவம் என்பனபற்றி பேசினார்கள். குழுமி இருந்த மக்கள் அனைவரும் ஆதீனப் பணியினைப் புகழ்ந்து பாராட்டினார்கள்.

இரவு 12 மணி முதல் வைகறை 4 மணி வரை தஞ்சை மாரியம்மன் கோவில் தேவஸ்தான முன்மண்டபத்தில் கூட்டம் நடந்தது. திருவிழா நாள் ஆனபடியால் மக்கள் ஆயிரக்கணக்காக கூடியிருந்தார்கள். 4 மணி வரை ஒருவர் கூட எழுந்து செல்லவில்லை. ஆதீனப் பிரசாரகர்கள் வித்துவான்கள், ஸ்ரீமத் இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருணீக்கியார் முதலானவர், 'மகமாயா' தாயிற் சிறந்த கோயில், பண்டைத் தமிழர்பண்பாடு என்பனபற்றி பேசினார்கள். அரண்மனை தேவஸ்தான அதிகாரிகளும் சிப்பந்திகளும் உடனிருந்து கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

16—8—54. திங்கள் மாலை 4 மணிக்கு தஞ்சை சீர்திருத்தப்பள்ளியில் கூட்டம் நடந்தது. வித்துவான், ஸ்ரீமத் இராம

லிங்கத் தம்பிரான் சுவாமிகளும், வேலாயுத ஓதுவாரும், 'குழந்தை உள்ளம்' 'குழந்தை விளையாடல்' என்பதுபற்றி பேசினார்கள்.

16—8—54. திங்கள் மாலை 6-மணிக்கு தஞ்சை பெரிய கோவிலில் திரு. K. சுப்பிரவேலு B.A., B.L., அவர்கள் தலைமையில் நடந்தது. வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருள்ணீக்கியார் முதலியோர் முறையே 'ஆலய வழிபாடு' இசைப்பா, சோழர் காலபணி, என்பதுபற்றி பேசினார்கள்.

இரவு 9 மணிக்கு கரந்தை வசிஷ்டேஸ்வரர் கோவிலில் கூட்டம் நடந்தது. ஆதினப்பிரசாரகர் மூவரும், சம்பந்தர், அப்பர், சுந்திரர் என்பதுபற்றி பேசினார்கள்.

17—8—54. காலை 11 மணிக்கு ஐய்யம்பேட்டை போர்டு ஸ்கூல் திரு. T. S. இராதாகிருஷ்ண செட்டியார் தலைமையில் நடந்தது. திரு. இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருள்நீக்கியார் முதலானோர் முறையே 'கல்வி, அழகு 'திருஞானசம்பந்தர்' குழந்தை உள்ளம் என்பதுபற்றி பேசினார்கள். தலைவர் அவர்கள் குழந்தைகளுக்கு இனிப்பு பண்டம் வழங்கினார்கள்.

17—8—54. செவ்வாய் மாலை 6 மணிக்கு பாபநாசம் ஸ்ரீ சீனிவாசப்பெருமாள் கோவில் முன்புறம் கூட்டம் நடந்தது. ஆதினப்பிரசாரகர் மூவரும் கடவுள் வழிபாடு, திருமுறைப் பெருமை. திருநெறியத் தெய்வத் தமிழ் என்பதுபற்றி பேசினார்கள். நிர்வாக அதிகாரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றி கூறினார்.

18—8—54. புதன் இரவு 7 மணிக்கு ஆலூர் காந்தி ஆஸ்ரமத்தில் கீழ்வேளூர் சுந்தரதேசிகர் தலைமையில் கூட்டம்நடந்தது. ஆதீனபிரசாரகர்கள் திரு. இராமலிங்க சுவாமிகள். திரு. மருள் நீக்கியார், திரு. வேலாயுத ஓதுவார் முதலியோர்கள் 'அறனும் அன்பும்' கோயில் வேண்டுமா, இன்பம் என்பதுபற்றி பேசினார்கள். ஆலய டிரஸ்டி திரு. ப. பகவான்தாஸ் உடையார் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

769

19—8—54. வியாழன் காலை 11 மணிக்கு திருநல்லூர் போர்டு ஸ்கூலில் கூட்டம் நடந்தது. திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருள்ணீக்கியார் முதலியோர், 'திருநீற்றுப் பெருமை' கண்ணுடி உள்ளம் என்பதுபற்றி பேசினுர்கள்.

மாலை 4 மணிக்கு, சுந்தரப்பெருமாள் கோவில் போர்டு ஸ்கூலில் திரு. இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருள்நீக்கியார் முதலியோர், கல்வி. நான்வேண்டுவது, முன்னறிதெய்வம் என்பதுபற்றிபேசினுர்கள்.

இரவு 7 மணிக்கு சுவாமிமலை ஸ்வாமிநாதஸ்வாமி ஆலயத்தின்முன் ஆதீனப்பிரசாரகர் மூவரும், சுவாமிநாதன், காலன் அனுகாமல், வேண்டும் புகழ் என்பதுபற்றி பேசினுர்கள்.

20—8—54. வெள்ளி காலை 8 மணிக்கு, இன்னம்பர் எழுத்தறியும் பெருமாள் சன்னிதியில் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திரு. வேலாயுத ஓதுவார், திரு. மருள் நீக்கியார், முதலியோர்கள் அன்புநிலை, அரசர்கண்ட கணக்கு, 'கோழிக்கொடியோன் தாதைபோலும்' என்பது பற்றி பேசினுர்கள்.

மாலை 6 மணிக்கு திருப்புறம்பியம் காக்ஷிநாதசுவாமி ஆலயத்தில் சொற்பொழிவு நடந்தது. திரு. இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்—குருபக்தி, திரு. வேலாயுத ஓதுவார் — பெரியார்கண்ட வாணிபம், திரு. மருள்நீக்கியார்—அப்பர் அருள்நெறி என்பதுபற்றி பேசினுர்கள். இவ்வாறு பிரசாரம் இனிது முடிந்து 21-8-54 காலை தருமபுரம் வந்து சேர்ந்தார்கள்.

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்.
தருமபுரம், மாயூரம் P. O.

ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும்

சீகாழியில் :

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு நிகழும் ஜயஆு ஆடித்திங்கள் 29உ (13—8—54) வெள்ளிக்கிழமை காலே 10-மணிக்குக் காலசந்தி பூஜாவேளேயில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் வெள்ளிக்கவசம் சார்த்துவிக்கப் பெற்றது. அன்று விசேஷ அபிஷேக ஆராதனேகளும் நவசக்தி அர்ச்சனேகளும் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் வந்து தரிசித்து இன்புற்றனர்.

தருமபுரத்தில் :

தருமபுர ஆதீனம் ஸ்ரீதர்மபுரீசுவரர் ஆலயத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளி அருள்வழங்கும் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு நிகழும் ஆடிமீ 29உ (13—8—54) வெள்ளிக்கிழமை காலே தொடங்கி ஏகதின லக்ஷார்ச்சனே இரவு பூர்த்தியாயிற்று. விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனேகளும் நிகழ்ந்தன. மாயூரம் முதலிய பல பகுதிகளிலிருந்து பல அன்பர்கள் வந்து தரிசித்துப் பரவசமடைந்தனர்.

ஜன்மநக்ஷத்திரத் திருநாள்.

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திரத் திருநாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனே செய்வித்துத் தலப்பதிகங்களேயும் அச்சிட்டு வழங்கிவருதல்போல, இம்மாதத்திலும் 31-8-54 அன்று திருமருகல் ஸ்ரீ மாணிக்கவண்ண சுவாமி ஆலயத்தில் அபிஷேக ஆராதனேகள் செய்வித்துத் தலப்பதிக வெளியீடும் வழங்கப்பெற்றது.

721

சமயவளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும்

தருமபுர ஆதீனம் செய்துவரும் சேவை

அறிஞர்கள் பாராட்டு

தருமபுரத்தில் ஆவணிமூலத் திருநாள், ஆதீனக் கல்வி நிலையங்கள் ஆண்டுவிழா.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் ஆவணிமூலத் திருநாளும், ஆதீனக்கல்லூரி முதலிய கல்வி நிலயங்களின் ஆண்டு விழாவும். செப். 5-ந் தேதி ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் ஓய்வுபெற்ற ஜில்லா நீதிபதி ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார் தலைமையில் தொடங்கிற்று. சென்னை சமயப்பிரசார நிலைய விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வறவேற்புரை நிகழ்த்தினார்கள்.

சைவத்துக்கும் தமிழுக்கும் சேவை

பின்னர் அவைத்தலைவர் சைவத்திற்கும் தமிழுக்கும் ஸ்ரீலஸ்ரீ தருமை மகாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் செய்துவரும் அரிய சேவையை இன்று நேரில் தாம்கண்டு மகிழ்ந்ததாகவும், சைவசித்தாந்தக் கொள்கைகளைச் சிறப்பான முறையில் அவர்கள் பரப்பிவருவது பாராட்டத் தக்கதென்றும் கூறினார். 1897-ம் ஆண்டில் அமெரிக்காவினின்றும் திரும்பிய சுவாமி விவேகானந்தரின் தரிசனத்திற்குப் பிறகு தனக்கு ஹிந்துமத ஆராய்ச்சியில் ஓர் தனிப்பட்ட உணர்ச்சி ஏற்பட்டு அன்றுமுதல் எல்லாமதங்களின் நுட்பங்களை அந்தந்த நூல்களினின்றும் துருவி அறிந்துவந்ததாயும் தாம் ஓய்வுபெற்ற காலம் முதல் இன்று வரையில் சமய நூல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதில் தருமையாதீன வெளியீடாகத் தமக்குக் கிடைத்த நல்லசிவம் பிள்ளையின் "சைவதத்துவம்" ஹிந்துமதத்தின் ஜீவநாடியான கொள்கைகட்கும் விஞ்ஞானிகளும் பாராட்டும் நிலையில் ஹிந்துமதம் இருந்துவருகின்றதென்றும் நுட்பமாகப் பாரபட்சமின்றி ஆராய்ச்சி செய்யின்

772

சைவசித்தாந்தக் கொள்கை இதர சமயங்களின் தத்துவங்களை தன்னகத்தே கொண்டிருப்பதுடன் மிக மிக உரியதென்றும் இதை ஒருவரும் மறுக்கமுடியாதெனவும், இந்தமுடிவை தாம் நடுவு நிலைமை உணர்ச்சியோடு கண்டிருப்பதாகவும் கூறி, சைவ சித்தாந்தத்தின் உயிர்க் கொள்கையான பதி, பசு பாசமிம் என்ற முப்பொருளை விளக்கினர்.

பின்னர் ஆதீனப் புலவர் ஸ்ரீ முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், தருமையாதினப் பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர் "பழியஞ்சிய சொக்கர்" பற்றியும். சீகாழி ஸ்ரீ சட்டைநாத ஸ்வாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத் மாணிக்க வாசகத் தம்பிரான் சுவாமிகள் 'ஏழிசைப் பயன்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ் பஜனைக் குப் பிறகு ஆதீனக் கல்வி நிலயங்களின் மாணுக்கர் "குமர குருபரர்" என்ற நாடகத்தை நடித்தனர்.

2-ம் நாள் கூட்டம்

இரண்டாம் நாள் பேரவை (6-தேதி) சென்னை ஸ்ரீ கே. பாலசுப்ரமணிய அய்யர் எம். எல். சி, அவர்கள் தலைமையில் நடந்தது. சென்னை வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

தலைவர் பேசுகையில் கூறியதாவது:

இன்று ஒரு புண்ணிய நாள். சோமவாரம் இத்தினத்தில் தான் குருஞான சம்பந்தருக்கு பூஜா மூர்த்தியான சொக்க லிங்கப்பெருமானர் அவர்கையகப்பட்டார். இதே சோமவாரத் தில்தான் தனக்குகந்த குருவை இறைவன் காட்ட அன்னவர் கண்டது. அக் குருதான் ஞானப் பிரகாச தேசிகர். ஆதீன மென்ருல் கடவுளது அருளைப் பெற்ற ஆசிரியர்களைக் கொண் டது எனப் பொருள் படும். அன்ஞர் உடல், பொருள் ஆவியை அர்ப்பணம் செய்து, ஆன்மகோடிகள் உய்ய வழிகாட்டுவர். குரு - சீடர்கள் ஒன்றுபட்டு உண்மை சிவ ஞானத்தைத் தேடும் புனிதத் தலமே ஸ்ரீமடம், வாலறிவனை அறிதலே லட்சி யம். சர்வக்ஞுன கடவுளின் உண்மை ஸ்வரூபத்தை மக்களனை வரும் பார்த்துப் பேரானந்த மடையச் செய்வது ஞானகுரு மார்களின் கடமை. இந்த அரிய ஞானத்தைச் சம்பாதிக்கத் துணை செய்வதுதான் தருமை போன்ற ஸ்ரீமடங்களின் இணையற்ற

2773

சேவையாகும் இம்மடங்கட்கு 2000 வருடங்கட்கு முன்னரே சான்ளுேர் தங்கள் செல்வங்களை தந்து அவைகளை சிவ ஞான ஒளியைப் பரப்பப் பயன்படும்படி செய்ய வேண்டும் என திட நம்பிக்கையுடன் நிரந்தர நன்கொடையாக உறுதி செய்து வைத்தார்கள். செவ்வனே நடந்து வருகின்றன.

ஆலய பரிபாலனம்

ஆலயங்களைப் பரிபாலிப்பதில் அதற்குரிய பொத்துக்களை அவைகளின் ஜீர்ணோத்தாரணத்திற்கே—பயன் படுத்துவது முறையும், நியாயமுமாகும். மணிவாசகர் பரிவாங்கத் தந்த பணத்தைப் பரமனுக்காகத் திருக்கோயிலமைத்தார் என்ருல், அதுவே ஆலய வழிபாட்டை ஏற்படுத்தி ஆன்மாக்கள் உய்யச் செய்த நற்காரியமகும். அதனுல் தான் சொக்கநாதனே நரியைப் பரியாக்கி, அவரது சிறைத்தண்டனையைப் போக்கினுர். பரஞ் சோதி முனிவர் "பண் சுமந்த பாடல்" என்ற சொற்ருடர் வெகு அழகாக அமைந்திருப்பதையும், திருவிளையாடற் புராணத்தில் பிட்டுக்கு மண் சுமந்த படலத்தில் ஏக நாயகன் எவ்வுயிர்கட்கும் தானே தானுய் விளங்குகிருன் என்றும், அன்பர் கட்கு எளிய வனென்றும், அவனை உணர்ந்தறிதலே வாழ்க்கையின் குறிக் கோளாகு மெனவும் குறிப்பிட்டார்.

வேதப் பொருள்

வேதப் பொருள் பற்றிப் பேசிய ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரி அவர்கள் (தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தலைவர்) வேதப்பொருள் பற்றிப் பேசுகையில் வேதத்தின் உட்பொருள் தெரியாது கண்வர் முதலியவர் பிரமிக்க மீனுட்சி யம்மையாகிய பராசக்தியின் உதவியால் விளக்கப்பட்டதெனவும், வேதம் என்பதே அவனை அறிதலெனவும் யாவரும் அறியாத ஒரு பொருளை உணரச் செய்வதென்றும் கூறினுர்:

ஸ்ரீ திருநள்ளாறு கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "பாட்டும் பரமனும்" பற்றி விரிவுரையாற்றினுர்கள்.

இவுர ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாலும் மாணுக்கர்களாலும் "மனோகரா" நாடகம் நடிக்கப்பெற்றது. —தினமணி. 9—9—54.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம்
பிர்மஸ்ரீ முத்து சோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(ஜய-ஸூ புரட்டாசி-மீ 1-உ முதல் 30-உ முடிய)
(17—9—54 முதல் 16—10—54 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதங்களும் மங்களகரமான பலன்தரும், பரணி 1, 4 பாதங்கள் சுபத்தையும் மற்ற இரண்டும் அசுபத்தையும் துக்கத்தையும் சத்துரு விருத்தியையும்தரும். கார்த்திகை முதல் பாதம் மிகுந்த கஷ்ட நஷ்டங்களையும் குடும்பத்தில் அனுகூலமில்லாத் தன்மையையும் தரும். சனி செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம்: கார்த்திகை ¾ ரோஹிணி, மிருகசீரிஷம் ½.

கார்த்திகை மூன்று பாதம் மிருகசீரிஷம் முதல் இரண்டு பாதங்கள் மிகுந்த கஷ்டபலனை பலவிதத்திலும் கொடுத்து துக்கத்தை உண்டுபண்ணும். தெய்வபலம் பிறக்கும், பெரியோர் சாபம்கிட்டும். சதா கவலையாகவே இருக்கும். ரோஹிணி நான்கு பாதங்களும் சுபாதிகளையும் நஷ்டத்தையும் விவசாய லாபத்தையும் தொழில் மேன்மையையும் தந்து சந்தோஷம் உண்டுபண்ணும். புதன் வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம்: மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.

திருவாதிரை நான்கு பாதங்களும் சந்தோஷபலனைத் தரும். வெகுநாளாக எதிர்பார்த்து நடவாத காரியங்கள் நடைபெறும், மேலோர் பெரியோர் அன்புகிட்டும், கடன் தீரும் வியாதிநீங்கும். மிருகசீரிஷம் பின்னறை இரண்டுபாதங்களும் புனர்பூசம் மூன்று

பாதங்களும் சகிக்கமுடியாத கஷ்டங்களில் மாட்டிக்கொண்டு தவிக்கச்செய்யும். எங்கு பார்த்தாலும் துக்கமயமான சமாச் சாரமே வரும். சனி செவ்வாய் வியாழன் அசுபம் தரும்.

4. கடகம்: புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்,

புனர்பூசம் நாலாம் பாதம் மிசிரமாய் நடக்கும் வரவு செலவு சமனுகும். பூசம் நான்கு பாதங்களும் சென்ற மாதம் போலவே இருப்பதோடு கிரிமினல் கேஸ் ஏற்பட்டு நஷ்டமுண் டாகும். அவமானம் ஏற்படும். குடும்பகஷ்டம் அதிகமாகும். ஆயில்யம் நான்கு பாதங்களும் சுபமாய் நடக்கும். பெரும் தனம் எதிர்பாராதபடி கிடைத்து கஷ்டம்நீங்கும். தெய்வ பலமும் பெரியோர் அன்பும் கிட்டும். இல்லறசுகம் விருத்தியாகும். புதன் வெள்ளி சுபம்தரும்.

5. சிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி ஒன்பது பாதங்களும் சுபபலனேயே தரும். தொழிலாளிகள், வியாபாரிகள் விவசாயிகள், ஏழைகள் எல்லோரும் நலனடைவார்கள். பிரபுக்கள் கஷ்டப்படுவார்கள். உலகில் ஈதிபாதைகள் அதிகமாகி மேற்படி ராசிக்காரர்களை மாத்திரம் அதிகமாக சிரமப்படுத்தாமல் சீராகபோய்விடும். புதன் சனி சுபமாகும்.

6. கன்னி: உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2. 3. பாதங்கள் கஷ்டபலனைத் தரும். தன் வர்க்க தோஷத்தால் பந்தம் ஏற்படும். விவசாயம் கெடும். கடன் தொல்லை ஏற்படும். ஹஸ்தம் 1, 2. பாதங்கள் வரவுக்கு மிஞ்சின செலவையும், குடும்பத் தொல்லைகளும், அதிக ஆயாசத்தையும் கவலையையும் தரும். 3, 4. பாதங்கள் சுபசந்தோஷம், இல்லற சுகம், உலகமேன்மை கீர்த்திபத்திரம் கிடைத்தல், ஆரோக் கியம், தெய்வானுகூல காரியங்கள், யஞ்ஞ பிரதிஷ்டாதி பலன்கள் முதலிய சுபங்களைத்தரும். சித்திரை முதல் இரண்டு பாதமும் கஷ்டத்திலிருந்து விடுதலைசெய்து சந்தோஷத்தை தரும். சத்துரு சரண் அடைவன். தெய்வபலம் கிட்டும். புதன் சனி சுபவாரமாகும்.

7. **துலாம்:** சித்திரை $\frac{1}{2}$, சுவாதி, விசாகம் $\frac{3}{4}$.

சித்திரை பின்னறை இருபாதங்களும் மிசிரமாய் நடக்கும். ஆனால், விவஹார ஜயமும், கடன் நீவர்த்தியும் ஆகும். தொழில் ஓங்கும். சுவாதி முதல் இரண்டு பாதங்களும் கவலையோடு ஓடும். பின் இரண்டு பாதங்களும் இடம் மாறல் செய்து லாபத்தையும் கீர்த்தியையும் தெய்வபலத்தையும் தரும். விசாகம் மூன்று பாதங்களும் கஷ்டத்தைத் தவிர வேறு ஒன்றும் கொடுப்பதற்கில்லை. தெய்வ பலத்தை கொண்டால் சுபம் ஏற்படலாம். புதன் வெள்ளி சுபவாரமாகும்.

8. **விருச்சிகம்:** விசாகம் $\frac{1}{4}$, அனுஷம், கேட்டை.

கேட்டை நான்கு பாதங்களும் சுப சந்தோஷத்தையும் இல்லற சுகபோகங்களையும் தொழில் மேன்மையையும் தரும். வியாதிநீங்கும், நஷ்டதனம் கிடைக்கும், விசாகம் 4-ம் பாதமும், அனுஷம் நான்கு பாதங்களும் வியாதி, பயம், கடன் தொல்லை, சத்துரு விருத்தி, அபஜயம், மனக்கவலை, நம்பினவன் மோசம் செய்தல் முதலிய துன்ப பலன்களைத்தரும். தெய்வபக்தி இருந்தால் சற்றுமாறும். சனி, செவ்வாய் சுபமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலம் நான்கு பாதங்களும் முன்மாதம்போலவே இருக்கும். மத்தியில் பத்து தினங்களில் சுபம் காட்டும். பூராடம் நான்கு பாதங்களும் நலனையே தந்தாலும் வீவசாயத்தில் ஈதிபாதைகளையும் நஷ்டத்தையும் காட்டும். மனம் நிம்மதி இராது. உத்திராடம் முதல் பாதமோவெனில் ஸதாமங்களமாயும், நித்யோத்சவமாயும் புண்ணிய தீர்த்தாடனம் முதலிய ஸத்கர்ம பலன்களோடும் ஓடும். தெய்வ பலமும் பூர்ணமாகும். புதன் வியாழன் சுபமாகும்.

10. **மகரம்:** உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்களும் திருவோணம் நான்கு பாதங்களும் சுப சந்தோஷத்தையே தரும். தூரத்திலிருந்து வரத்து பத்திரம் கிடைத்தல், உத்யோக லாபம், பெரியோர் அன்பு, தெய்வபலம், பிரகாசம் முதலிய சுபங்கள் ஏற்படச்

செய்யும். அவிட்டம் முதல் இரண்டு பாதங்கள் மிசிரமாய் நடக்கும். விவசாயிகளுக்கு தொல்லையைக்கொடுக்கும். தொழிலாளிகள், வியாபாரிகள் ஓங்குவார்கள். புதனும், சனியும் சுபமாகும்.

11, கும்பம்: அவிட்டம் ½ சதயம், பூரட்டாதி ¾.

கும்பராசிக்காரர்கள் எல்லோருமே ஒன்பது பாதக்காரர்களும் நலனடைவார்கள். மாணவர்கள் வித்யாபிவிருத்தியையும் காமிகள் சுகபோகத்தையும் வியாபாரிகள் வியாபார லாபத்தையும் உத்யோகஸ்தர்கள் மேல்பதவியையும் தொழிலாளிகள் அதிக வரும்படியையும் அடைவார்கள் சுபசந்தோஷமாகவே நடக்கும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம்: பூரட்டாதி ¼. உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி நாலாம் பாதத்துக்கு தனநஷ்டம் ஏற்படும் உத்திரட்டாதி நான்கு பாதங்களும் சஞ்சாரத்தில் சுபம் காட்டும். பெரியோர் அன்பு கிடைக்கும் ரேவதி முதல் பாதம் அதிக கஷ்டபலனைத்தரும் இரண்டு மூன்று நான்கு பாதங்கள் மனக்கவலையோடு மிசிரமாய் ஓடிக்கொண்டிக்கும் மாதக்கடைசி பத்து தினங்களில் பெரியோர் தரிசனமும் தெய்வ பலமும் தொழில் மேன்மையும் ஏற்படும். வியாழன், வெள்ளி சுப வாரமாகும்.

குறிப்பு: இம்மாதம் மனக்குறைவால் பயிர்களுக்கு வியாதி காட்டும். ஈதிபாதைகள் ஏற்படும். ஜனங்கள் ஆஸ்திக புத்தியோடும் கடவுளிடம் பூர்ண நம்பிக்கையோடும் நடந்து கொண்டால் மேல்கண்ட சிரமங்கள் நீங்கி சுபிக்ஷமடையும் தான்யங்கள் விலைவாசி இறங்கிக் காட்டும்.

178

தருமபுர ஆதீனம்

சென்னை சமயப்பிரசார நிலயத்தில்

தருமபுர ஆதீனம் சென்னை மடாலய தேவாலய சமயப் பிரசார நிலய வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில் 25—8—54 முதல் 1—9—54 முடிய உள்ள நாட்களில் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு நடந்த சொற்பொழிவுகள்:-

திவான்பகதூர் ஸ்ரீ R. V. கிருஷ்ணய்யர் B.A., M.L.C.I.E., அவர்கள் விழாவைத் தொடங்கிவைத்தார்கள். 28—8—54 சனிக்கிழமை ஸ்ரீ பித்துக்கொளி முருகதாஸ் அவர்கள் விநாயகரையும் முருகனையும் பற்றிய அருள்பாடல்களைப் பாடிப் பஜனை செய்து எல்லோரையும் பரவசப்படுத்தினார்கள். மற்றைய நாட்களில் தாம்பரம் பிரசங்காமிர்தம் திரு. பூ. சமரபுரி முதலியார் அவர்கள் விநாயகர் தோற்றம், தத்துவம், திருவிளையாடல், வழிபாடு என்று பகுத்து விளக்கமாகச் சொற்பொழிவாற்றினார்.

29, 30—8—54 இருநாளிலும் பச்சையப்பன் கல்லூரித் தத்துவப்பேராசிரியர், வித்வான், திரு. தேவசேனாபதி M. A. அவர்கள் வழிபாடு, தோத்திரங்கள் என்ற தலைப்புக்களில் பேசினார். குகஸ்ரீ பு. பா. ரசபதி அவர்கள் விநாயகரைப்பற்றி அரிய பெரிய உண்மைகளைப் பலரும் மகிழச் சொற்பொழிவாற்றினார்கள். அந்நாட்களில் விரிவுரைக்கு முன்னும் பின்னும் திருமுறை ஆசிரியர், சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்களாலும், திருமுறைப் பயிற்சி வகுப்பு மாணவ மாணவிகளாலும் திருமுறை ஓதப்பெற்றது. பிரசாரநிலய விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் தொடக்கவுரையும் நன்றியுரையும் நிகழ்த்தினார்கள்.

வித்துவான் ஸ்ரீமத். மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 1, 8, 22—8—54 ஆகிய மூன்று நாட்களிலும் திருநாவுக்கரசு நாயனார் புராணமும், திருநீலநக்க நாயனார் புராணமும் பற்றி அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். 15, 21—8—54 ஆகிய நாட்களில் ஸ்ரீரங்கம் பாகவதர் பிரம்மஸ்ரீ சடகோபாசாரியார் அவர்கள் அப்பூதியடிகள் நாயனார் புராணத்தை மிக்க ரசமான முறையில் பிரசங்கித்தார்.

Sri Panchanathiswaraswamy Devasthanam,

Thiruavaiyaru, Tanjore Taluk and Dt.,

I had the good fortune to visit this temple today and pay homiage at the several shrines. I also heard two girls sing Thevaram at the Amman sannadhi. I understand that they had been taught Thevaram in a school run by the Adhinam. Their singing was of a high order. The premises are kept tidy. The Headclerk (Sri Ganesa Iyer) was very helpful.

(Sd.) C. A. Ramakrishnan, I. C. S.,
Member, Dt. Rev. Admn. Enquiry Committee,
Board of Revenue, Madras, 20—8—54.

The temple is grand and we have not seen a modern temple built in such a grand scale. All credit to the builder.

(Sd.) P. C. Roy,
Dalmia Cements Ltd., Dalmiapuram,
20—8—54.

Much impressed by my visit. The temple is neat and the poojas celebrated well.

(Sd.) T. M. Narayanaswami, M. L. C.
Ex, President,
H. R. E. Boord, Madras, 20—8—54.

(True extract from the Visitors' Book.)

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—9—1954.